REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



## சிங்களக் குடும்பங்களின் வருகை சிங்களக் குடியேற்றத்தின் ஆரம்பமா?



## வாறவையெல்லாம் வாங்கோ!

# சிங்களக் குடும்பங்களின் வருகை சிங்களக் குடியேற்றத்தின் ஆரம்பமா?

'1980ஆம் ஆண்டுக்கு முன்னா் யாழ்ப்பாணத்தில் வசித்தோம். மீண்டும் இங்கு மீளக் குடியமர வந்துள்ளோம்' - என்று கூறி 180 சிங்களக் குடும்பங்கள் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்துள்ளன.

''எமக்குச் சொந்தக்காணியில்லை, சொந்தவீடு இல்லை. வாடகை வீடுகளில் தான் முன்னா் வசித்தோம். ஆகவே மீண்டும் இங்கு வாழ சம்பந்தப்பட்ட தரப்புக்கள் உதவி செய்ய வேண்டும்'' என்று அவா்கள் கோருகின்றனா்.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரம் மூள முன்பு யாழ்ப்பாணத்தில் கணிசமான சிங்கள மக்கள் வாழ்ந்தனா் என்பது உண்மைதான்.

பேக்கறிகளிலும், சில திணைக்களங்களிலும் சிங்களப் பாடசாலைகளிலும் கணிசமானவா்கள் வேலை செய்தாா்கள். வாடகை வீடுகளில் வசித்தாா்கள். சிலா் திணைக்களங்களின் விடுதிகளிலும் வசித்தாா்கள். ஆனால் நிரந்தரமான வீடுகள் வாங்கி வசிக்கவில்லை. தொழில்ரீதியாக இங்கு வந்து வசித்த போது சிலா் தமிழா்களைத் திருமணம் செய்து திருமண வழியாக வந்த வீடுகளில் வசித்தாா்கள்.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்னா் இருந்த இடம் தெரியாது தெற்கே சென்றாா்கள் அவா்கள்.

இப்போது வந்துள்ளவா்கள் அவா்களின் வழித்தோன்றல்களா? அல்லது அவா்கள் இருந்ததைக் காட்டி வலுக்கட்டாயமாகக் குடியேற வந்தவா்களா? என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

அவா்களின் வழித் தோன்றலாக இவா்கள் இருக்க முடியாது என்று சில தரப்புக்கள் கூறுகின்றன.

முன்னா் இங்கு வந்தவா்களில் பெரும் பாலானவா்கள் மாத்தறை, காலி போன்ற பிரதேசங்களைச் சோ்ந்தவா்கள். அவா்களில் பெரும் பாலானவா்கள் பேக்கறிகளில் பணியாற்றினா். சிலா் ரயில்வே திணைக்களத்தில் பணியாற்றினா். மற்றும் சிலா் யாழ்.நாக விகாரையை ஒட்டி அமைந்திருந்த சிங்களப் பாடசாலையில் ஆசிரியா்களாக இருந்தனா். மற்றும் சிலா் காங்கேசன்துறை விகாரையை ஒட்டி அமைந்திருந்த சிங்களப் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றினா். அவா்கள் தொழில் ரீதியாக இங்கு வந்து வாடகை வீடுகளிலும் விகாரை விடுதிகளிலும் திணைக்களங்களின் விடுதிகளிலும் வசித்து வந்தாா்கள்.

அவா்களுக்குச் சொந்தக் காணியோ, சொந்த வீடோ இருக்கவில்லை. வாடகை வீடுகளில் இருந்து தமது தொழில்களை மேற்கொண்டதுடன் தமிழ் மக்களுடன் அன்புடனும் பரஸ்பர நட்புடனும் வாழ்ந்தாா்கள்.

இப்போது யாழ்ப்பாணத்தில் குடியேற வந்துள்ளவா்கள் அநுராதபுரம், மிகுந்தலையைச் சோ்ந்தவா்கள். அத்துடன் யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்டவா்கள் என அடையாள அட்டையையும் வைத்திருக்கிறாா்கள்.

அடையாள அட்டைகளைப் பாா்த்தால் அண்மைக்காலத்தில் எடுக்கப்பட்டவை போன்றே இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இவா்களிடம் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஆவணங்கள் இருப்பதாகக் கூறுகின்றனா். அந்த ஆவணங்கள் உண்மையானவையா? பொய்யானவையா? என்ற விடயம் அவற்றை அரச அதிகாரிகள் ஆராய்ந்த பின்பே வெளிச்சத்துக்கு வரும்..

உண்மையில் அவா்களின் ஆவணங்கள் நிரூபிக்கப்படா விட்டால், அவா்களின் முயற்சியை சிங்களக் குடியேற்ற மாகவே கருத வேண்டியிருக்கும் எனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினா் மாவை சேனாதிராஜா கூறியிருந்தாா்.

'முப்பது வருடங்களின் பின்னா் மீளக்குடியமரப் போகிறோம் எனக் கூறிக் கொண்டு அவசர அவசரமாக யாழ்ப்பாணம் வந்துள்ள சிங்களக் குடும்பங்களை உடனடியாக இங்கு குடியேற்றும் சாத்தியம் இல்லை என்று யாழ். அரச அதிபா் திருமதி இமெல்டா சுகுமாா் தெரிவித்துள்ளாா்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் வடக்கின் அபிவிருத்தி மற்றும் மீள்குடியமா்வு விவகாரங்களுக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான பசில் ராஜபக்ஷவுக்கு அரச அதிபா் சமா்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவித்துள்ளாா்.

குடியேறுவதற்கான வசதிகள் இல்லாத நிலையில் சிங்களக் குடும்பங்கள் தொடா்ந்தும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பது ஆரோக்கியமானதல்ல என்றும் அவா் வெட்டொன்று துண்டு இரண்டெனக் கூறிவிட்டாா்.

இங்கு வந்துள்ளவா்களில் சிலா் இங்கு வாழ்ந்துள்ளனா் என்பது உண்மைதான். ஆனால் அவா்களுக்குச் சொந்தக் காணிகளோ சொந்த வீடுகளோ இங்கிருக்கவில்லை. இந்நிலையில் தம்மை மீளக்குடியமா்த்துமாறு அவா்கள் கூறுகின்றாா்கள், இவா்களுக்கு உதவ அரச சட்ட திட்டங்கள் எவையுமில்லை. எனவே இவா்களின் மீள்குடியமா்வு உடனடியாகச் சாத்தியமில்லை என்று அரச அதிபா் பசில் ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் கூறியிருக்கிறாா்.

அரசின் மீள் குடியமா்வு அமைச்சா் மில்றோய் பொ்னாண்டோ, இந்த மக்கள் அமைச்சுக்கு எந்த வித அறிவிப்பும் விடுக்காமல் வந்துள்ளாா்கள். மீள்குடியமா்வுக்கு எமது அனுமதி வழங்கப் படவில்லை என்கிறாா். மீண்டும் சொந்த இடங்களுக்குச் செல்லுங்கள் என்று அந்த மக்களை அவா் கேட்டுள்ளாா்.

'சம்பந்தப்பட்ட குடும்பங்களின் பிரதிநிதிகள் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சா் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடினா்.

'உடனடியாக எதுவும் செய்யமுடியாது. ஆவணங்களை ஆராய மூன்று மாத காலம் தேவை' என அமைச்சா் அவா்களிடம் கூறியுள்ளாா்.

இந்நிலையில் - 'எமது பாரம்பரிய பூமியான யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமர ஏற்பாடு செய்யவேண்டும். அதுவரை இங்கிருந்து செல்லமாட்டோம். அமைதியான போராட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்துவோம்' என்று அந்த மக்கள் கூறுகின்றனா்.

அவா்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பிரதான தேசிய கட்சிகளில் ஒன்றான ஐ.தே.கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த மக்களை யாழ்ப்பாணத்தில் குடியேற்ற வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும் - என்று அக்கட்சியின் செயலாளா் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளாா்.

மீள்குடியேற்றம் என்ற போா்வையில் இடம்பெறப் போகும் சிங்களக் குடியேற்றம் இனங்களுக்கிடையிலான நல்லுறவைப் பாதிக்கப்போகிறது என்று எச்சரிக்கின்றனா் புத்திஜீவிகள்.

இன்றுள்ள நிலையில் இது மட்டுமல்ல, எதுவும் நடக்கலாம் என்கின்றனா் யாழ்ப்பாண மக்கள்.



# அபலைகளின் கண்ணீரை ஆணைக்குழு துடைக்குமா?

பாரவன்

அது நிற்க -

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமா்வுகள் மட்டக்களப்பிலும் நடந்துள்ளன.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தனது அமா்வுகளை நடத்திய இந்த ஆணைக்குழு மட்டக்களப்பில் நடத்தியது.

அங்கு சாட்சியம் அளித்தவா்களில் பெரும்பாலானவா்கள் வன்னியில் இறுதிக் கட்டத்தில் படையினரிடம் சரண் அடைய வந்தபோது படையினரால் கூட்டிச் செல்லப்பட்ட தமது கணவன்மாரைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு அழுது புலம்பி மன்றாட்டமாகக் கேட்டனா்.

வட்டுவாகலில் இருந்து வவுனியா நோக்கி வரும்போது, தனது கணவனின் கையில் இருந்த காயத்துக்கு மருந்து கட்டப் போவதாகக் கூறி படையினா் அழைத்துச் சென்றதாக விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளராக இருந்த இளந்திரையனின் மனைவி வனிதா ஆணைக்குழுவிடம் தெரிவித்தாா்.

வட்டுவாகலில் இருந்து வரும்போது தனது கணவனை இராணுவத்தினா் விசாரணைக்குக் கூட்டிச் சென்றனா் என மட்டக்களப்பு மாவட்ட இராணுவப் புலனாய்வுத்துறைப் பிரிவுப் பொறுப்பாளராக இருந்த பிரபாவின் மனைவியான பொபித்தா ஆணைக்குழு விடம் தெரிவித்தாா்.

விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவா்கள் மீது நடவடிக்கை எடுக்கப் போவதாக அரசு அறிவித்துள்ளது. சிரேஷ்ட தலைவா்களான எமது கணவன்மாரை விடுவியுங்கள் அல்லது அவா்களை சட்டத்தின் முன் நிறுத்துங்கள் என அவா்கள் ஆணைக்குழுவிடம் கோரினா். எமது கணவா்மாரைத் நாங்கள் பாா்க்க ஏற்பாடு செய்யுங்கள் என்றும் அவா்கள் கோரினா்.

அவா்களைக் காணாது உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள எங்களுக்கும் எமது பிள்ளைகளுக்கும் உதவுங்கள் என்று அவா்கள் மன்றாட்டமாகக் கோரினா்.

கற்ற பாடங்களில் இருந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் அமைக்கப்பட்ட இந்த ஆணைக்குழு முன்பாகச் சமா்ப்பிக்கப்படும் சாட்சியங்கள் ஆணைக்குழுவுக்குப் புதிய வேலையைக் கொடுத்துள்ளதாகக் கருத வேண்டியுள்ளது.

தனது இலக்கை ஆணைக்குழு பூா்த்தி செய்ய முன்னா் இந்த அபலைகளின் கண்ணீரைத் துடைக்குமா? இதுவே இன்று எழும் கேள்வியாகும்.

# வாறவையெல்லாம் வாங்கோ!

பேக்கரி ஒன்றின் முன்னால் பொலிஸ் பாதுகாப்புடன் ஓட்டோவில் வந்திறங்குகிறார் அந்த நபர். கண்களில் ஒருவித அலட்சியம். '20 இறாத்தல் பாண் தாங்க!' சொல்லிக்கொண்டே பொக்கற்றில் இருந்து பணத்தை எடுத்துக் கொடுக்கிறார். 20 இறாத்தல் பாணுக்கு அவர் சொல்லியிருந்தாலும் கொடுத்த பணம் என்னவோ 10 இறாத்தலுக்குத்தான். ஆனாலும் பேக்கரிக்காரர் என்ன செய்ய முடியும்? வந்தவருடன் மல்லுக்கட்ட முடியாது. தவறிப்போய் அவ்வாறு செய்தால் சிலவேளைகளில் வேண்டத்தகாத விளைவுகளையும் சந்திக்கவேண்டியிருக்கும். ஆகவே அடங்கிப் போவதுதான் புத்திசாலித்தனமென்று பேக்கரிக்காரர் 20 இறாத்தல் பாணைக் கொடுத்து விட்டு, 10 இறாத்தலுக்குரிய பணத்தை வாங்கிக் கொண்டார். பாணோடும் வெற்றிப் புன்னகையோடும் ஓட்டோவில் ஏறிப் பயணிக்கிறார் அந்த நபர்.

இந்தச் சம்பவத்தை வாசிக்கும் போது தமிழ் சினிமாப் படங்களில் வருகின்ற ரௌடிக்கும்பலொன்று அப்பாவிகளை மிரட்டி மாமூல் வாங்குகின்ற காட்சியை விவரிக்கின்றோமோ என நீங்கள் எண்ணக்கூடும். இது யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவமொன்று. அப்படியானால் ஓட்டோவில் வந்த அந்த நபர் யார்?

வேறு யாருமல்ல, சாட்சாத் மீள்க்குடியேறுவதற்காக தென்னிலங்கையிலிருந்து வந்து யாழ்.ரயில் நிலையப்பகுதியில் தங்கியுள்ள சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களில் ஒருவரே அவர். அவருக்குத்தான் - ஒரு மீள்குடியேறிக்குத்தான் - பொலிஸ் பாதுகாப்புடன் பொருள்களை வாங்கச் செல்லும் வசதி. அந்த வசதியை அவர்களும் தேவையான அளவுக்கு பாவித்து வருகின்றனர். சற்று அதட்டலான முறைகளில் கடைகளில் கொஞ்சப் பணத்தைக் கொடுத்து விட்டு, நிறையப் பொருள்களை இந்தச் சிங்கள மக்கள் வாங்கிச் செல்வதாக கடைக்காரர்கள் பலரும் விசனப்படுகின்றனர்.

கடந்த ஒருவாரமாக யாழ்ப்பாணத்தில் பரபரப்பை உண்டாக்கியுள்ள விடயம் மீள்க்குடியமர வந்துள்ள சிங்கள மக்கள்தான். சிறுகச் சிறுக - சந்தடியில்லாமல் - யாழ்.ரயில் நிலையத்துக்கு தென்னிலங்கையிலிருந்து பெருமளவான சிங்களக் குடும்பங்கள் - ஏறக்குறைய 180 குடும்பங்கள் - வந்திறங்கிய சேதி கடந்த வாரம்தான் பகிரங்கப்படுத்தப்பட்டது. இயல்பு நிலை தோன்றிவிட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர் வாரந்தோறும் பெருமளவிலான சிங்களக் குடும்பங்கள் சுற்றுலா என்ற பெயரில் யாழ்ப்பாணத்துக்கு வருவதும், போவதுமாக இருப்பதனால் ரயில் நிலையத்தில் ஒருவித உள்நோக்கத்தோடு நிலைகொள்ளத்தொடங்கிய சிங்களக்குடும்பங்கள் பற்றி யாருமே பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. 200 வரையிலான குடும்பங்கள் வந்து சேர்ந்ததும்தான் விடயம் வெளிச்சத்துக்கு வந்தது. அத்தோடு முன்னர் வாடகை வீடுகளில் தங்கியிருந்த எங்களை மீள்குடியமர்த்த வேண்டும். 30 வருடங்களாக நாங்கள் தென்னிலங்கையில் இருந்தாலும் வேற்றுமனிதர்கள் போலவே பார்க்கப்பட்டோம் என்று இந்த மக்கள் கோரிக்கையும் விடுத்தார்கள்.

தாம் வாழ்ந்த மண்ணில் இருந்து யுத்தம் காரணமாக இருப்பிடத்தை இழந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்த வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்துகளுக்கும் இடமில்லைதான். அதேவேளை யாழ்ப்பாணத்தில் யுத்தம் தீவிரம் பெறுவதற்கு முன்னர் பல சிங்களக்குடும்பங்கள் தமிழ் மக்களுடன் இணைந்து வாழ்ந்ததையும் மறுக்க முடியாது. குடாநாட்டின் பல பாகங்களிலும் புகழ் பெற்ற பேக்கரிகள் - குறிப்பாக சிற்றி பேக்கரி, றோயல் பேக்கரி முதலானவை - சிங்கள மக்களால் நடத்தப்பட்ட கதைகளை இன்றும் வயது முதிர்ந்தவர்கள் சொல்வதுண்டு. அவ்வாறு சொல்லும் போது அந்தப் பாணின் ருசியில் அவர்கள் வாயில் இன்றைக்கும் நீரூறும். அந்தளவுக்கு சிங்களப்பேக்கரிகளின் பாணுக்கு எம்மவரிடையே பெரும் மதிப்பு இருந்தது. ஆனாலும் அவர்களில் - சிங்கள மக்களில் - ஒரு சிலரைத் தவிர, வேறு யாரும் ஒருபோதுமே யாழ்ப்பாணத்தில் சொந்தமாகக் காணிகளையோ, வீடுகளையோ வைத்திருக்கவில்லை. யுத்தம் தமிழ்ப் பகுதிகளில் மையம் கொள்ளத்தொடங்கிய நாட்களில் இந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு சென்று விட்டார்கள். குறிப்பாக அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற இடங்களில் புதிய தொழில் முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்தி, அந்தச் சூழலுடன் கலந்து விட்டார்கள்.

இப்போது திடுதிப்பென யாழ்ப்பாணத்தில் - ரயில் நிலையத்தில் - முகாமிட்டு எங்களை மீள்குடியேற்றுங்கள் என்று உரத்த குரலில் கோரிவருகின்றனர். வந்தவர்கள் சும்மாயிருந்தாலும் பரவாயில்லை. சில அடாத்தான செயற்பாடுகளிலும் - மேலே சொல்லப்பட்ட பேக்கரியில் பாண் வாங்கிய சம்பவங்கள் போல - இறங்கவும் செய்திருப்பது பலவிதமான சந்தேகங்களை எல்லோரிடத்திலும் ஏற்படுத்தியிருக்கிறது.

முதலில் இவர்கள் யாழ்ப்பாணத்துக்கு சொல்லாமல் கொள்ளாமல் நைசாக வந்து குவிந்துள்ள விடயமே ஏதோ ஒரு உள்நோக்கத்துடன்தான் என்பதைச் சொல்லிநிற்கிறது.

சாம்பிளுக்கு சில கேள்விகள்.

* உண்மையாகவே வேறுவழியின்றி - யாருடைய தூண்டுதலுமின்றி - மீள்குடியமர இந்த மக்கள் வந்திருந்தால் ஏன் யாருக்கும் உரிய முறையில் அறிவிக்காமல், எவருடைய அனுமதியையும் பெறாமல் சந்தடியின்றி வரவேண்டும்?

* சரி, அவ்வாறு வந்தவர்களுக்கு பாதுகாப்புத் தரப்பு எதற்காக விழுந்தடித்துக் கொண்டு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்?

* படைவீரர் ஒருவர், அனுராதபுரம் வைத்தியசாலை அம்புலன்ஸ் சாரதி போன்ற அரச பணியாளர்கள் நீண்ட கால விடுமுறையை எடுத்துக் கொண்டு வந்துள்ளார்கள். சாதாரணமாக கடும் சுகயீனம் என்றாலே அரச உத்தியோகத்தர்கள் லீவு எடுப்பதற்கு அல்லாடிக் கொண்டிருக்கையில், இவர்களுக்கு காலவரையற்ற விடுமுறை கிடைத்த மர்மம் என்ன?

* மொத்தமாக 6000 சிங்களமக்கள் வரவுள்ளனர்



என்று இங்கு வந்துள்ள சிங்களமக்களின் சார்பில் கருத்து வெளியிடுகின்ற ஏ.சந்திரசிறி என்பவர் தெரிவித்துள்ளார். இவ்வளவு தொகை மக்கள் வரவுள்ள விடயத்தை துல்லியமாக ஒரு மீள்குடியேறியால் எப்படிச் சொல்லமுடிகின்றது?

* 80களுக்கு முன்னால் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற ஒட்டுமொத்தச் சிங்களக் குடும்பங்களும் மீள்குடியேற வேண்டும் என்ற விருப்பம் திடீரென - ஒரே நேரத்தில் - மனதில் தோன்றிய அதிசயத்தின் பின்னணி என்ன?

* விரைவில் மேலிடத்தில் இருந்து எங்களுக்கு சாதகமான பதில் விரைவில் வரும் என்று நம்பிக்கையோடு இவர்கள் சொல்வதன் பின்னணி என்ன? அந்த மேலிடம் எது?

* 30 வருடங்களுக்கு முன்னர் சென்றுவிட்டு, இப்போது திரும்ப வந்தவர்கள் எல்லோரினதும் அடையாள அட்டைகள் புத்தம் புதிதாக - ஒரு மாதத்துக்கு முன்னரே பெறப்பட்ட திகதியுடன் - மினுங்கிக் கொண்டிருப்பதன் மாயமென்னவோ?

* தமக்கு எவ்வித அறிவித்தலும் தராமலேயே இந்த மக்கள் வந்துள்ளனர் என்று சில பெரிய கைகள் சொல்கின்ற போதும், அந்த மக்களுக்கான சகல வசதிகளையும் செய்து கொடுத்து, அவர்கள் இங்கே தொடர்ந்து தங்குவதற்கு வழிவகைகளை அந்தப் பெரிய கைகள் ஏன் செய்யமுனைகின்றன?

இத்தகைய கேள்விகள் தவிர, தாங்கள் கொழும்புத்துறை, மணியந்தோட்டம் பகுதியிலேயே முன்னர் வாடகைக்கு இருந்தனர் என்றும் அங்கேயே தாம் மீளக்குடியமர்த்தப்படவேண்டும் என்றும் இன்னொரு குண்டையும் இந்தச் சிங்கள மக்கள் தூக்கிப்போட்டிருக்கிறார்கள். ஆனால் மணி யந்தோட்டம் பகுதியின் - நிலத்தின் மைந்தர்கள் - சொந்தவீடு, வளவு உள்ள தமிழ் மக்கள் அப்பகுதியில் மீள்குடியேற்றப்படாமல் இன்னமும் அகதிகளாகவே அலைகின்றனர்.

சிலவேளைகளில் அவர்களின் மீள்குடியேற்றம் தாமதப்படுத்தப்பட்டது இவ்வாறு வந்துள்ள சிங்கள மக்களைக்குடியமர்த்த வசதியாகத்தானோ? என்ற வினா இவ்விடத்தில் எழுவதைத் தவிர்க்கமுடியவில்லை. கிட்டத்தட்ட 2 தசாப்தங்களுக்கும் மேலாக தமது சொந்த மண்ணில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட வலி.வடக்கு மக்களின் மீள்குடியேற்றமே திரிசங்குசொர்க்கமாக, இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கையில், மணியந்தோட்டப் பகுதியில் வாடகைக்கிருந்த வீடுகளில் மீளக்குடியமர்த்துமாறு வந்துள்ள சிங்கள மக்களை நினைக்கையில் அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

இதேதருணத்தில் யாழ்ப்பாணத்தில் சொந்தவீடு, வியாபாரம் என ஓஹோவென்று வாழ்ந்து, ஒரே இரவில் சொப்பிங் பையோடு, பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் இன்னமும் முழுமையாக மீள்குடியேறவில்லை. ஏனெனில் அவர்கள் இந்த 20 வருடங்களுக்குள் தாம் தற்காலிகமாகத் தங்கியிருந்த இடங்களில் தமது புதிய இருப்பியலை அதற்கேற்ற வகையில் தகவமைத்து விட்டார்கள். இனி அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் வாழ, அதற்கேற்றபடி தம்மை மாற்றிக்கொள்ள, முன்னரைப் போல தமது வியாபாரத்தை பரவலாக்க, நீண்ட காலம் பிடிக்கும். அதை விட தற்காலிகமாக தங்கியிருக்கும் இடத்தில் வாழ்வதே பரவாயில்லை என்ற எண்ணத்திலேயே இன்னமும் பல முஸ்லிம் மக்கள் யாழ். வரப் பின்னடிக்கின்றனர். (இன்னும் சிலருக்கு யாழ்ப்பாணம் பற்றிய பழைய சந்தேகங்கள் முற்றாக நீங்காத காரணத்தாலும் யாழ்ப்பாணம் செல்லத்தயங்குகின்றனர்). இந்த நிலையில் எந்தவித இருப்பிட உரிமமும் இல்லாமல், 30 வருடங்களுக்கு முன்னர் ஆண்டி பின் பக்கமாகத் தட்டப் பறக்கின்ற சாம்பல் போல போரின் எந்தவிதமான பாதிப்புகளையும் எதிர்கொள்ளாமல் தப்பி ஓடியவர்கள் மீளவும் தமது வாடகை வீடுகளில் குடியமர்த்துமாறு கோருவது எந்தவகையில் நியாயம் என்று தெரியவில்லை.

ஆனாலும் அவர்கள் மீள்குடியமர்வது ஏறக்குறைய நிச்சயமாகிவிட்ட விடயம் என்றே தோன்றுகின்றது. அவர்கள் குடியேறியவுடன் வேறு இடங்களில் இருந்தும் இவ்வாறு கூறிக் கொண்டு இன்னும் பலர் வரக்கூடும். அவ்வாறு வருவோரெல்லாம் வருக. காவல் இல்லாத எங்கள் வீட்டு வாசல்கள் திறந்தே இருக்கின்றன. வந்து எங்கள் தலைகளிலும் நீங்கள் முன்னர் வாடகைக்கு இருந்ததாகச் சொல்லி குடியேறலாம். கேட்பதற்குத் தான் நாதியில்லையே.

குறுக்காலபோவான்

இவற்றை எல்லாம் பார்த்து மனம் வெறுத்த நண்பர் ஒருவர் சொன்ன வார்த்தைகளுடன் இந்தக் கட்டுரையை முடிக்கலாம்.

அவர் சொன்னது இதுதான் -

பேசாமல் இந்த றிக்ஸைப் பாவிச்சு முந்தி நாங்கள் வாடகைக்கு இருந்தனாங்கள் எண்டு சொல்லி சந்திர மண்டலத்தில எங்களை மீளக்குடியேற்றச் சொல்லமோ?

மீள்குடியேற்றமே நீ வாழி!

# வன்னி ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள் எப்போது வழங்கப்படும்?

வன்னிப் பகுதியில் படிப்பிக்கும் ஆசிரியர்களின் கதைகள் மிகச் சோகமானவை. முதலில் இந்த ஆசிரியர்களை மூன்று வகைகளுக்குள் அடக்கலாம்.

1. வன்னியில் மீளக்குடியேறி, அங்கிருந்துகொண்டே கற்பிக்கும் ஆசிரியர்கள்.

2. வன்னிக்கு வெளியே இருந்து - யாழ்ப்பாணத்திலிருந்தும் வவுனியாவிலிருந்தும் வன்னிக்குச் சென்று கற்பிக்கும் ஆசிரியர்கள்.

3. தொண்டர் ஆசிரியர்கள்.

முதலில் நாம் முதல் இரண்டு வகை ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நோக்கலாம். இதில் முதல்வகை ஆசிரியர்கள் வன்னியில் மீளக்குடியேறியவர்கள்; ஆனால், வீடில்லாதவர்கள். இவர்களுக்கு வீடமைப்பிலும் வாய்ப்புகள் இல்லை எனச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால், கதவில்லாத தறப்பாள் குடிசைகளை அப்படியே விட்டுவிட்டே பாடசாலைக்குப் போகிறார்கள். வசதியற்ற நிலையில் இருக்கும் வகுப்புகளில் பாடங்களை நடத்த முடியாத நிலைமை இருக்கின்றது. ஆனாலும், அடுத்த நாள் வகுப்புக்குத் தயார்படுத்தல்களைச் செய்யவேண்டும்.

இவ்வளவுக்கும் இவர்களுடைய சம்பள நிலுவைகள் இன்னும் வழங்கப்படாமலே இருக்கின்றன. ஆனால், கடமையை ஒழுங்காகச் செய்யவேண்டும்; பிள்ளைகளின் பெறுபேறுகள் சிறப்பாக இருக்கவேண்டும்; விடுமுறை, இடமாற்றம் போன்றவற்றில் சலுகைகளுக்கு இடமில்லை என்ற கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் வலயக் கல்விப் பணிமனைகளால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அடுத்து, இரண்டாவது வகை ஆசிரியர்களின் நிலைமையைப் பார்த்தால் யாழ்ப்பாணத்திலிருந்தும் வவுனியாவிலிருந்தும் வந்து செல்கிறார்கள். தினமும் 200 கிலோமீற்றருக்கு மேல் பயணம் செய்கிறார்கள். தினமும் 200 ரூபாவுக்கு மேல் பஸ்ஸுக்காகச் செலவிடுகிறார்கள். தினமும் பயணத்துக்காக 4-5 மணித்தியாலங்களைச் செலவிடுகிறார்கள். அதிகாலை 4 மணிக்கு எழுந்து இரவு 10 மணிக்குப் பின்னே தூங்கப்போகிறார்கள். தினமும் இரண்டுக்கு மேற்பட்ட பேருந்துகளில் ஏறி இறங்குகிறார்கள்.

இவர்களுக்கும் விடுமுறை, இடமாற்றங்களில் சலுகைகள் கிடையாது. போக்குவரத்துக்கான சிறப்புக் கொடுப்பனவுகள் கிடையாது. தங்குமிட வசதி, விடுதிகள் எதுவும் கிடையாது. ஆனால், பாடசாலைகளின் தரம் வீழ்ச்சியடையாமல் கற்பிக்க வேண்டும்.

எங்கிருந்து வந்தாலென்ன? எப்படி வந்தாலென்ன? ஆனால், கற்பித்தல் நடக்கவேண்டும். அதுவும் சிறப்பாக நடக்க வேண்டும். பெறுபேறுகள் தரமாக அமையவேண்டும்.

அதற்கான அடிப்படைகளான பாடசாலைக்கான வளங்கள், வசதிகள், ஆசிரியர் உளவியல், ஆசிரியர் அதிகாரிகள் சிந்திப்பதாக இல்லை; அக்கறைப்படுவதாகவும் இல்லை.

குறைந்த பட்சம் ஆசியர்களுக்கு வழங்கவேண்டிய சம்பள நிலுவைகளைக்கூட வழங்கவேண்டும் என இந்த அதிகாரிகள் சிந்திப்பதாக இல்லை.




மூன்றாவது வகையினர் தொண்டர் ஆசிரியர்கள். இவர்களின் கதையும் நிலையும் மிகமிகச் சோகமானது. முன்னர் இவர்களுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பிற அமைப்புகளோ தனியார்களோ சிறு உதவிகளையேனும் செய்யக்கூடியதாக இருந்தது.

இப்போதோ எந்த உதவியும் இல்லாமல், நிரந்தர நியமனம் கிடைக்குமோ என்று தெரியாத நிலையில் கற்பித்தலில் ஈடுபடுகிறார்கள். கடந்த காலங்களில் தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டபோதும் வன்னிப்பகுதியிலிருந்தே தொண்டர் ஆசிரியர்களுக்கு அந்த வாய்ப்புகள் தவறிப்போயின.

இந்த நிலையில், தொடர்ந்தும் மிகச் சிரமப்பட்டு, நீண்ட தூரங்கள் பயணித்தே இவர்கள் கற்பித்து வருகின்றனர். இவர்களுடைய நியமனங்கள் குறித்து பல்வேறுவகையான ஊகங்கள் இருக்கின்றனவே தவிர, நிலையான உறுதியான பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

ஆனால், கிளிநொச்சியில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது தொண்டர் ஆசிரியர் நியமனம் பற்றிப்பேசப்பட்டது என்பது மட்டும்தான் ஒரு கவனத்திற்குரிய செய்தி. இந்தச் செய்திதான் தொண்டர் ஆசிரியர்களுக்கு இருக்கும் ஒரு சிறு நம்பிக்கையும் கூட. மற்றப்படி இவர்களின் கதையும் நிலையும் படுசோகமே!

சரி, இந்த மூன்று வகைபாடுள்ள ஆசிரியர்களின் சில பொதுப்பிரச்சினைகளின் மத்தியில் இருக்கும் ஒரு முக்கிய விவகாரம், சம்பள நிலுவைகள் சம்பந்தப்பட்டதே.

வன்னியில் நடைபெற்ற போரின் காரணமாக கல்விப் பணிமனைகளும் இடம்பெயரவேண்டியிருந்தன. இதனால் ஆசிரியர்களுக்கான சம்பளத்தை வழங்குவதிலேயே பல பிரச்சினைகள் உருவாகியிருந்தன. அந்தச் சூழலிலும் அப்போது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக இருந்த ப.அரியரத்தினம் ஆசிரியர்களின் நிலைமையைக் கருத்தில்கொண்டு, வன்னியிலிருந்த ஆசிரியர்களுக்கான சம்பளத்தையும்,

**- ஜோசவ் தயாளன் -**

சம்பள முற்பணத்தையும் வழங்கியிருந்தார்.

பின்னர் நிலைமைகள் மோசமடைந்ததையடுத்து, எதுவும் செய்யமுடியாத ஒரு கட்டம் உருவாகியது. இதனையடுத்து மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் சென்றபோது ஆசிரியர்களும் அகதி முகாம்களில் இருந்துகொண்டே முகாம் பாடசாலைகளில் கற்பித்தலில் ஈடுபட்டனர்.

அப்போது, அவரவர் இருந்த வலயங்கள் ஆசிரியர்களுக்கான சம்பளத்தை வழங்கிவந்தன. இதற்கான ஏற்பாடுகளை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களின் பணிமனைகள் செய்திருந்தன.

ஆனால், ஆசிரியர்களின் முழுமையான சம்பளப் பணம் வழங்கப்படவில்லை. அத்துடன் வன்னியில் இருந்த காலத்தில் வழங்கியிருக்க வேண்டிய நிலுவைகளும் வழங்கப்படவில்லை.

பின்னர், மீள்குடியேற்றத்தை அடுத்து ஆசிரியர்கள் தமது சொந்தப் பாடசாலைகளில் கற்பிக்கத் தொடங்கினர். இப்போது தொடர்ந்து அந்தப் பாடசாலைகளிலேயே கற்பித்து வருகின்றனர். ஆனால், பல்வேறு இடர்களின் மத்தியிலேயே ஒவ்வொரு ஆசிரியரின் பணியும் நடக்கிறது. எனினும், ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகள் மட்டும் வழங்கப்படவில்லை.

தமது சம்பள நிலுவைகளைப் பெறுவதற்காக அவர்கள் எவ்வளவோ முயற்சிகளை எடுத்துள்ளபோதும் இதுவரையிலும் எந்தப் பயனும் கிட்டவில்லை. இவ்வளவுக்கும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் இவர்கள். பாதிப்புகளின் மத்தியில் இருந்துகொண்டே வசதி, வளங்கள் குறைந்த பாடசாலைகளில் கற்பித்துவருகின்றனர். அப்படியிருந்தும் இவர்களின் சம்பள நிலுவைகள் வழங்கப்படாமலிருப்பது வருத்தத்துக்கும் கண்டனத்துக்குமுரியது என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

எதற்காக இந்தச் சம்பள நிலுவை வழங்கப்படாமலிருக்கிறது என்று வலயக் கல்விப் பணிமனை ஒன்றின் ஓர் அதிகாரியிடம் கேட்டபோது அவர் சொன்னார். ''போரின்போது கோவைகள் எல்லாம் அழிந்தும் சிதைந்தும் விட்டன. எஞ்சியவற்றை எடுத்து இப்போதுதான் சீர்படுத்திக் கொண்டிருக்கிறோம். பலருடைய தனிக்கோவைகள் முற்றாக அழிந்துவிட்டன. இந்த நிலையில் உடனடியாக அவற்றை வழங்குவது கடினம்'' என்று. இது தொடர்பாக ஆசிரியர்களிடம் விளக்கம் கேட்டால், ''பாடசாலையை நாங்கள் தொடர்ந்து நடத்துகிறோம். எங்களுக்கும் ஏகப்பட்ட குறைபாடுகளும் வசதியீனங்களும் இருக்கின்றன. நாங்கள் அவற்றைச் சொல்லி எங்களின் கடமையை விட்டு விலகவில்லையே. பாதிக்கப்பட்ட நிலையில், அதிக செலவோடு பாடசாலைக்கு வரும் ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவையை வழங்கினால் மகிழ்ச்சியோடு கற்பிக்க முடியும்'' என்று கூறுகிறார்கள்.

ஆனால், இந்த விவகாரம் தொடர்பாக இன்னும் சரியாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மனக்கசப்போடும் உளச்சோர்வோடும் பணிக்கு வருகிறார்கள்.

இந்தப் பிரச்சினைக்கு எப்போது தீர்வு வரும்? பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை கவனிக்கும் காலம் எப்போது உருவாகும்? பாதிக்கப்பட்ட பாடசாலைகள் எப்பொழுது வளமாகும்? வன்னிப் பகுதியில் கல்விக்கு எப்போது வசதிகளும் வாய்ப்புகளும் கிடைக்கும்?

இதற்கெல்லாம் யார் கண்திறப்பார்? எப்போது திறப்பார்?

# ஜெயலலிதா முகத்தில் கரி!

எஸ். சுரேந்திரஜித்

ங்கிரஸுடன் என்ன விலை கொடுத்தாவது கூட்டணி வைப்பது என்று நினைத்திருந்த ஜெயலலிதாவின் முகத்தில் கரியைப் பூசும் விதமாக திருச்சியில் காங்கிரஸ் கட்சி கடந்த வாரம் நடத்திய பொதுக்கூட்டம் அமைந்தது. சோனியா காந்தி நீண்ட நாட்களுக்குப் பிறகு தமிழகம் வந்து பாரிய பொதுக் கூட்டத்தில் பங்கேற்றது மட்டுமன்றி அதில் திருநாவுக்கரசு காங்கிரஸுடன் தனது ஆதரவாளர்களை இணைத்தது இரட்டிப்பு முக்கியத்துவம் பெறுவதாகும். காரணம் ஜெயலலிதாவுக்கு கருணாநிதியை விடவும் பரமவைரி என ஒருவர் இருந்தால் அது திருநாவுக்கரசே ஆவார். இத்தனைக்கும் எம்.ஜி.ஆர். இறந்தபோது ஜெயலலிதாவுக்கு ஆதரவாக மிகச்சில அ.தி.மு.க அமைச்சர்களே குரல் கொடுத்தனர்


திருநாவுக்கரசு

என்பதும் அவர்களில் பிரதானமானவர் திருநாவுக்கரசு என்பதும் நினைவு கூறத்தக்கது. உதாரணமாக காளிமுத்து, எஸ்.டி.எஸ். சோமசுந்தரம், நாவலர் நெடுஞ்செழியன், அரங்கநாயகம் என பல மூத்த அமைச்சர்கள் ஆரம்பத்தில் ஜானகி ராமச்சந்திரனையே ஆதரித்திருந்தனர்.

இவ்வாறு தாழ்ந்திருந்த ஜெயலலிதாவை உயர்த்தி விட்ட திருநாவுக்கரசையும் சாத்தூர் ராமச்சந்திரன் என்ற கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரனையும் ஜெயலலிதா உதைத்ததே அவரது இன்றைய இழி நிலைக்கு பிரதான காரணமாகும். ஏறிய பின் ஏணியை எட்டி உதைக்கும் பழக்கம் திருநாவுக்கரசில் தொடங்கி வாஜ்பாய், சோனியா காந்தி, டாக்டர் ராமதாஸ், ஈரோடு முத்துசாமி, தூத்துக்குடி அனிதா ராதாகிருஷ்ணன் என ஜெயலலிதாவினால் அவமதிக்கப்பட்டவர்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

என்றாலும் இந்தப் பழக்கத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தவர் சோனியா காந்தியே. சமீபத்தில் சென்னையில் நடந்த ஒரு விழாவுக்கு சோனியா, ஜெயலலிதா இருவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு இருவரும் அதை ஏற்றதாகக் கூறப்பட்டது. உடனேயே அ.தி.மு.க. வட்டாரத்தில் உற்சாகம் பீறிட்டது. அந்தோ பரிதாபம் சோனியா கடைசி நேரத்தில் மறுத்துவிட்டார்.

சோனியா காந்தியை விருந்தினராக வரவழைக்க வக்கற்ற உங்களுக்கு நான் வருவது கேடா என்று ஜெயலலிதா நிகழ்ச்சி ஏற்பாட்டாளரை பொரிந்து தள்ளிவிட்டார்.

இவ்வாறு ஜெயலலிதாவைத் தவிர்த்ததுடன் மட்டுமன்றி அவரது பரமவைரியான திருநாவுக்கரசின் ஆதரவாளர்கள் காங்கிரஸில் சேர்வதற்கென்று தனியாக ஒரு விழாவையே சோனியா காந்தி நடத்தியுள்ளார். இதன் மூலம் விடுக்கப்பட்ட செய்தி மிகத் தெளிவானது. அ.தி.மு.கவுடன் இந்த ஜென்மத்தில் காங்கிரஸ் கூட்டணி அமையாது என்பதே இதுவாகும். திருநாவுக்கரசு அ.தி.மு.கவில் இருந்த போது மட்டுமன்றி அந்தத் தொல்லைக் கட்சியே வேண்டாம் என்று திருநாவுக்கரசு வேறு கட்சியில் சேர்ந்த போதும் அங்கும் துரத்திச் சென்று பழி தீர்த்தவர் தான் ஜெயலலிதா.

அ.தி.மு.கவிலிருந்து வெளியேறிய பின் சில காலம் தனிக் கட்சி நடத்திய திருநாவுக்கரசு பி.ஜே.பி. - ஜெயலலிதா உறவு முறிந்த காலத்தில் பி.ஜே.பியில் சேர்ந்தார். ஆனால் 1999 - 2001 வரை பகையாக இருந்த அ.தி.மு.கவுடன் வெட்கமின்றி 2004 இல் கூட்டணி அமைத்தது பி.ஜே.பி.

கூட்டணி அமைக்கும் முன்பே ஜெயலலிதா தனது ஒரே ஒரு நிபந்தனையைத் தெளிவாகக் கூறிவிட்டார். பி.ஜே.பிக்கு ஒதுக்கப்படும் எந்தத் தொகுதியிலும் திருநாவுக்கரசு போட்டியிடக்கூடாது என்பதே அது. வெகுண்டெழுந்தார் திருநாவுக்கரசு. அவரை ஆறுதல் படுத்திய பி.ஜே.பி. ராஜ்சபாவில் அவருக்கு எம்.பி. பதவி வழங்குவதாக சமாதானம் செய்தது. தொடர்ந்து 2006 சட்ட சபைத் தேர்தல், 2009 லோக்சபா தேர்தல் இரண்டிலும் அ.தி.மு.கவின் காலடியில் பி.ஜே.பியினர் வெட்கமற்று விழுந்து கிடந்த போதும் ஜெயலலிதா அதனை கடைக் கண்ணால் கூட ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

இதையெல்லாம் கண்டு வெறுத்துப்போன திருநாவுக்கரசு ஒரு கட்டத்தில் தி.மு.கவிலேயே போய்சேர்ந்துவிட்டால் என்ன என சிந்தித்திருந்தார். அவரைப் போலவே ஜெயலலிதாவால் உதாசீனம் செய்யப்பட்ட சாத்தூர் ராமச்சந்திரன் இன்று தி.மு.கவே கதி என்றாகி அதன் தூண்களில் ஒருவராகவும் உள்ளார். ஆனால் தி.மு.க எதிர்ப்பே திருநாவுக்கரசின் அரசியல் என்ற சரித்திர உண்மையை அவரால் மீற முடியவில்லை. இந்நிலையில் தான் ஜெயலலிதாவுக்கும், சோனியாவுக்கும் இடையே தனிப்பட்ட வன்மம், பகை ஒன்றுஉருவாவதை திருநாவுக்கரசு நாடிபிடித்து அறிந்தார். அவரைப்பொறுத்தவரை ஜெயலலிதாவுடன் கூட்டணி சேராத கட்சியிலேயே சேரமுடியும். அது தி.மு.கவுடன் கூட்டணி சேரும் கட்சி என்றால்கூட கவலையில்லை. அத்தகைய கட்சியாக கண்ணில்பட்டது காங்கிரஸ் ஒன்றே. சென்றவருடமே அவர் காங்கிரஸில் சேர்ந்தாலும் அதனை சோனியா தலைமையில் விழாவாக எடுக்கமுடியவில்லை. சென்ற வாரமே அது கைகூடிற்று. புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களில் பெருஞ் செல்வாக்குடைய திருநாவுக்கரசு புதுக்கோட்டை மாவட்ட அறந்தாங்கி தொகுதியில் தொடர்ந்து எம்.எல்.ஏ யாக விளங்கினார். 1996 இல் முதல்வர் ஜெயலலிதாகூட தனது தொகுதியில் தோற்ற போதும் இவர் அ.தி.மு.கவில் வெற்றிபெற்ற 4 எம்.எல்.ஏகளில் ஒருவரானார். மிக இளவயதிலேயே எம்.ஜி.ஆர். இவரை அமைச்சராக்கி அழகு பார்த்திருந்தார். எம்.ஜி.ஆர். மறைந்து ஜெயலலிதா கட்சித் தலைவராக உருவெடுத்த போது தெற்கே தேவர் இன வாக்குகளை அச்சொட்டாக அள்ளி அ.தி.மு.கவுக்கு வழங்கிய பெருமை திருநாவுக்கரசுவுக்கே சாரும். தேவர் சாதியனரான சசிகலா அப்போதெல்லாம் எங்கிருந்தார் என்றே தெரியாது. சசிகலா என்ற தேவர் சாதிப்பெண் தன்னருகில் இருக்கும் மமதையில் திருநாவுக்கரசு ஜெயலலிதாவை எட்டி உதைத்தார். அதன் விளைவாக தேவர் இன வாக்குகள் சமீபகாலமாக தி.மு.க, காங்கிரஸ் அணிக்கே செல்லத்தொடங்கியுள்ளன. இப்போது திருநாவுக்கரசு காங்கிரஸில் சேரந்ததன் மூலம் அவரும் தி.மு.க அணியிலேயே உள்ளார் என்பதால் தேவர் வாக்குகள் மேலும் தி.மு.க அணிக்கே சேரவுள்ளன. அத்துடன் ஜெயலலிதாவைப் போல திருநாவுக்கரசு எந்த தொகுதியிலும் போட்டியிடக்கூடாது என காங்கிரஸுக்கு கருணாநிதி நிபந்தனை விதிக்கப் போவதுமில்லை. எனவே பெரும்பாலும் அறந்தாங்கி தொகுதியில் எதிர்வரும் சட்டசபைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் திருநாவுக்கரசு போட்டியிடுவது உறுதியாகும்.

சென்ற வருடமே காங்கிரஸில் சேர்ந்த திருநாவுக்கரசுக்கு இப்போது போய் ஏன் விழா எடுக்கவேண்டும் என்ற கேள்வி இங்கு முக்கியமானது. ஜெயலலிதாவுக்கும் அவரது எடுபிடியாக காங்கிரஸுக்குள்ளும் இளங்கோவனுக்கும் சாட்டையடி கொடுப்பதே இதன்நோக்கமாகும். மேடையில் இளங்கோவன் சோனியாவுடன் ஒருங்கே வீற்றிருந்த போதும் அவருக்கு உரையாற்ற இடமளிக்கப்படவில்லை. இதன்மூலம் அவரது கருத்துக்கள் தேவையில்லை. சோனியா சொன்னால் போதும் என்ற செய்தி விடுக்கப்பட்டுள்ளது. அவர் விடுத்த செய்தி என்னவென்றால், 'தமிழகத்தில் காங்கிரஸ் கூட்டணியிலுள்ளது. கூட்டணி வலுவாக உள்ளது' என்பதே. சோனியா இப்படிச் சொன்னபிறகு இளங்கோவன் என்னத்தைப் பேசி என்ன செய்ய என்ற செய்தி தமிழக காங்கிரஸாருக்கு விடுக்கப்பட்டுள்ளது. சோனியா கலைஞரை வேறு சந்தித்துச் சென்றதுடன் சோனியாவை வரவேற்க திருச்சி விமான நிலையத்துக்கு


ஜெயலலிதா

கனிமொழியும் சென்றிருந்தார். இதெல்லாம் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணியை அசைக்கமுடியாது என்பதையே காட்டுகின்றன. பின்பு திருவாரூரில் கலைஞரிடம் செய்தியாளர்கள், 'கூட்டணி எப்படி உள்ளது?' என்று வினவ, வாயெல்லாம் பல்லாக கிழவர் கருணாநிதி ''கூட்டணி வலுவாக உள்ளதென சோனியா கூறியிருக்கிறார்; அதையே நானும் மகிழ்ச்சியோடு சொல்லுகிறேன்'' என்றாரே பார்க்கலாம்.

ஜெயலலிதாவுக்கு இதெல்லாம் புண்ணிலே புளிப்பற்றும் எரிச்சலைத் தரும் என்பது நிச்சயம். இளங்கோவன் என்ன, அவரது பெரிய பாட்டனார் ஈ.வே. ராவே எழுந்து வந்தாலும் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி அசையாது என்பது தெளிவாக ஜெயலலிதாவுக்கு உணர்த்தப்பட்டுள்ளது.

எம்.ஜி.ஆர். இறந்தபோது இருந்ததைவிட கீழான நிலையிலேயே இன்று ஜெயலலிதா உள்ளார். அப்போது கூட திருநாவுக்கரசு முதலானோர் ஜெயலலிதாவை ஆதரித்தனர். இன்று அவரை ஆதரிக்க வைகோ மட்டுமே எஞ்சி உள்ளனர் என்று குறிப்பிடத்தக்கது. பா.ம.கவின் ராமதாஸை அழைக்க ஜெயலலிதா விரும்பினாலும் ராமதாஸுக்கு இதில் துளியும் விருப்பமில்லை. தி.மு.கவில் கிடைக்கும் மரியாதையில் ஆயிரத்தில் ஒன்று கூட போயஸ் கார்டனில் கிடைக்காது என்பது டாக்டருக்கு நன்கு தெரியும். ஆக ஜெயலலிதாவின் கூட்டணி எப்படி அமையும் என்று அறிய நாடே ஆவலாக உள்ளது. சமீபகாலமாக கம்யூனிஸ்ட்களை வளைக்க கருணாநிதி வெகுவாக முயன்று வருகிறார். தா. பாண்டியன் மட்டுமே அதற்கு இடையூறு எனலாம். அதையும் தாண்டி விட்டால் தி.மு.க. - காங்கிரஸ், கம்யூனிஸ்ட் - விடுதலை சிறுத்தைகள் என தி.மு.க. கூட்டணிக்கு அதன்பிறகு ஏறுபோல் வீறு நடைதான்.


திருச்சி மாநாட்டில் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி...

# முகத்துக்கு CREAM பூசுவதால் புற்றுநோய் ஏற்படுமா?

**கேள்வி :**

வயது 35. பெண். ஆறு மாதங்களுக்கு முன்னர் ஒரு நாள் காலை திடீரென்று தலை சுற்றியது, தொடர்ந்து அரைமணிநேரம் தலைச்சுற்று வாந்திக் குணம் இருந்தது. வைத்தியர் கழுத்துக்கு சில பயிற்சிகள் தந்தார். அதற்கு ஓரளவு குணம் தெரிந்தாலும் முன்னர் போல் திடமாக - வேகமாக நடக்க முடியாமல் உள்ளது. அதற்கு ஒரு நரம்பு வைத்தியரின் ஆலோசனை பெற்றேன். அவர் எனக்கு நரம்பு சம்பந்தப்பட்ட கோளாறு இருப்பதாகச் சொன்னார். காது, மூக்கு சம்பந்தமான வைத்தியர் இது VERTIGO என்ற தலைச் சுற்றல், இது கல்சியம் சத்து குறைவால் ஏற்பட்டுவது என்று கூறினார். எனக்கு ஏற்பட்டுள்ள கோளாறு என்ன?




**பதில் :**

உங்கள் வயதிற்கு - காதிலுள்ள (INNEREAR) கல்சியம் படிவுகள் ஏற்பட்டு OTOLITH என்கின்ற கல்சியம் வளர்ச்சிகள் உருவாகி - அவை உடைந்து மிதக்கும் போது தலைச்சுற்று ஏற்படும். இதனால் ஏற்படும் தலைச்சுற்றை POSITIONAL VERTIGO என்று அழைப்பார்கள். அதாவது, உதாரணமாக படுத்திருந்து எழுந்திருக்கும்போது நிலை மாறுதல் - CHANGE OF POSITION என்பதால் ஏற்படும் தலைச் சுற்றல். ஆனால், இம்மாதிரி தலைச்சுற்று ஒருநிமிட நேரமே இருக்கும். உங்களுக்கு ஏற்பட்டது போல் முப்பது நிமிடம் இருக்காது. இந்த வகை தலைச்சுற்று அடிக்கடி ஏற்படலாம். இதற்கு மருந்து தொடர்ந்து எடுக்கப்பட வேண்டும்.

சிலருக்கு கழுத்து எலும்புகளில் ஏற்படும் வயது மாற்றத்தால் நரம்புகள் நெருக்கப்பட்டு தலைச்சுற்று, கைவலி ஏற்படலாம். ஆனால், நீங்கள் இளம் வயதையுடையவராக இருப்பதால் இது காரணமாக இருக்க முடியாது என அபிப்பிராயப்படுகின்றேன். கல்சியம் குறைபாட்டால் தலைச்சுற்று ஏற்படுவதில்லை. நடக்கும்போது தலைச்சுற்று வருவது அடிக்கடி ஏற்படுகிறதா? தலைச்சுற்று வந்தால் நடக்க முடியுமா? அது கஷ்டமாக இருக்கின்றதா? என்ற அடிப்படையில் ஒரு நரம்பு வைத்தியரின் ஆலோசனை பெறுவது விரும்பத்தக்கது.

**கேள்வி :**

வயது 30. ஆண். எனக்கு அடிக்கடி இனிப்பு வகைகள் சாப்பிட பிரியம். எனது பெற்றோர் இப்படி சாப்பிட்டால் நிச்சயம் நீரிழிவு வியாதி வரும் என்கின்றார்கள். இது உண்மையா?



**பதில் :**

அதிகம் இனிப்பு சாப்பிடுவதால் நீரிழிவு நோய் ஏற்படும் என்பதில் உண்மையில்லை. அதாவது, நேரடியான தொடர்பு இனிப்புக்கும் நீரிழிவுக்கும் இல்லை. ஆனால், இனிப்பு அதிகம் சாப்பிடுவதால் உடல் பருமன் ஏற்பட்டு OBESITY என்கின்ற கோளாறு உருவாகி - அதன் காரணமாக நீரிழிவு ஏற்பட வாய்ப்பு உண்டு.

நீரிழிவு நோய் இரண்டு வகைப்படும்.

TYPE 01 - நீரிழிவு நோய்க்கு மரபணுக்கள் காரணமாக இருந்தாலும் அதை உசுப்பி விடுவது சூழல் காரணங்கள். அதாவது, மரபணுக்களால் நீரிழிவு ஏற்படக்கூடிய வாய்ப்பு இருந்தாலும் LIFE STYLE என்கிற வாழ்க்கை முறைகள் தவறாகும்போது நீரிழிவு ஏற்படுகிறது.


TYPE 02 - என்கின்ற நீரிழிவு ஏற்பட முற்றும் முழுக்க வாழ்க்கை முறைகள் காரணம் என்று அடித்துச் சொல்லலாம்.

மேலும் நீரிழிவு ஏற்பட அடிக்கடி இனிப்பு சாப்பிடுவதே காரணம் என்பது போல் பல தவறான கருத்துக்கள் நீரிழிவு நோயோடு சம்பந்தப்படுத்தி மிகைப் படுத்தப்பட்டுள்ளன.

இந்த சந்தர்ப்பத்தில் அவை பற்றியும் இதற்கு விளக்கமளிக்க விரும்புகின்றேன்.

நீரிழிவு நோயாளர்கள் கட்டாயமாக இனிப்பு வகைகளையோ, சாக்கிலெட் வகைகளையோ சாப்பிடக் கூடாது எனச் சொல்வார்கள். அது உண்மையில்லை. சிறியளவில் அவ்வப்போது இவற்றை சாப்பிடுவது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

நீரிழிவு நோயாளர்களுக்கென்று விசேடமாகத் தயாரிக்கப்பட்ட உணவுகளே



தரப்பட வேண்டும் என்பது மற்றொரு தப்பான தகவல். நீரிழிவு நோயாளிகள் சாதாரணமான மற்றவர்கள் சாப்பிடும் உணவை உண்ணலாம். ஆனால், கொழுப்பு குறைவாகவும், நிறைய நார்ச்சத்துள்ள உணவாகவும் இருப்பது விரும்பத்தக்கது. முழுமையான தானிய வகை உணவுகள் நீரிழிவுக்கு ஏற்றது.

மற்றவர்களின் உணவை சாப்பிட்டாலும் தங்களுக்கு தேவைப்படும் கலோரி அளவிற்கு பொருத்தமானதாக உண்ணவேண்டும்.

ஒரு சிலர் நீரிழிவு நோய் தொற்றும்நோய் என்பார்கள். அது முற்றிலும் தவறானது. இன்னும் ஒரு சிலர் எனக்கு பெரிதாக நீரிழிவு இல்லை. A TOUCH OF DIABETES - அதாவது, மிக மிக குறைந்த TRACE அளவில் இருப்பது மருந்து தேவையில்லை என்பார்கள். ஆனால், குறைந்ததோ கூடிய அளவினதோ நீரிழிவு என்றால் நீரிழிவுதான். கவனம் எடுக்காவிடில் நீரிழிவு தாக்கங்களைக் கட்டாயம் தரும்.



**கேள்வி :**

பெண். வயது 26. நான் ஒரு சாதாரண நிறமுள்ள பெண். முகம் கறுப்பாக இருப்பதால் முகத்தை வெண்மையாக்க சந்தையில் விளம்பரப்படுத்துகின்ற பூச்சுகளை (CREAM) உபயோகிப்பது நல்லதா? எனது சில நண்பர்கள் இந்தப் பூச்சுக்களை உபயோகிப்பதால் புற்று நோய் ஏற்படலாம் என்று பயமுறுத்துகின்றார்கள். இது உண்மையா?

**பதில் :**

எமது சருமத்தின் நிறம் சருமத்தில் உள்ள MELANOCYTES என்கின்ற கலன்களின் தொழிற்பாட்டால் ஏற்படுகிறது. இந்தக்கலங்கள் தோலில் வெயில் கதிர்களில் உள்ள தீங்கு தரும் புறஊதா ஒளியால் ஏற்படும் தாக்கத்தை தவிர்க்க உதவுகின்றன. இந்தக் கலன்கள் அதிகமாகச் செயற்படும்போது MELANIN என்கின்ற சுரப்பு - சருமத்தை கருமையாக்குகிறது. தொழிற்பாடு குறையும்போது சருமம் நிறம் குறைந்து ஓரளவு வெண்மையாகிறது. இந்த அடிப்படையில்தான் சருமத்தை வெண்மையாக்கும் பூச்சுகள் செயல்படுகின்றன. இந்த பூச்சுகள் மெலனின் கலங்களின் தொழிற்பாட்டை குறைக்கவோ, முற்றாக நிறுத்தவோ இயலுமானதாக உள்ளன.

இந்த பூச்சு மருந்துகளை நிறுத்தியதும், மெலனின் கலத்தின் பழையபடி தொழிற்படத் தொடங்கி விடுவதால் சருமம் கருமையடைகிறது. மேலும் பூச்சு மருந்தை நிறுத்தியதும் சூரியனின் புற ஊதாக் கதிர்கள் மெலனின் கலங்களை மேலும் தூண்டிவிடுகின்றன. எனவே, பூச்சு மருந்து உபயோகிப்பவர்களை பகலில் வெயிலில் அலைய வேண்டாம் என்று பூச்சு மருந்துத் தயாரிப்பாளர்கள் அறிவுறுத்துவதும் உண்டு. மொத்தத்தில் பூச்சு மருந்தால் சருமம் வெண்மையடைவது ஒரு தற்காலிகமான காரியமாகும்.

மேலும் பூச்சு மருந்துகளில் உள்ள Hydroquinone, Azelaic Acid, Kojic Acid, Glycolic Acid, Niacinamide, Mercury போன்ற இரசாயனப் பொருட்கள் ஒன்றிரண்டைத் தவிர மற்றவை முற்றிலும் தரமற்றவை என்று உறுதியாகக் கூற முடியாது.

HYDROXY QUINONE சில விலங்குகளிலும், எலிகளிலும் இரத்தப் புற்றுநோயை ஏற்படுத்துகின்றது என்று அறியப்பட்டுள்ளது. மேலும் இந்த இரசாயனத்தைத் தொடர்ந்து உபயோகப்படுத்தும்போது தோல் மிகவும் மிருதுவாகி, COLLAGEN எனப்படும் தோலின் ELASTIC தன்மை குறைவதால் சருமம் காய்ந்து சுருக்கங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதுபோல் Kojic Acid பெரிய அளவில் உபயோகிக்கப்படும் போது புற்றுநோய் ஏற்படுத்துவது அறியப்பட்டுள்ளது. Mercury யும் - நரம்பு மண்டலத்தைத் தாக்கும் சக்தி கொண்டது. சரும வியாதி மறதி, தசைகள் வலிமை குறைவு என்பன Mercury தரும் விரும்பத்தகாதப் பண்புகள்.

இன்று சருமத்தை வெண்மையாக்கும் பூச்சுகளில் 200 இற்கும் மேலானவை HYDROXY QUINONE இரசாயனத்தை கொண்டுள்ளவை. ஐரோப்பா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் சில ஆசிய நாடுகளிலும் HYDROXYQUINONE பூச்சுகள் தடை செய்யப்பட்டுள்ளன. எனவே, மொத்தத்தில் சரும வெண்மைக்கு பூச்சுகள் உபயோகப்படுத்துவது தாற்காலிகமான சிகிச்சை மட்டுமல்ல தீங்கு தரக்கூடியது என்றும் கூறலாம்.




அப்படியானால் கருமையான சருமக்காரர்களுக்கு விடிவே இல்லையா என்று ஏங்காதீர்கள். பப்பாசி பழத்திலிருந்து எடுக்கும் PAPAIN, ஜப்பான் பூஞ்சனத்திலிருந்து தயாரிக்கப்படும் KOJOIC ACID வகை இரசாயனம், BERRY பழங்களிலிருந்து பெறப்படும் ARBUTIN, LICORICE என்கின்ற தாவரச்சத்து, TYROSTAT பாலில் இருந்து பெறப்படும் LACTIC ACID மற்றும் ALLANTOIN, விட்டமின்கள் C, E போன்றவைகளால் தயாரிக்கப்பட்ட பூச்சுகள், HERBA எனப்படும் மூலிகை பூச்சுகள் பயமற்றவை மாத்திரமல்ல, உபயோகித்து நன்மை தரக்கூடியவை என்பதை மனதில் கொள்ளவும்.

**இலவச மருத்துவ ஆலோசனைகள்**

'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
**எஸ்.அருள் ராமலிங்கம்**
**நீங்கள் கேள்விகளை**
**அனுப்பவேண்டிய முகவரி**
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை கொழும்பு - 14.



# உயிர் வலிக்கும் கணங்கள்...!

# எல்லாம் இழந்தும், இறுதியில் மானமும் இழந்தவர்களானோம்!

"யுத்தம் முடிவுக்கு வந்து விட்டது, யுத்த பிரதேசத்தில் இருந்த மக்கள் அனைவரும் பாதுகாப்புடன் மீட்கப்பட்டுள்ளனர், எஞ்சியிருக்கும் புலிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளனர்" 2009 மே 18 ஆம் திகதி காலை வேளையில் வானொலியில் வெளியான செய்தி இது.

செய்தி வெளியான அந்த வேளையில் முள்ளிவாய்க்காலில் ஒரு பகுதியில் எனது குடும்பமும் இன்னும் ஒரு சிலரும் பதுங்குகுழி ஒன்றுக்குள் இருந்தோம். சுற்றிவர துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. சில இடங்களில் தூரத்தில் ஒருசில கூக்குரல்கள் கேட்க்கொண்டு இருந்தன. எங்களைச் சுற்றி பலர் சடலமாக அநாதரவாக கிடந்தார்கள். எங்களின் இருப்பின் பயங்கரத்தை உணர்ந்து இறைவனை மன்றாடிக்கொண்டிருந்தோம். எங்களின் கதை அந்த இடத்தில் கொல்லப்பட்ட பல்லாயிரம் மக்களோடு முடியப் போகின்றது என்ற உணர்வு எங்களுக்கும் ஏற்பட்டது.

நேரம் காலை 10.30 மணியைத் தாண்டியபோது எமக்கு மிகவும் அருகில் வந்த இராணுவத்தினர் வானத்தை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்துகொண்டு எங்கள் அனைவரையும் இருப்பிடத்தைவிட்டு வெளியில் வருமாறு பணித்தனர். எங்களுடன் இரண்டு கைக்குழந்தைகளும் சில காயமடைந்தவர்களும் இருந்தார்கள். அவர்களை முன் அனுப்பிவிட்டு அவர்களுக்கு பின்னால் நாங்கள் வெளியில் வந்தோம். எம்மை சுற்றி கறுப்புத் துணியால் முகத்தை மறைத்துக் கொண்டு 15 இற்கும் அதிகமான இராணுவத்தினர் நின்றார்கள். எங்களை சுட்டுக்கொல்லப் போவதாக பயமுறுத்தினார்கள். நாங்கள் கூக்குரலிட்டு ஒப்பாரி வைத்து அழுதபோது, அவர்கள் எங்களைக் கட்டாயப்படுத்தி நகர்ந்து முன்னோக்கிச் செல்லுமாறு பணித்தார்கள். நாங்கள் முன்னோக்கி பார்த்தபோது சற்றுத்தொலைவில் 50 இற்கும் அதிகமானவர்கள், அனேகமானவர்கள் சிறுவர்களாக காணப்பட்டார்கள். வெள்ளைக் கொடிகளுடன் முட்டுக்காலில் இருத்தப்பட்டிருந்தார்கள். அவர்களுடன் நான்கு ஐந்து குருமார்களும் வெள்ளை அங்கிகளுடன் முட்டுக்காலில் இருந்தார்கள். குருமார்களைக் கண்டவுடன் எங்களுக்கு சற்று நிம்மதியாக இருந்தது. அவர்களைச் சுற்றியும் கறுப்பு துணிகள் கட்டியபடி கனரக ஆயுதங்களுடன் இராணுவத்தினர் நின்றிருந்தார்கள். நாங்களும் அங்கு அழைத்துவரப்பட்டு முட்டுக்காலில் இருத்தப்பட்டோம். அங்கிருந்த குருமார்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் கடுமையான



வாக்குவாதம் நடந்தது. அங்கிருந்தவர்களின் மேலாடைகளை கழற்றும்படியும், எல்லோரையும் அந்த இடத்தில் சுட்டுக்கொல்லப்போகிறோம் என்று பயமுறுத்தியும் வானத்தை நோக்கி மீண்டும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். சுட்டுக்கொல்லும் அனுமதி தங்களுக்கு தரப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினார்கள். மனம் சலிக்காமல் குருமார்கள் மீண்டும் மீண்டும் இராணுவத்தினருடன் வாதாடிக் கொண்டிருந்தார்கள். குருமார்களின் கைகளில் தொலைத்தொடர்பு கருவி ஒன்றும் இருந்தது. பல பிரயத்தனங்களின் பின் அத்தொலைத்தொடர்புக் கருவியூடாக வாக்கு வாதத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இராணுவத்தினரை குருமார்கள் கதைக்க வைத்தார்கள். இரணுவத்தினர் கதைத்த பிற்பாடு அந்த இடத்தில் ஒரு சுமூகமான சூழ்நிலை தோன்றத் தொடங்கியது. அது எமக்கு சற்று ஆறுதலாக இருந்தது.

பின்னர் குருமார்கள் முதலில் அழைக்கப்பட்டு உடல் பரிசோதனை செய்யப்பட்டார்கள். பின்பு அங்கு இருந்தவர்கள் ஒவ்வொருவராக அழைக்கப்பட்டு சோதிக்கப்பட்டார்கள். கடுமையான சோதனையாக இருந்தது. காயமடைந்தவர்களின் காயக்கட்டுகள் பிரிக்கப்பட்டு அக்காயங்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அந்த நேரத்தில் அங்கு நின்ற முதிர்ந்த தோற்றமுடைய குருவானவர் ஒருவர் இராணுவத்தால் தாக்கப்பட்டு நிலத்தில் விழுந்தார். எங்களுக்கு நெஞ்சு படபடத்தது. குருவானவரே தாக்கப்பட்டார் என்றால் எங்களை என்ன செய்வார்களோ என்ற பயம் எங்களை சூழ்ந்து கொண்டது. அந்தக்குருவானவர் அன்றைய தினமே தற்காலிக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மருத்துவ உதவிகள் மறுக்கப்பட்ட நிலையில் இறந்துவிட்டார் என்று பின்னர் நாம் அறிந்து வருத்தப்பட்டோம்.

ஒருவாறு அந்த இடத்தில் சோதனைகள் முடிவடைய காயப்பட்டவர்களில் ஒரு சிலரை தூக்கிக் கொண்டும் இன்னும் சிலரை அந்த இடத்தில் விட்டுவிட்டும் இரண்டு பிரிவாக இராணுவத்தினர் எங்களை அழைத்துச் சென்றார்கள். நாங்கள் வந்தவழியில் கண்டகாட்சிகளையும், முள்ளிவாய்க்கால் பிரதான வீதிக்கு வந்தடைந்த பின்பு கண்ட காட்சிகளையும் எம்மால் நம்பமுடியாதிருந்தது. பிரதான வீதி சாம்பல் மேடாய் காட்சி தந்தது. எரிந்தவாகனங்களும், வாகனங்களுக்கு கீழ் உருக்குலைந்த நிலையில் சடலங்களும், வெடிக்காத நிலையில் சிதறிக்கிடந்த இராணுவத்தளபாடங்களும், அந்த இடத்தில் நடந்த கோரத்தை எங்களுக்கு சுட்டிக்காட்டி நின்றன. இதனைவிட பதுங்குகுழிக்குள் கூண்டோடு செத்துக்கிடந்த உறவுகளும் எம்மைக் கிலி கொள்ளவைத்தன. சாம்பல் மேட்டில் எரிந்துகொண்டிருந்த தீப்பிளம்புகள் நடுவே நாங்கள் நடத்திவரப்பட்டோம். வரும் வழியில் நெருப்பு வெக்கை காரணமாக சிலர் மயக்கமடைந்தனர். அனேகமானவர்களின் பாதங்களில் செருப்புகூட இல்லை. நடந்து பாதங்கள் எல்லாம் பொங்கிப்போயின.

## அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்

மூன்று, நான்கு நாட்களுக்கு மேலாக ஒருவேளை உணவுகூட இல்லை. சரியான களைப்பு, அதற்குமேல் தாகம் உடலை வருத்தியது. கண்களுக்கு அகோரமான காட்சிகள், வழி நெடுகிலும் நின்ற இராணுவத்தினரின் ஏளனமான பார்வை எல்லாம் பெரும் சுமையாக இருந்தன. சுற்றி நின்ற இராணுவத்தினர் வெற்றிக்களிப்பில் நின்று "உங்களின் தலைவர்களின் கதை முடிந்தது" என்று சொல்லி சிரித்தார்கள். எங்களின் பக்கம் கடவுள்கூட இல்லை என்ற எண்ணம் மனதை உறுத்தியது. அடிமைகளாக வெளியேறுவதைவிட அங்கேயே மரணித்திருக்கலாம் என்று எண்ணவும் தோன்றியது.

முள்ளிவாய்க்கால் பகுதியில் வைத்து காயமடைந்தவர்களும், மயக்கமடைந்த ஒரு சிலரும் உழவு இயந்திரத்தில் ஏற்றப்பட்டு தற்காலிக மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட நாமும் மற்றவர்களும் பேருந்தில் ஏற்றப்பட்டு இரட்டைவாய்க்கால் சாளம்பன் பகுதியில் கொண்டுவந்து இறக்கப்பட்டோம்.

சாளம்பன் பிரதேசத்தில் நீண்டவரிசையாக 7 அடி உயரத்தில் காப்பரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. அந்த இடத்தில் நாங்கள் தனித்தனியாக அழைக்கப்பட்டு அணிந்திருந்த உடைகள் எல்லாம் கழற்றும்படி பணிக்கப்பட்டு உடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டோம். எல்லாம் இழந்தும் இறுதியில் மானமிழந்தவர்களாகவும் ஆக்கப்பட்டோம். பின்னர் ஓர் இடத்தில் அனைவரும் ஒன்று சேர்க்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டோம், அங்கிருந்த குருமார்கள் அனைவரும் முதலில் அழைத்து செல்லப்பட்டு பயமுறுத்தப்பட்டார்கள். புலி உறுப்பினர்கள் என்று பெயரைப் பதிவு செய்து கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள். இறுதியில் அவர்கள் ஒரு வாகனத்தில் ஏற்றப்படு எங்கோ அழைத்துச்செல்லப்பட்டார்கள். அங்கிருந்த நாங்கள் எல்லோரும் வயது வேறுபாடின்றி தனித்தனியாக அழைக்கப்பட்டு அங்கு நின்றவர்களால் விசாரிக்கப்பட்டு தாக்கப்பட்டோம். அங்கு நின்று விசாரணை செய்தவர்களில் அனேகமானவர்கள் யுத்தகாலத்தில் வன்னிப்பிரதேசத்தில் புலிகளுடன் திரிந்தவர்கள். நீண்ட நேர விசாரணை முடிவில் மீண்டும் குருமார்கள் எங்களுடன் இணைக்கப்பட்டார்கள். மாலை 6.30 மணியளவில் அங்குநின்ற அனைவரும் இரண்டு பேருந்துகளில் ஏற்றப்பட்டு வவுனியா நோக்கி அழைத்துவரப்பட்டோம்.

இவ்வாறுதான் வன்னி மண்ணிலிருந்து நாங்கள் அவலங்களைத் தாங்கி வாழ்ந்து கொண்டிருந்து, இப்போது வவுனியாவில் அகதி முகாம்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

- யுத்தத்தின் இறுதிநாளில் தப்பியவர்களில் ஒருவன் -

**இ.விக்கினேஸ்வரன்.**

# வலிவடக்கு மீள்குடியேற்றம்?

- ஜோசவ் தயாளன் -





''எங்களை எல்லாரும் விசரன்கள் எண்டு நினைச்சுக்கொண்டிருக்கிறார்கள். ஏமாத்துறதுக்கும் ஓர் எல்லையிருக்கு. அதைப்போல ஏமாறுகிறதுக்கும் ஓர் எல்லையிருக்கு. இப்ப நாங்கள் அந்த எல்லைக்கு வந்திட்டம். இனி எங்களை எவனாலையும் ஏமாத்தமுடியாது'' என்று கொதித்தார் ஒரு வலி வடக்கு. பெயர் சிவராசா. சின்னம்மான் என்று இவரைச் செல்லமாக அழைக்கிறார்கள்.

சின்னம்மான் நல்லாக் களைத்துவிட்டார். சொந்த ஊருக்குப் போகலாம் என்று நம்பி, நம்பி - ஏமாந்து, ஏமாந்து களைத்துவிட்டார்.

சின்னம்மானின் சொந்த இடம் கொல்லன்கலட்டி. இப்போது சுன்னாகத்திலிருக்கிறார். இரவல் வீட்டில், மாத வாடகை கட்டிக்கொண்டு இருபது ஆண்டுகள் இருந்துவிட்டார்.

இவ்வளவு நாட்களும் போர்க்காலம். போர்க்கால விதியும் வேறு. ஆகையால் மனதுக்குச் சமாதானம் சொல்லிக்கொண்டு, இடம்பெயர்ந்த நிலையில் அகதிக்காட்டோடு இருபது வருடத்தைக் கழித்துவிட்டார்.

இப்போது யுத்தம் இல்லை. அது முடிந்துவிட்டது. ஆகவே, யுத்தத்தினால் இடம்பெயர்ந்த சனங்கள் எல்லாம் மீள்குடியேற்றம் என்ற பெயரில் சொந்த இடங்களுக்குப் போகிறார்கள். சின்னம்மானுக்குப் பிறகு ஊர்களை விட்டு இடம்பெயர்ந்தவர்கள் இப்போது மீண்டும் தங்கள் ஊர்களுக்குப் போகிறார்கள். ஆனால், சின்னம்மான் போகமுடியாது. சின்னம்மானைப்போல வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த எவரும் அங்குபோக முடியாது. போனாலும் அங்கே குடியேற முடியாது.

ஆனால்...?

சின்னம்மான் வலி வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோர் சங்கத்தின் ஒரு உறுப்பினர். இந்தச் சங்கத்தின் கூட்டங்கள் அத்தனையிலும் தவறாமல், தப்பாமல் கலந்துகொள்ளும் ஒருவர். இந்தச் சங்கம் ஜனாதிபதிக்கு, இராணுவத்தளபதிக்கு, கட்டளைத் தளபதிக்கு, அமைச்சர்களுக்கு, எம்.பிமாருக்கு என எவருக்கு மகஜர் கொடுத்தாலும் சின்னம்மானும் தவறாமல் கையெழுத்து வைப்பார்.

எதற்காக?

சொந்த இடத்திற்குப் போகவேணும் என்பதற்காக. மற்ற இடங்களையும் விட வலி வடக்கில்தான் மீள் குடியேற்றத்துக்கு முதலில் அனுமதி வந்தது. அதுவும் உயர்நீதிமன்றத் தீர்ப்பு. மூன்று ஆண்டுகளுக்கு முதல் வழங்கப்பட்ட தீர்ப்பை அடுத்து அதிபர் படிவங்களை வழங்கி நிரப்புவித்து அவற்றை எங்கேயோ தூக்கிப்போட்டுவிட்டார்.

நீதிமன்றத் தீர்ப்பும் எங்கே போடப்பட்டதென்று தெரியவில்லை. ஆனால், நீதிமன்றத்துக்கு ஒரு விளக்கத்தை ஸ்ரீலங்கா படைத்தரப்பு அளித்திருந்தது. அதாவது, பாதுகாப்புக் காரணங்களுக்காக இப்போது மக்களை வலி வடக்கில் அனுமதிக்க முடியாது என்று இந்த அறிவிப்புடன் நீதிமன்றம் படுத்துவிட்டது. பிறகு இயங்கவில்லை. ஆனால், சின்னம்மானால் இருக்கமுடியாது. தான் அங்கம் வகிக்கின்ற வலி வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கத்தின் தலைவர் நடராசா மாஸ்ரரை சின்னம்மான் விடுவதாயில்லை.

நடராசா மாஸ்ரரும் தன்னால் இயலக்கூடிய எல்லா வகையிலும் தட்டிப்பார்த்தார். வலி வடக்கில் விரைவில் மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவார்கள் என்று மட்டும் சொல்கிறார்கள். அந்த விரைவானது எப்போது என்று யாருக்கும் தெரியாது.

ஆனால், சின்னம்மானும் நடராசா மாஸ்ரரும் இன்னும் ஏராளம் வலி வடக்கு ஆட்களும் சொந்த இடத்துக்குப் போகலாம் என்று காத்திருந்து - எதிர்பார்த்திருந்து களைத்துவிட்டார்கள்.

போர் முடிந்த பின்னர் வலி வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் நடக்கப் போகிறது என்றும், உயர்பாதுகாப்பு வலயம் நீக்கப்படப்போகிறது என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சொன்னார். சொன்னதோடு நிற்காமல், கொஞ்சச் சனங்களையும் கூட்டிக் கொண்டு வலி வடக்கின் சில பகுதிகளுக்குச் சென்றார்.

ஆனால், படையினர் அடுத்த கிழமை அமைச்சரின் திட்டத்திற்கும் அறிவிப்புக்கும் மாறாகவே கதைத்தார்கள். வலி வடக்கின் மீள்குடியேற்றம் புஸ்வாணமாகிப்போனது.

பிறகு அமைச்சர் டக்களஸும் கூட்டமைப்பு எம்.பிமாரும் சேர்ந்து தெல்லிப்பளையில் வலி வடக்கின் மீள்குடியேற்றம் பற்றி ஆராய்ந்தார்கள்.

விரைவில் மக்களுக்கு மீள்குடியேறும் வாய்ப்புக் கிட்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால், எதுவும் நடக்கவில்லை. நம்பினோர் ஏமாந்தனர். படை அதிகாரிகளின் விளக்கங்களே நடைமுறைப்படுத்தப்பட்டன.

நடராசா மாஸ்ரரும், வலி வடக்கு மக்களும் விடுவதாகவேயில்லை. பத்திரிகைகளில் பேட்டிகள், நடித்த கதைகள் பற்றியெல்லாம் பல சேதிகள் வந்தன. அரசியல்வாதிகளையும்விட படையினரே பலமானவர்கள், அதிகாரம் கூடியவர்கள் என்பது நிரூபிக்கப்பட்டது. மீள்குடியேற்றம் நடைபெறவேயில்லை. சொந்த ஊருக்குத் திரும்பலாம் என்று ஆவலாக இருந்த சனங்கள் மனக்குமைச்சலுடன் திட்டித் தீர்த்தார்கள்.

பின்னர், தேர்தல்கள் வந்தபோது மீண்டும் வலி வடக்கு மீள்குடியேற்றம் பற்றி அரசு கதைத்தது. பஸில் ராஜபக்ஷ வாக்குறுதியளித்தார். தேர்தல் முடிந்ததும் அந்தக் கதையும் பிசுபிசுத்துப் போனது.

இப்போது மீண்டும் வலி வடக்கின் மீள்குடியேற்றம் பற்றிக் கதையடிபடுகிறது. இது செம ஜோக்கு நிறைந்த நிகழ்ச்சியாகவும் இருக்கிறது.

வலி வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் நடக்குமோ, இல்லையோ என்று யாருக்குமே தெரியாது. ஆனால், யாழ். அரச அதிபர் சொல்கிறார் ''மீள்குடியேற்றத்துக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், கண்ணிவெடிகள் அகற்றப்படவேண்டும்'' என.

அமைச்சர் டக்களஸ் சொல்கிறார், மீள்குடியேற்றத்துக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. ஆனால் படைத்தரப்பின் பக்கத்திலிருந்து 'கிளியரன்ஸ்' வரவேண்டும்'' என்று.

கூட்டமைப்பினர் சொல்கின்றனர், ''மீள்குடியேற்றத்துக்காக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து அனுமதி எடுத்தது நாமே. இதைப் பற்றி ஜனாதிபதியிடம் சொல்லி இருக்கிறோம். ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்'' என்று.

படை அதிகாரிகள் சொல்கிறார்கள், ''வலி வடக்கில் மீள்குடியேற்றம் நடைபெறுவதற்கு தாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆனால், கண்ணிவெடிகள் அகற்றப்படவேண்டும். கண்ணிவெடிகள்அகற்றப்படாத வரையில் மக்களை அனுமதிக்க இயலாது. அது மக்களுக்கு ஆபத்தாக அமைந்துவிடும்'' என்று.

பஸில் ராஜபக்ஷ சொல்கிறார், ''வலி வடக்கில் மக்கள் குடியேறலாம். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. படைத்தரப்பின் அனுமதி வந்தபின்னர் அவரவர் சொந்த இடங்களுக்குச் செல்லலாம்'' என்று.

மீள்குடியேற்ற அமைச்சர் யாழ்ப்பாணம் வந்தபோது சொன்னார், ''வலிவடக்கில் மக்களை மீள்குடியேற்றம் செய்யவே அரசு விரும்புகிறது. ஆனால் படைத்தரப்பின் அனுமதி தேவையாக இருக்கிறது'' என்று.

இப்படியே ஆளாளுக்கு அரசியல் ஆதாயம் தேடும் வகையில் வலி வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக பேசிக்கொண்டும் அறிக்கை விட்டுக்கொண்டும் இருக்கின்றார்களே தவிர மக்களை மீள்குடியேற்றுவதாக இல்லை.

இதற்குள் பலாலி உயர்பாதுகாப்பு வலயத்திலும் மக்கள் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ''தெல்லிப்பளை, மாவிட்டபுரம், கொல்லன்கலட்டி, வாசாவிளான், கட்டுவன் போன்ற இடங்களுக்கே மீள்குடியேற்ற அனுமதி கிடைக்கவில்லை. இந்த நிலையில் பலாலியில் மீள்குடியேற்றமா?'' என்று கேட்கிறார் சின்னம்மான்.

உண்மையில் வலி வடக்கின் மீள்குடியேற்றம் தொடர்பான தெளிவான நிலைப்பாடு அரசுக்கு இல்லை. அதனால்தான் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையே பாதுகாப்புக் காரணங்காட்டி அரசு நிராகரித்தது.

அரசின் அறிவிப்பையே நிராகரிக்கும் அளவுக்கு இந்த விடயத்தில் படைத்தரப்பு அதிகாரமுடையதாக இருக்கிறது. இது உண்மைதான். யாழ்ப்பாணத்தில் படை ஆதிக்கம் நிறைந்த ஒரு பகுதியாக இருப்பது வலி வடக்குத்தான். அதை விட்டுக்கொடுப்பதில் விருப்பமில்லாமல் இருப்பது படைத்தரப்பின் உளவியல் சார்ந்த விடயம். படையினரின் உளவியல் பாதிப்பைச் சந்திக்க அரசு தயாரில்லை. விருப்பமும் இல்லை. அதாவது இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசில் தமிழ் மக்களின் நலனை விடவும் படைத்தரப்பின் நலனே முதன்மையானது!

சின்னம்மான் கேட்பார், ''இது எத்தனையாவது யாப்பு?'' என்று.

உங்களுக்குத் தெரிந்தால் தயவுசெய்து அதைச் சின்னமானுக்கும் சொல்விடுங்கள்.

# 10.10.10. 10:10 இல் பிறந்த குழந்தை





வருடத்தில் சில சந்தர்ப்பங்கள் அரிதாகவே கிடைக்கும். அது போலவே நாள், மாதம், ஆண்டு, நேரம், நிமிடம் என அனைத்துமே ஒரே எண்ணாக இருக்கும் போது எமது வாழ்க்கையில் ஏதேனும் நடந்தால் மறக்கமுடியாது அல்லவா?

அதுபோலவே தான் கடந்த 10 ஆம் திகதி 10 ஆம் மாதம் 2010 ஆம் ஆண்டு 10 மணி 10 நிமிடம், 10 செக்கனில் ஒரு ஆண் குழந்தை பிறந்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள புறூக்குவின் நகரில் 35 வயதுடைய சட்டத்தரணி ஹரி என்ற பெண்ணுக்கு இக்குழந்தை பிறந்துள்ளது. சாள்ஸ் என்ற இக் குழந்தை மிகவும் அதிஷ்டசாலியாக இருப்பான் என பெற்றோர்கள் நம்புகின்றார்கள்.


''வழமை போலவே இக்குழந்தை பிறந்தது. 10 ஆம் திகதி தான் பெறவேண்டும் என நாங்கள் ஒன்றும் முயற்சி செய்யவில்லை'' என தாயார் கரி கூறுகிறார். (பா)



இம் மாதம் 2 ஆம் திகதி ஐரோப்பாவில் சிறந்த மீசை வளர்ப்பாளர் போட்டி ஆஸ்திரியாவிலுள்ள சாள்ஸ்போர்க் நகரில் இடம்பெற்றது.

இப்போட்டியில் 17 விதமான போட்டிகள் இடம் பெற்றன. இப் போட்டியில் பல நாடுகளைச் சேர்ந்த 150 போட்டியாளர்கள் பங்குபற்றினர். மிகவும் சிறந்த மக்களைக் கவரக் கூடிய வகையில் மீசையை வளர்த்தவர்கள் என ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பிராங், ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பேர்காட், பிரான்ஸைச் சேர்ந்த கேர்வ் டிபோல்ற் என்ற மூவர் தெரிவு செய்யப்பட்டார்கள். (பா)

# சீனாவில் நண்டுகளால் தொல்லை




சீனாவில் சமீபத்தில் ஏற்பட்ட 'போக்குவரத்துத் தடை' உலக சரித்திரத்தில் இடம் பிடித்துவிட்டது. இதை விட வினோதமாக, நண்டு விளையாட்டால் மாதக் கணக்கில் போக்குவரத்துக்கு தடை ஏற்படுகிறது தைவான் நாட்டில். அங்குள்ள கென்டிங் தேசிய பூங்கா அருகே ஒரு கடற்கரை உள்ளது. அதையொட்டி பிரதான கடற்கரை வீதியும் செல்கிறது. தற்போது நண்டுகளின் இனபெருக்க காலமாகும்.

அதனால் 40 வகையான நண்டு இனங்கள் தங்கள் இனபெருக்க வேலையில் இறங்கி உள்ளன. நண்டுகள் நடுரோட்டில் நின்றுகொண்டு 'நண்டூறுது, நரியூறுது விளையாட்டில் ஈடுபடுகின்றன. கடற்கரையில் நண்டுகள் விளையாடினால் ரசிக்கும் மனிதர்கள், நடுரோட்டில் நண்டுகளை பார்த்ததும் எரிச்சலாகிவிடு கிறார்கள். ஒன்று, இரண்டல்ல வீதி முழுவதும் ஆயிரக் கணக்கான நண்டுகள் லீலை செய்கின்றன. குஞ்சுகளை அழைத்து வலம் வருகின்றன.

அவைகளும் ஒருவித சத்தத்தை எழுப்புவதாக வாகன ஓட்டிகள் கூறுகிறார்கள். அவசர கோலத்தில் வரும் வாக ணங்கள் ஏராளமான நண்டுகளை அடித்து நசுக்கிவிட்டு செல்கின்றன. ஆனால் பெரும்பாலான வாகன ஓட்டிகள் பொறுமையானவர்களாக இருபதால், நண்டுகள் நகர்ந்து செல்லும் வரை தங்கள் வாகணங்களை நிறுத்தி விடு கிறார்கள்.

இதனால் வாகன நெரிசல் ஏற்படுகிறது. நண்டு இன பெருக்க சீசன் ஆரம்பித்து ஒரு வார காலத்திற்கும் இந்த நிலை என்றால் இன்னும் ஒரு மாத காலத்திற்கு என்ன நிலைமையோ என்று புலம்புகிறார்கள் வாகன சாரதிகள்.






இந்தியாவின் கோல்ப் குயின் ஷர்மிளா நிக்கோலட். தொடர்ந்து பல பட்டங்களை வென்று, கோடிகளைக் குவித்து வரும் ஷர்மிளாவுக்கு பொலிவுட் பாலீஷ் பூசும் முயற்சிகள் தொடங்கி விட் டன. 'ரேம்ப் வாக் மட்டும் போதும்' என்றிருக்கிறார் ஷர்மிளா.




ஜேர்மனியில் வருடாவருடம் 'பூசனிக்காய்' கொண்டாட்டம் நடைபெறும். இப்போது அங்கே பூசனிக்காய் அறுவடை செய்யும் காலம் என்பதால் பல இடங்களில் பூசணிக்காய்க் கண்காட்சியும், போட்டிகளும் நடைபெற்றுவருகின்றன. இதைப் பார்ப்பதற்காக ஏராளமான உல்லாசப் பயணிகள் பேர்லின் நகருக்குப் படையெடுத்து வருகிறார்கள்.

பேர்லினிலுள்ள 'பிரான்டன் பேர்க்' நகரில் நடந்த பூசணிக்காய் கண்காட்சிப் போட்டியில் ஒரு விவசாயி தனது 389 கிலோ நிறைவுடைய பூசணிக்காயை காட்சிப்படுத்துகிறார். (பா)

# காதலி

''டேய்... வசந்த் உனக்கு லவ் பண்ண வேற யாரும் கிடைக்கலையா? போயும் போயும் அந்த திமிர் பிடிச்சவளை செலக்ட் பண்ணியிருக்கிறியே?''

''டேய்... குமார் அலுவலகத்தில எல்லாருமே ஏன் அவளை தப்பாகப் பார்க்கறீங்க?''

''வசந்த்... அந்த சுமி நடக்கவே காசு கொடுக்கணும். அவ்வளவு சோம்பேறி! ஒரு முறை லிப்ட் வேலை செய்யலை என்றதும் யாரால ஐந்து மாடி ஏற முடியும் என்று வேலைக்கு லீவு போட்டுட்டு போனவள்! இவ்வளவு பணத் திமிர் பிடிச்ச அவள் சரிப்பட்டு வருவாளா என்று யோசித்து முடிவு எடு?''என்ற குமாரின் வார்த்தைகளை பொருட்படுத்தாமல் தனது காதலை சுமியிடம் கூறினான் வசந்த்.

''வசந்த் என்னை மன்னித்துவிடுங்க... நான் உங்களுக்குத் தகுதியானவள் இல்லை. ஒரு விபத்தில் என்னோட வலது கால் முறிஞ்சு போய்... இப்ப மரக் கால்தான் வச்சிருக்கு. தயவுசெய்து இதை யார்கிட்டே யும் சொல்லிடாதீங்க. ஏனென்றால் அடுத்தவர்கள் பரிதாபமாகப் பார்க்கிறது எனக்குப் பிடிக்காது. நானும் ஒரு சராசரி மனுஷியா வாழ்க்கை யில் வெற்றி பெற வேண்டும்!'' எனக் கூறிவிட்டு சுமி மெதுவாய் நடந்து செல்ல... வசந்தின் மனதிற் குள் மட்டும் இன்னும் வேகமாய் வந்துகொண்டிருந்தது காதல்.

உயிர்துறந்து, கிளைகள் சிலதை இழந்து கம்பீரத்துடன் விறகாக எழுந்து நின்ற மாமர அடியில் சிறு தறப்பாள் ஒன்றை விரித்து அதில் அமர்ந்து தனது குழந்தைக்கு பாலூட்டிக் கொண்டிருந்தாள் தமயந்தி. அவளது பதினைந்து வயது மூத்தமகன் விஜி ஒரு கிலோ மீற்றர் நடந்து சென்று, தண்ணீர் எடுத்து வருவதைப் பார்த்த அவளது இதயத்தில், சோக அலைகள் கடலலையாக அணிவகுத்து அடித்துக் கொண்டிருந்தன. புத்தகம் சுமந்து பாடசாலை சென்று படிக்க வேண்டிய வயதில் ஒரு குடும்பத்தின் சுமை சுமத்தப்பட்டிருந்தது விஜியின் தலையில்.

# வாசமில்லா மலர்கள்

சிறுகதை

ம.சுமன்

''தம்பி தேத்தண்ணி போட்டுத்தாரன் குடியப்பன்'' எனக்கூறிய தமயந்தி, அந்தத் தறப்பாளுக்கு மேல் துணி ஒன்றை விரித்து குழந்தையைக் கிடத்தி விட்டு ஊன்றுகோலின் துணையுடன் அடுப்படி நோக்கி நடந்தாள். தாய் ஊன்றுகோலுடன் போவதைப் பார்த்த விஜிக்கு அவனை அறியாமலே கண்ணீர்த்துளிகள் எட்டிப்பார்த்தன. அவன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே தாய்க்குப் பின்னால் சென்றான். தமயந்தி தேநீரை ஒரு கையிலும், சிறு சீனிப் பேணியை மறுகையிலுமாக விஜியிடம் நீட்டினாள். தாயிடம் இருந்து தேநீரை வாங்கி அருந்தும் போதுதான் விஜி அவதானித்தான் அடுப்படி விறகேதும் இல்லாமல் இருப்பதை.

தேநீர் அருந்தி முடிந்ததும், பக்கத்து வீட்டு வேலாயுதமண்ணையின் வீட்டில் கோடரி வாங்கி அன்றைய தேவைக் கேற்ப விறகு வெட்டி வந்து அடுப்படியில் அடுக்கி வைத்தான் விஜி. 'நேரம் ஏழரை வரும்' என தனக்குள் கூறியவன், சேட்டை எடுத்துப் போட்டுக் கொண்டே ''அம்மா, வேறெதும் வேலை இருக்குதோ'' எனத் தாயிடம் கேட்டான். ''ஒன்றும் இல்லயப்பா'' எனத் தாய் கூறவே, மண்வெட்டியைத் தூக்கி தோளில் வைத்துக்கொண்டு ''அப்ப... அம்மா நான் போட்டுவாறன்'' எனத் தாயிடம் கூறிவிட்டு வயல் நோக்கி நடந்தான். ''தம்பி'' எனத் தாய் கூப்பிடவே திரும்பியவன், ''என்னம்மா'' என்றான்.

அவளால் எப்படிக் கேட்க முடியும்? தன் மகனை விட்டால் வேறு யாரிடம் கேட்க முடியும்? தாய் மௌனமாக நின்றாள். ''என்னம்மா... சொல்லம்மா'' என விஜி திரும்பவும் கேட்டான்.

''தம்பி... அப்பாவைப் பார்க்கப்போய் மூன்று மாசமாச்சுது அப்பா என்ன மாதிரி இருக்கிறார் என்று தெரியாது. நீ வேலை செய்யிற இடத்தில் மூன்று நாளைக்குரிய சம்பளத்தைக் கேட்டுப்பார். தந்தால் நாளைக்கு நானும் தங்கச்சியும் போய் அப்பாவைப் பார்த்திட்டு வாறம்'' ''சரியம்மா. நான் கேட்டு... காசு வாங்கிக் கொண்டு வாறன்'' எனக்கூறிய விஜி வேகமாக வேலை செய்யும் இடம் நோக்கி நடந்தான்.

தமயந்தியின் குடும்பம் கிளிநொச்சி நகரை அண்டிய கிராமம் ஒன்றைச் சொந்த முகவரியாகக் கொண்டது. வசதியாக வாழாவிட்டாலும், வறுமை என்பதை அறியாத குடும்பம். தமயந்தி பிரதீபனை கரம்பிடித்து முதல் முத்தாக பெற்றெடுத்த குழந்தை தான் விஜி. அடுத்து பிறந்தவள் நிலா. விஜியும் நிலாவும் வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள். பிள்ளைகள் இருவரும் படிப்பிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கினார்கள். தமயந்தியும், பிரதீபனும் தங்கள் பிள்ளைகள் இருவரையும் டொக்டர் ஆக்க வேண்டும் என்று பிள்ளைகள் மனசிலும் தங்கள் மனசிலும் ஆசையை வளர்த்துக்கொண்டார்கள். தமயந்தி மீண்டும் கர்ப்பமானாள். இந்தக் காலப்பகுதியில்தான் இலங்கையில் இறுதி யுத்தம் ஆரம்பமாகி சுனாமி அலையாக இடையில் சிக்கிய சிலரின் உயிரை எடுத்தும், எஞ்சியோரை முள்ளி வாய்க்காலில் கொண்டுபோயும் விட்டிருந்தது.

எத்தனையோ துன்ப துயரங்களை அனுபவித்து தமயந்தியும் குடும்பமும் முள்ளிவாய்க்காலில் அடைக்கலம் புகுந்தது. முள்ளிவாய்க்கால் நிலங்கள் யாவற்றையும் வான்குண்டுகளும் எறிகணைகளும் குத்திக்கிளறிக் கொண்டிருக்க ஒவ்வொரு விநாடியும் மரண ஓலமே கேட்டுக்கொண்டிருந்தது. இவ்வாறுதான், விதி தமயந்தியின் குடும்பத்தையும் கூறுபோட ஆரம்பித்தது. காற்றைக் கிழித்துக் கொண்டு வந்த எறிகணை ஒன்று, நிலாவின் உயிரை எடுத்தது மட்டுமல்லாமல், தமயந்தியின் இடது காலை தொடையுடன் எடுத்துக் கொண்டது. இறுதியில் வவுனியாவில் இருந்த நலன்புரி நிலையம் ஒன்று தமயந்தியின் குடும்பத்தை அரவணைத்துக் கொண்டது. தமயந்தியின் கணவன் போராளி அமைப்பில் இருந்தமையால், அவன் புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்படவே, காலில்லாது கர்ப்பத்துடன் இருந்த தமயந்தியின் வாழ்க்கை மிகவும் கஷ்டமாகவே நகர்ந்தது. அவளுடன் உறவென்று இருந்தது விஜி மட்டுமே. இங்குதான் கடைக்குட்டி பிறக்கவே, தன் குழந்தைக்கு நிலாவின் பெயரையே சூட்டினாள் தமயந்தி. இன்று சொந்த ஊரில் குடியேறியும், சொந்த மண்ணில் வாழ்கிறோம் என்ற பெருமையைத் தவிர அவர்களின் வாழ்க்கை வெறுமையாகவே இருக்கின்றது.

* * * * *

வேலாயுதமண்ண விஜியைத் தோளில் தூக்கிக்கொண்டு வருவதைக் கண்ட தமயந்தி, ஊன்று கோலுடன் தட்டுத்தடுமாறி வேலாயுதமண்ணையை நோக்கி வேகமாக நடந்தாள். தோளில் இருந்த விஜியை மெதுவாக இறக்கி கீழே கிடத்தினார் வேலாயுதமண்ணர். பேச்சு மூச்சு இன்றி விஜி கிடக்கவே ஊன்று கோலை எறிந்து விட்டு தரையில் விழுந்து கதறி அழுதாள் தமயந்தி. மெதுவாக தமயந்தியின் அருகில் இருந்த வேலாயுதமண்ணர் ''தங்கச்சி... அழாதயம்மா! தம்பி வயலில் வேலை செய்து கொண்டிருக்கும்போது பாம்பு கடிச்சுப்போட்டுது... உடனே ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனனாங்கள். இடையிலயே தம்பி... எங்கள் எல்லாரையும் விட்டிட்டு தன்ர தங்கச்சியிட்ட போய் விட்டான்...'' என அழுதழுது கூறிமுடித்தார். தமயந்தி இது எதையும் காதில் வாங்காது அழுதழுது இறுதியில் மயங்கிவிட்டாள்.

* * * * *

புணர்வாழ்வு முகாமில் உச்சி வெய்யிலில் தண்ணீர் எடுப்பதற்கு வரிசையில் நின்றான் பிரதீபன். பிரதீபனை அவசரமாக அழைத்த முகாம் பொறுப்பதிகாரியால், இந்த இடிவிழும் செய்தி கூறப்பட்டது. அவன் மௌனமாக நின்றான். அவன் உள்ளம் ஊமையாக அழுதுகொண்டிருந்தது.



இராணுவத்தினர் சிலரினதும் பொலிசார் சிலரினதும் பாதுகாப்புடன் மகனின் இறந்த வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டான் பிரதீபன். கணவனைக் கண்டதும் தமயந்தி தனக்கு கால் இல்லை என்பதையும் மறந்து, அவனிடம் ஓடமுயன்று, விழுந்து, கதறி அழுதாள். மனைவியையும், உயிரற்ற மகனின் உடலையும், தன் ஐந்துமாதக் குழந்தையையும் கண்டதும் பிரதீபனுக்கு கதறி அழவேண்டும் போல் இருந்தது. அதைக் கஷ்டப்பட்டு அடக்கியவன் தமயந்தியைச் சமாதானப்படுத்தினான்.

''வேகமாக புனர்வாழ்வு முகாம் போக வேண்டும்'' என்று பொலிஸ் கூறவே, உறவினர் சிலருடன் விஜியின் உடலைத் தூக்கிக் கொண்டு சுடலை நோக்கி நடந்தான் பிரதீபன்.

மகனின் உடலில் வைத்த தீ, பிரதீபனின் இதயத்திலும் பற்றிக்கொண்டது. அவன் மௌனமாக அழுதுகொண்டிருந்தான். *

# தாய்ப்பால் கொடுப்பதே தாய்மைக்கு அழகு

**சீம்பால் அவசியம்:** எல்லா குழந்தைகளுக்கும் அவர்கள் பிறந்து அரை மணி நேரத்துக்குள் தாய்ப்பால் கொடுக்கப்பட வேண்டும். குழந்தை பிறந்தவுடன் தாயின் சீம்பாலை அவசியம் கொடுக்க வேண்டும். தவறான வழிகாட்டுதலால், பெரும்பாலானோர் அதனைத் தவிர்த்துவிடுகின்றனர். நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெற்றுக் கொள்ள இந்த சீம்பால் உதவும். 6 மாதங்கள் முடியும் வரை தாய்ப்பாலை மட்டுமே கொடுக்க வேண்டும். தொடர்ந்து 2 வயது வரை அல்லது அதற்கு மேலும் தாய்ப்பால் கொடுக்கலாம்.



**என்ன நன்மை?** தாய்ப்பால் ஊட்டுவதால் தாய்க்கும் சேய்க்குமான நெருக்கம் அதிகரிக்கும். குழந்தைகளுக்கு சரியான அளவு ஊட்டச்சத்து கிடைக்கும். தாய்ப்பால் பெற்ற குழந்தைகள் அதிக அறிவுத்திறனும், நல்ல உடல் வளர்ச்சியும் பெறுகின்றனர். நீரிழிவு நோய், காது சம்பந்தப்பட்ட நோய்கள், ஆஸ்துமா, வயிற்றுப் போக்கு, மூளைக்காய்ச்சல், குழந்தை பருவத்தில் வரும் புற்றுநோய், மூட்டு வாதம், கண் குறைபாடு உள்ளிட்ட பல்வேறு நோய்கள் வரும் வாய்ப்பு மிக மிகக் குறைவு.

**தாய்க்கும் நன்மை:** தாய்ப்பால் ஊட்டுவது, பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பைக் குறைக்கிறது. தாயின் விரிவடைந்த கருப்பை விரைவில் சுருங்கி பழைய நிலையை அடைகிறது. வேலைக்குச் செல்லும் தாய்மார்களுக்கு அடிக்கடி நோய் வராமல் காக்கிறது. தாய்ப்பால் ஊட்டும் தாய்மார்கள் மனதளவில் எப்போதும் மகிழ்ச்சியாகவும், புத்துணர்ச்சியாகவும் இருக்க முடியும் என்கின்றனர் நிபுணர்கள்.

**எப்போதெல்லாம்?** குழந்தை பிறந்தவுடன் சுறுசுறுப்பாக, பால் குடிப்பதற்கு ஆவலாக இருக்கும். இந்த நேரத்தில் தாய்ப்பால் கொடுப்பது எளிது. பிறந்தவுடன் கொடுக்கவில்லை என்றால், சிறிது நேரத்தில் குழந்தை தூங்கிவிடும். அதன்பின்பு சிரமம் ஏற்படும். குழந்தைக்கு எப்போதெல்லாம் தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். 24 மணி நேரத்தில் குறைந்தது 8 தடவைகள் கொடுக்க வேண்டும். குழந்தை நோய்வாய்ப்பட்டிருந்தாலும் தொடர்ந்து தாய்ப்பால் கொடுக்க வேண்டும்.

ஆகஸ்ட் 1 முதல் 7ஆம் திகதி வரை உலக தாய்ப்பால் வாரமாக கடைப்பிடிக்கப்படுகிறது. தாய்மார்களே! குழந்தைக்கு தாய்ப்பால் கொடுங்கள். அது உங்களையும் ஆரோக்கியமாக வைக்கும். ✱

## 10 கட்டளைகள்

1. நாள்தோறும் குறைந்தது 8 டம்ளர் தண்ணீர் குடிக்கவேண்டும்.

2. இனிப்பு வகைகளைக் குறைத்து, விற்றமின் சத்து நிறைந்த உணவுகளை அதிகம் உட்கொள்ளவேண்டும்.

3. அதிக கொழுப்புச் சத்துள்ள உணவுகளை அறவே தவிர்க்க வேண்டும்.

4. குறைந்த கொழுப்பு சத்துள்ள உணவுப் பொருள்களை உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

5. வாரந்தோறும் சத்துள்ள ஒரு புதிய உணவைச் சமைக்கலாம்.

6. நார்ச்சத்துள்ள உணவுகளை அதிகம் சேர்க்க வேண்டும்.

7. உப்பைக் குறைக்க வேண்டும்.

8. வறுத்த உணவுகளைத் தவிர்த்து, வேகவைத்த உணவுகளை மட்டுமே உண்ணவேண்டும்.

9. முளைவிட்ட தானிய உணவுகளை அதிகம் உட்கொள்ளலாம்.

10. அன்றாட உணவில் காய்கனிகள், பழ வகைகள் அவசியம் இடம்பெற வேண்டும்.

# தாய்மார்களுக்கான பயண டிப்ஸ்...

பொதுவாக பயணங்கள் என்றாலே முறையான திட்டமிடல் இருந்தால்தான் இனிமையானதாக அமையும். அதுவும் சிறு குழந்தைகளுடன் பயணம் செய்யும்போது கூடுதல் கவனம் அவசியம். எல்லா விடயங்களிலும் சிறப்பாகத் திட்டமிடும் ஆற்றலுடைய பெண்களுக்கு சில சிறிய முன்னேற்பாடுகளை செய்து கொண்டால் குழந்தைகளுடன் மேற்கொள்ளும் பயணமும் குதூகலமானதாக அமையும்.



**இதோ அதற்குச் சில ஆலோசனைகள்...**

✱ நீங்கள் செல்லவிருக்கும் இடத்தின் காலநிலைக்கு ஏற்றாற்போல், குழந்தைகளுக்கு ஆடைகளை எடுத்துச் செல்லவேண்டும். வெப்பமான பகுதி என்றால் பருத்தி ஆடைகளும், குளிர் பகுதி என்றால் அதற்கு ஏற்ற உடைகளும் அவசியம்.

✱ பல இடங்களுக்குத் தொடர்ந்து பயணம் மேற்கொள்ளும்போது, ஹோட்டல் அறைகளை முன்கூட்டியே பதிவு செய்து வைத்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம் கடைசி நேரத்தில் அறை கிடைக்காமல் அலைவதைத் தவிர்க்கலாம்.

✱ சிறிய குழந்தைகளை எப்போதும் தோளிலேயே தூக்கிச் செல்லுங்கள். உங்கள் உடலுடன் குழந்தையின் உடல் தொட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அதன் மூலம் குழந்தையின் உடல்நிலையை நீங்கள் எளிதாக அறிந்து கொள்ள முடியும்.

✱ கோடை விடுமுறைப் பயணம் என்றால், முன்னதாகவே டாக்டருடன் ஆலோசித்து குழந்தைகளுக்கான தடுப்பு ஊசிகளை போட வேண்டும்.

✱ டிரவல் ஏஜென்சிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படும் பயணம் என்றால் குழந்தைகளை அழைத்துச் செல்வது குறித்து அவர்களிடம் முன்கூட்டியே தெரிவிப்பது நல்லது. இப்போது குழந்தைகளுக்கு சிறப்பு ஏற்பாடுகளை பல ஏஜென்சிகள் செய்து தருகின்றன.

✱ பயணத்தின்போது, குழந்தைகளின் ஆடைகளை எளிதில் எடுக்க வசதியாக வைத்துக் கொள்ள வேண்டும். பொம்மைகள், சிறிய விளையாட்டுப் பொருள்களை எடுத்துச் செல்வதும் அவசியம்.

✱ எளிதில் ஜீரணமாகக் கூடிய மற்றும் திரவ உணவுப் பொருள்களையே குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். கூடுதலாக உணவுப் பொருள்களையும், தண்ணீரையும் எப்போதும் வைத்துக் கொள்வது அவசியம். அசைவ உணவுகளை பெரும்பாலும் தவிர்த்து விடுங்கள்.

✱ கார்களில் பயணம் செய்யும் போது, குழந்தைகளை காரிலேயே வைத்துவிட்டு இறங்கிச் செல்லக் கூடாது. முக்கியமாக ஏ.சி.யை ஆன் செய்துவைத்து விட்டுச் செல்லக்கூடாது. ✱

# உங்களுக்கு எந்த ஐஸ் க்ரீம் பிடிக்கும்

**குச்சி ஐஸ்!**

உங்களுக்கு த்ரில் மிகவும் பிடிக்கும். புதுப் புது விஷயங்களை முயற்சி செய்வீர்கள். உங்களுக்கு ரிஸ்க் எடுப்பது ரஸ்க் சாப்படுவதுபோல். நீங்கள் ஐஸ் க்ரீமை நாக்கினால் சுவைத்துச் சாப்படுபவர் என்றால், ருசிக்கு மயங்குபவர் நீங்கள்.



**கப் ஐஸ்**

கப் ஐஸ் பார்ட்டி என்றால் மற்றவர்களிடம் கொஞ்சம் மொக்கை என்று பெயர் வாங்கியிருப்பீர்கள். எதிலும் பாதுகாப்பாக இருக்க ஆசைப்படுவீர்கள்.

**கோன் ஐஸ்**

நீங்கள் புதுமையும் பழமையும் கலந்த ஆசாமி. வாழ்க்கையில் அதிகம் ரிஸ்க் எடுக்க மாட்டீர்கள். உங்கள் காரியங்களை மிகவும் நளினமாகச் செய்ய விரும்புவீர்கள். கடினப் பணிகள் ஆகாது.

ஐஸ்க்ரீம் வகையிலும் சைக்காலஜி இருக்கிறதாம்.

வெனிலா ரசிகர் என்றால் ரகசியம் காப்பீர்கள். நண்பர்களோடு வெளியே செல்வது உங்களுக்குப் பிடிக்கும். ஸ்ட்ராபெர்ரி ப்ரியரான நீங்கள் அமைதிப்படை. ஆனால் கற்பனையில் மிதப்பீர்கள். சொக்லேட் பிடிக்கும். உங்களுக்கு காதல் சமாச்சாரங்கள் எல்லாம் கைவந்த கலை. நீங்கள் ஒரு காதல்வாதி. பட்டர் ஸ்காட்ச் கட்சிக்காரரான நீங்கள் எதிலும் முன்னோடியாக இருக்க ஆசைப்படுவீர்கள். நினைத்ததைச் சாதிக்காமல் ஓயமாட்டீர்கள்.

பொஸ், நீங்க எப்படிப்பட்டவர் என்று அளவுக்கதிகம் ரொம்ப யோசிக்காதீங்க. கவலையை மறந்துவிட்டு என்ஜாய் பண்ணுங்க. அதிகம் யோசித்தால் ஐஸ் க்ரீம் உருகிடும்... ✱

# ஓலை பக்கோடா

கடலை மாவு - 3 கப்
அரிசி மாவு - 1கப்
வெள்ளை எள் - 1/4 கப்
பூண்டு - 10 பல் (அரைத்துக் கொள்ளவும்)
வறுத்த நிலக்கடலை - 1 கை (பொடித்துக்கொள்ளவும்)
பெருங்காயத் தூள் - சிறிதளவு
சோடா உப்பு - சிறிதளவு
மிளகாய் தூள் - 3 ஸ்பூன்
தண்ணீர் - தேவையான அளவு
வெண்ணெய் - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு



**செய்முறை:**

முதலில் இரண்டு மாவு வகைகளையும் அரிதட்டில் அரித்துக் கொள்ளவும். ஏனென்றால் அதில் ஏதாவது இருந்தால் எண்ணெயில் பொரிக்கும் போது வெடிக்கும் வாய்ப்புள்ளது. மாவுடன் எள், பூண்டு, நிலக்கடலை, பெருங்காயத் தூள், சோடா உப்பு, மிளகாய்த்தூள், உப்பு ஆகியவற்றை தண்ணீர் இல்லாமல் நன்கு கலந்து கொள்ளவும். பின்பு வெண்ணெயையும், சிறிது எண்ணெயையும் சூடாக்கி மாவுக் கலவையுடன் கொட்டி தண்ணீர் சேர்த்து சப்பாத்தி மாவு பதத்திற்கு பிசைந்து கொள்ளவும். வாணலியில் பொரிப்பதற்கு தேவையான எண்ணெய் ஊற்றி காய வைக்கவும்..

✱ நன்கு காய்ந்தவுடன் அச்சில் மாவை வைத்து எண்ணெயில் பிழியவும். நன்கு சிவந்தவுடன் எடுக்கவும்.

*சுவையான ஓலை பக்கோடா தயார்!*




# புரியாத புதிர்



**வே.தில்லைநாதன்**

"வா, வா உன்னைத்தான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறன்." என்னைக் கண்டதுமே நண்பன் உற்சாகம் பொங்க வரவேற்றான். அவனது கையில் ஓர் ஆங்கில வாரப்பத்திரிகை தவழ்ந்து கொண்டிருந்தது. எனக்குப் புரிந்து விட்டது. பத்திரிகையில் இருந்த எதுவோ ஐயாவை அரித்துக்கொண்டிருந்தது. சொறிவதற்கு ஆள்தேவை.

உற்சாகமாக வரவேற்றவன் திடீரென மௌனித்து வலக்கையிலிருந்த பத்திரிகையை என்பக்கம் நீட்டினான். இடக்கைச் சுட்டுவிரல் அதிலிருந்த ஒரு கட்டுரையைச் சுட்டி நின்றது. கட்டுரை ஒரு பிரபலமான எதிர்க்கட்சி அரசியல் வாதியும் கட்சியின் உயர்பீடத்தில் இரண்டாம் நிலை வகிப்பவருமான ஒருவரால் எழுதப்பட்டிருந்தது. அதில் ஒரு வசனம் நண்பனினால் சிவப்புக் கோடிடப்பட்டிருந்தது. 'ஜெனரல் பொன்சேகா தனது பெயரை இழந்து ஒரு சிறைக்கைதிக்கான எண்ணினால் அடையாளப்படுத்தப்படுவது பழிதீர்க்கும் ஓர் அரசின் கொடூரத்துக்கு எடுத்துக்காட்டாக அமைவதுடன் அத்தகைய செயலைத் தடுத்து நிறுத்த முடியாத எதிர்க்கட்சிகளின் ஒட்டுமொத்தமான கையாலாகாத்தனத்தையும் எடுத்துக் காட்டுகிறது.' என்ற கட்டுரையாளரின் பிரலாபமே கோடிடப்பட்டிருந்தது.

"பாத்தியே மச்சான் எனக்கெண்டா இதைப் பார்க்கச் சிரிப்புத்தான் வருகுது" என்று கூறிய நண்பன் 'சிரிப்பு வருது, சிரிப்பு வருது...' என்று பாட ஆரம்பித்தான். அவனை இடைமறித்த நான், "அந்த மனுஷன் மனம் நொந்து புலம்புது. உனக்குச் சிரிப்பு ஒரு கேடாகும்" என அவன்மீது பாய்ந்தேன்.

"சிரிக்காமல் என்னை என்ன அழச் சொல்லுறியே? கடந்த காலச் சரித்திரத்தை நினைச்சுப்பார். எப்பெப்ப ஒரு எதிர்க்கட்சி அரசாங்கத்துக்கெதிரா மக்களை திரட்ட நினைச்சுதோ அப்பெல்லாம் அவை என்ன ஆயுதத்தைப் பாவிச்சவை என்டதை நினைச்சுப் பார்"

"என்ன புதிர் போடுறாய்? அப்பிடி என்ன ஆயுதத்தைப் பாவிச்சவை?"

"அந்த ஆயுதத்துக்கு பெயர் 'சிறுபான்மை உரிமை'".

எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது. நான் வருவதற்கு முன்னமே 'துலைவான்' என்னத்தையும் பாவிச்சிட்டானோ என எண்ணினேன்.

"என்னடா யோசிக்கிறாய்? வரலாற்றை மறந்திட்டியா? திரும்பிப் பார்" என்று புராதன காலத்துத் தமிழ்ப்படம் ஒன்றின் பாணியில் வசனம் பேச ஆரம்பித்தான் நண்பன். நான் அலங்க மலங்க விழித்தேன்.

"ஐயோ, ஐயோ பெரும்பான்மை இனத்தை வித்திட்டாங்களே என்ற கூக்குரலை நாங்கள் எத்தனைமுறை கேட்டிருப்போம். ஜே.ஆர்.ஜயவரத்தனவின்ர கண்டிப் பாதயாத்திரையை மறந்திட்டியே? அது மட்டுமே? ஒவ்வொரு முறையும் ஆளும் கட்சி எங்களுக்கு எதையாவது செய்வம் எண்டு வெளிக்கிட்டா அதுபோதுமே எதிக்கட்சிக்கு அரசாங்கத்தைக் கவிழ்க்க ஓர் ஆயுதம் கிடைச்சிடும்."

"ஓம், என்ன?" என்றேன் நான். நண்பன் கூறிய வரலாற்றுப் பாடம் புரிந்தது. உரிமையென்ன, வெறும் சலுகைகளைக் கண்டே அலறியவர்கள்தானே அவர்கள். ஆனாலும் இந்தத்தடவை நிலைமை கொஞ்சம் வித்தியாசம் என எனக்குத் தோன்றியது. ஆனாலும் அவன் வாதத்தில் ஓட்டை இருப்பதை எப்படிச் சொல்வது என்று யோசித்துக் கொண்டிருக்க, நண்பனே எனக்கு வழிகாட்டினான்.

"நீ எனக்கெதிரா ஏதோ ஆயுதம் வைச்சிருக்கிறாயெண்டு நினைக்கிறன். எடுத்து வீசு. நான் தயாராத்தான் இருக்கிறன்." என்று அறைகூவல் விடுத்தான் நண்பன். நானும் தயங்காமல் சவாலை எதிர்கொண்டேன். "மச்சான், இந்த முறையும் எதிர்க்கட்சிக்காரங்கள் அந்த ஆயுதத்தைப் பாவிச்சவங்கள்தான். ஆனால், பெரும்பான்மைச் சமூகம் மசியேல்லையே."

"நீ என்ன சொல்லுறா?" நண்பன் புரியாமல் கேட்டான்.

"எதிர்க்கட்சியளின்ரை பிரசாரத்தைப் பற்றிக் கொஞ்சம் யோசிச்சுப்பார். அரசாங்கத்தைப் பார்த்து என்ன சொன்னவை? 'நாட்டை, எங்கடை இனத்தைக் காப்பாத்தின வீரரைச் சிறையிலை போடத்துடிக்கிறியள். ஆனா எங்கடை இனத்தை அழிச்சவனுக்கு மந்திரிப் பதவியும், மாகாண முதலமைச்சர் பதவியும் குடுத்திருக்கிறியள். நாட்டைப் பாதுகாத்தவரை ஒருத்தர் தூக்கில் போடத் துடிக்கிறார். ஆனா அவர் பயங்கரவாதியளுக்குப் பெரிய உதவியளைச் செய்தவரைக் கட்டித்தழுவுறார்' எண்டெல்லாம் பிரசாரம் செய்தவைதானே. ஆனாலும் பெரும்பான்மைச் சனம் உசுப்பேல்லைத்தானே?"


"நீ சொல்லுறதிலை விசயம் இல்லாமலில்லை, மச்சான். ஆனா ஒரு விசயம் உனக்குப் புரியவேண்டும். அரசாங்கம் இவங்களுக்குச் செய்த உதவியளைச் சிறுபான்மை இனத்தவருக்குச் செய்த உதவியெண்டு பெரும்பான்மை இனம் நினைக்கவேயில்லை".

"அப்ப பெரும்பான்மையினத்தின்ரை நிலைப்பாடென்ன?. எனக்கு விளங்கேல்லை."

"எனக்குந்தான், அது அவங்களுக்குத்தான் வெளிச்சம்" என்றான் நண்பன். அதன் பின்னர் எவ்வளவோ கெஞ்சியும் வாயைத் திறக்க மறுத்துவிட்டான் அவன். நண்பன் எனது தூக்கத்தைக் கெடுத்துவிட்டான் என்பதுமட்டும் எனக்குப் புரிந்தது. ★


## காணி விற்பனைக்கு

யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 5 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.



மேலதிக விபரங்களுக்கு :- 0049 203 410 3458.


## அவலங்களைப் பகிர்ந்து கொள்வோம்

வன்னியில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அங்கிருந்த எமது மக்கள் அனுபவித்த அவலங்கள் சொல்லில் அடக்கமுடியாதவை. அந்தப் பேரவலங்களை எதிர் கொண்டு இப்போது அகதி முகாம்களில் வாடும் எமது உறவுகள், தமது அந்த அனுபவங்களையும் அதனால் ஏற்பட்ட உணர்வுகளையும் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான களத்தைத் திறந்து விடுகிறது உங்கள் 'சுடர் ஒளி'.

எழுதுங்கள்!

உங்கள் அவலங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்!!

உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:

'உயிர் வலிக்கும் கணங்கள்'

சுடர்ஒளி வாரமலர்,

இல. 85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு - 14.


## STUDY MEDICINE

ஒக்டோபர் 11இல் 7ஆம், 8ஆம் குழுவினர் பெலாரஸை வந்தடைந்தனர்



இலங்கை, மாலைதீவுகள், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, உலக சுகாதார நிறுவனம் மற்றும் உலகெங்கிலுமுள்ள மருத்துவ சபைகளால் அங்கீகரிக்கப்பட்ட MBBS/MD பட்டப்படிப்புகள்

VITEBSK STATE MEDICAL UNIVERSITY
**BELARUS**
in Eastern Europe MD - 6 years

UNIVERSAL COLLEGE OF MEDICAL SCIENCE
**NEPAL**
in South Asia MBBS - 4-1/2 years
BDS - 4-1/2 years

ANGELES UNIVERSITY FOUNDATION
**PHILIPPINES**
in South-East Asia MD - 5-1/2 years

**PATHE ACADEMY**

PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

Overseas Student Placement Department 111-1/2, Maya Avenue, Kirulapona, Colombo - 06. Tel : 2502012

பிரவேசங்களுக்கு 0773017883

www.patheacademy.org

### முரண்பாடு பற்றிய பொதுக் கோட்பாடுகள்

ஒவ்வாத இலக்குகள் தம்மிடையே உண்டு என எண்ணுகின்ற ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் அல்லது தனிநபர்கள் அல்லது குழுக்களிடையே முரண்பாடு என்பது பொதுவாக ஒரு நிழலைப் போன்று கருதப்படுகின்றது.

முரண்பாடு வாழ்வின் ஒரு பகுதியாகும். முரண்பாடு வாழ்க்கையின் வழி. அது எப்போதும் எமது வளர்ச்சியினதும் மாற்றத்தினதும் ஒரு பகுதியாகவும் அமைகின்றது.

### முரண்பாடுகள் எவற்றை அடிப்படையாகக் கொண்டவை?

முரண்பாடுகள் வேறுபடுவதற்கு என்ன அடிப்படைகளில் அவை அமைந்துள்ளன என்பதே முக்கியம் ஆகும்.

பின்வரும் சில காரணிகள் முரண்பாடுகளின் வேறுபாட்டுக்கு மூலகாரணமாக அமையவல்லன.

✱ உண்மைக் காரணிகள்:

யாரால், எப்போது, எங்கே, ஏன், எதற்காக, எப்படி முரண்பாடுகள் தோன்றி

### சுய முரண்பாட்டு வகைகள்:

சுய முரண்பாட்டு வகைகளைப் பற்றிச் சிந்திக்க, கீழே அத்தியாவசியமான சில மாதிரிகள் உள்ளன. எந்தவொரு மாதிரியுடனும் ஒருவர் தன்னை ஒப்பிட்டுப் பார்ப்பதற்குப் பல விடயங்களைக் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

✱ எனது முரண்பாட்டு அணுகுமுறை இங்குள்ள முறைகளில் ஏதாவது ஒன்றுடன் பொருந்துகிறதா? அது எது?

# முரண்பாட்டை நாம் அணுகும் வழிவகைகளைப் பொறுத்து அது வளர்ச்சிக்கு அல்லது வீழ்ச்சிக்கு வழி காட்டும்!

முரண்பாடு ஏற்படுவதனால் அது பற்றி நாம் ஆழமாக அறியவும் கற்றுக்கொள்ளவும், சிறப்பான வழிமுறைகளைத் தெரிவுசெய்யவும் வினைத்திறனுடன் ஆக்கபூர்வமானதாக அவற்றை மாற்றியமைக்கவும் முயற்சி செய்வதன் மூலம் முரண்பாட்டுடன் வாழ முடியும். எனவே, முரண்பாடு எமக்கு வளர்ச்சியின் பாதையைக் காட்டுகிறது.

மேலும், நாம் எமது குறிக்கோள்களைப் பலவீனப்படுத்தியும், நாசகார அழிவு வேலைகளில் எம்மை உட்படுத்தியும், பிறரையும் எம்மையும் வேதனைக்குள்ளாக்கியும் முரண்பாட்டில் நாம் வாழமுடியும். இங்கு முரண்பாடு என்பது வீழ்ச்சியின் பாதையாக அமைகிறது.

எல்லா நிலைகளிலும் எந்த ஓர் உடன்பாடின்மையோ சர்ச்சையோ ஒரு குறிக்கப்பட்ட சம்பவத்தைத் தன்னகத்தே கொண்டிருக்கும். அத்துடன் அது பிரத்தியேகமான சந்தர்ப்ப சூழ்நிலைகளை உடையதாகவும் இருக்கும். அந்தச் சந்தர்ப்ப சூழ்நிலையானது முரண்பாட்டுடனான தொடர்பின் மட்டில் தன் ஆளுமைக்கு உட்படுத்தும் கலாசார, வரலாற்று காரணிகளையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அல்லது ஏற்றுக்கொள்ளமுடியாத நடத்தையையும் அதிகார நோக்கையும் கொண்டிருக்கும்.




இத்தகைய உணர்வுடன் ஒருவரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவும், கிடைக்கின்ற கோட்பாடுகளைப் பரீட்சித்துப் பார்க்கவும், புதிய கோட்பாடுகளைத் தேடவும் முற்பட வேண்டும்.

வினைத்திறனுடன் முரண்பாடுகளைச் சமாளிப்பதற்கும், அவற்றை மாற்றுவதற்கும், தீர்த்து வைப்பதற்கும் முரண்பாடுகளைக் கையாளும் திறன்கள் எமக்குத் தேவை. அத்துடன் அவை வன்முறைப் பிரயோகத்தை இல்லாமல் செய்வதற்கும் அவசியமாகும்.

- ஏ.எச்.ஏ.ஹுஸைன் -

வளர்ந்து வருகின்றன என்பதைப் பொறுத்து முரண்பாடுகளின் தன்மைகள் அமையும்.

✱ தேவைகள்:

தனிமனித, சமூக, அக - புறத் தேவைகள் முரண்பாடுகளின் தன்மைகளைப் பாதிக்கும். தேவைகள் நபருக்கு நபர், இடத்துக்கிடம், சூழலுக்குச் சூழல் வேறுபடுவதுடன் அவற்றின் எல்லைப் பரிமாணங்களும் மாறுபடுகின்றன. முரண்பாடுகள் மேற்கூறியவற்றின் ஒன்றில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின் அடிப்படையில் வித்தியாசப்படுகின்றன.

✱ விழுமியங்கள்:

முரண்பாடுகளில் தொடர்புபட்டவர்கள் அல்லது பங்குதாரர்கள் அல்லது ஒரு சாரார் எத்தகைய விழுமியங்களைக் கொண்டுள்ளனர் என்பதன் அடிப்படையில் முரண்பாடுகள் வேறுபடுகின்றன.

✱ நிலைப்பாடு:

முரண்பாடுகளில் தொடர்புபட்டவர்கள் என்ன நிலைப்பாட்டை அம்முரண்பாடுகள் தொடர்பாகக் கொண்டுள்ளனர் என்பதைப் பொறுத்து முரண்பாடுகளின் தன்மையும், எல்லைப் பரிமாணமும் வெளிப்பாடும் அமைகின்றன.

✱ வழிமுறைகள்:

முரண்பாடுகளுக்கு உட்பட்டவர்கள் அல்லது முரண்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் எத்தகைய வழிமுறைகளை - அணுகுமுறைகளை, முறைமையை - முரண்பாடுகளைத் தீர்ப்பதற்குக் கையாள்கின்றனர் என்பதன் அடிப்படையிலும் அம்முரண்பாடுகளின் தன்மைகள் அமைகின்றன.

✱ இங்கு கொடுக்கப்பட்டுள்ள மாதிரிகள் எனது கலாசார பாரம்பரிய வரையறைகளுடன் ஒத்துப் போகின்றதா? எவ்வாறு?

✱ இவைகள் எனது முரண்பாட்டு அணுகுமுறைகளைக் கண்டுணர உதவியாக உள்ளனவா? அவை எவை?

### அடக்கியொடுக்குதல் அல்லது அதிகாரம் செய்தல்

இது வெல்லவோ அல்லது தோற்கவோ வேண்டிய ஒரு போட்டியாக முரண்பாடுகளை எடுத்துக்கொள்ளும் அதேவேளை, தானொரு வெற்றியாளராக இருக்க வேண்டுமென்ற முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கும்.

ஒருவர் தீங்கு செய்பவராக இருந்து, அத்தன்மையினால் வேதனை அனுபவிப்பாராகில், அத்தகையவரைப் பாதுகாக்க விரும்புவதன் விளைவாக இந்த அணுகுமுறை பின்பற்றப்படுகின்றது. நிகழத்தக்க சில சாத்தியமான அபாயம் இருக்குமெனில், இவ்வணுகுமுறை சில வேளைகளில் அவசியமானதாக இருக்கும்.

ஆனால், இது இன்னும் அதிகமான அணுகுமுறைகளை ஏற்படுத்துவதாகவும், பின்னர் தோற்றவரின் மனக்காயத்தை கோபமாக மாற்றுவதாகவும் அமையும்.

உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும்
குடும்பப் பிரச்சினைகள்,
சந்தேகங்கள் தொடர்பான
கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்
உளநல ஆலோசகர்
ஏ.எச்.ஏ.ஹுஸைன்.
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
" A.H.A. HUSSEIN
KAYAR ROAD,
ERAVUR.
ஈமெயில்:
abdulhussein525@gmail.com

# வாழ்க்கையை முறையாக திட்டமிட்டலும் செயற்படுதலும்

**கேள்வி :**

**நான் 25 வயதுடைய ஒரு பெண். எனக்கு மூத்தவர்கள் மூன்று பேரும், இளையவர்கள் மூன்று பேரும் உள்ளனர். நான் இயல்பாகவே பழக்க வழக்கங்களில் மற்றவர்களை விட வித்தியாசமானவள். ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லது சீரமைக்கப்பட்ட நடைமுறை என்னிடம் உண்டு. இன்னும் சொல்லப்போனால் நாளாந்த அலுவல்கள், வாராந்த, மாதாந்த மற்றும் வருடாந்த அலுவல்கள் என்று திட்டமிட்டு அவற்றில் பிசகு எதுவும் ஏற்படாமல் செயற்பட்டு வருபவள். இதனால் எனது கருமங்கள் இலகுவாக முடிவதோடு மனத்திருப்தியும் உற்சாகமும் ஏற்படுகின்றன. எனது பிரச்சினை என்னவென்றால் எனது குடும்பத்திலுள்ள மற்றையவர்கள் இதற்கு நேர் எதிர்மாறானவர்கள். இதனால் நான் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றேன். உதாரணத்துக்கு அவர்கள் ஒரு பேனாவை எடுத்தால் கூட அலுவல் முடிந்தவுடன் அதை உரிய இடத்தில் வைக்கமாட்டார்கள். சிலவேளை சமையலறையினில் அது இருக்கும். இவர்கள் மாறமாட்டார்களா அல்லது நானும் அவர்களைப் போன்று மாறவேண்டுமா?**

பதில் :

நீங்கள் எதிர்கொள்ளும் பாதிப்பின் தாக்கம் உங்களை இந்தளவு நீண்ட கடிதம் எழுத வைத்துள்ளது. உங்களது கேள்வியை மிகச் சுருக்கியும் மிகவும் நீண்ட கேள்வியாகத்தான் அது வருகிறது.

இவ்வாறான பிரச்சினை உங்கள் வீட்டில் மாத்திரமல்ல ஏனைய வீடுகளிலும் அலுவலகங்களிலும் உண்டு. இத்தகைய ஒரு நிலைமைக்கு எமது பாரம்பரிய சமூக கலாசார பின்னணிகளும் ஒரு காரணமாக அமையும். ஆனால், புறநடையாக உங்களைப் போன்ற ஒரு சிலர் இவ்வாறான பின்னணிகளில் இருந்து விடுபடுகின்றனர். ஆக்கபூர்வமாகச் சிந்தித்து அதன்படி செயல்படுகின்றனர். எனினும், இந்த மாற்றம் குடும்பத்தில், நிறுவனத்தில், அலுவலகத்தில் என்று எல்லாவற்றிலும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் அந்தச் சூழல் ஆர்வமூட்டக்கூடியதாகவும் வினைத்திறனும் விளைத்திறனுள்ளதாகவும் இருக்கும்.

அதுவுமல்லாமல், குடும்பத்திலோ அலுவலகத்திலோ, ஒரு சிலரிடத்திலோ மட்டும் நடைமுறையிலிருந்தால் அது சோர்வையும், சலிப்பையும், ஆத்திரத்தையும் கொண்டுவரும்.



திட்டமிட்டுச் செயலாற்றுவதை வாழ்க்கையின் ஒரு வழிமுறையாகக் கொண்டால் அதனால் எண்ணிலடங்கா நன்மைகளை அடையலாம். திட்டமிடப்படாத வாழ்க்கை துடுப்பற்ற படகைப் போல தடுமாறிச் சென்று சீரழியும்.

ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவதற்கு முன்னர் அதனை எப்போது, எவ்வாறு செய்யப்போகிறோம் எனத் திட்டமிடுவது 95 சதவீதமாக இருந்தால் 5 சதவீதமே அதனை நிறைவேற்றுவதற்கான சக்தி செலவாகும்.

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்று சொல்வார்கள். எனவே, எதுவுமே தனக்குள் இருந்தே மாற்றம் காண வேண்டும்.

சீரற்ற நடவடிக்கைகள் உள்ளவர்களை நாம் பின்பற்ற வேண்டிய தேவை இல்லை. அவர்களையும் படிப்படியாக திட்டமிட்ட ஒழுங்கான வாழ்க்கை முறைக்கு மாற்றுவதே சிறந்தது. நீங்கள் மனம் தளர வேண்டாம்.

சுடர் ஒளி

17, ஒக்டோபர் - 23, ஒக்டோபர், 2010

85, ஜெயந்தமல்லிமாறாச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0115738005
பாக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

# சிங்களக் குடும்பங்களும் யாழ். மக்களும்

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவடைந்து ஒன்றரை வருடங்கள் கழிந்துவிட்டன. இந்த ஒன்றரை வருடகாலத்தில் யாழ்ப்பாணம் எவ்வளவோ மாறிவிட்டது.

கடந்த 30 வருட காலமாக யாழ்ப்பாணத்தை எட்டிப் பார்க்காத சிங்கள மக்கள் ஆயிரக் கணக்கில் வந்து போகிறார்கள். தென்னிலங்கையிலிருந்து வரும் சிங்கள வியாபாரிகள் தமது பொருட்களைத் தாராளமாக விற்று பணம் சம்பாதிக்கிறார்கள். தென்னிலங்கை வியாபாரிகளின் வருகையால் நடைபாதை வியாபாரம் யாழ்ப்பாணத்தில் களை கட்டுகிறது.

அது மட்டும் அல்ல ஏராளமான வங்கிகள் தற்பொழுது அங்கு கிளைகளை அமைத்து விட்டன. பணம் படைத்த தமிழர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் முதலீடு செய்யத் தயாராகி வருகின்றனர். இது யுத்தத்தின் பின்னான ஒரு சுமுக நிலை என்றே கூறலாம்.

யாழ்ப்பாணம் வந்து போகும் சிங்கள மக்களுடன் தமிழ் மக்கள் சுமுகமாகவே பழகுகின்றனர். அவர்கள் சந்தேகப் பேர்வழிகளாகப் பார்க்கப்படவில்லை.

இந்த சுமுக நிலையைக் குழப்புவது போன்று தற்போது யாழ்ப்பாணத்தில் காரியங்கள் இடம் பெற்று வருகின்றன.

தென்னிலங்கையிலிருந்து கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்த 180 சிங்களக் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 500 பேர் தாம் யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும் என்று கோரி அடம் பிடித்து வருகின்றனர். பொலிஸாரின் பாதுகாப்புடன் இவர்கள் தமது போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

1980 ஆம் ஆண்டுக்கு முன் தாம் யாழ்ப்பாணத்தில் குடியிருந்ததாகவும் தாம் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும் என்றும் இவர்கள் சொல்கின்றனர். இதன் உச்சக் கட்டமாக 1980 ஆம் ஆண்டுக்கு முன் ஒரு லட்சத்து 50 ஆயிரம் சிங்களவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்தனர் என்றும் அவர்கள் மீள்குடியமர்த்தப்பட வேண்டும் என்றும் ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

வட மாகாணம் ஒரு குறிப்பிட்ட இனத்துக்கு மட்டும் சொந்தமானது அல்ல. தமிழ் மக்கள் கொழும்புக்கு வந்து குடியேறலாம் என்றால் சிங்கள மக்கள் வட மாகாணத்தில் குடியேறுவதில் என்ன தவறு இருக்கிறது? நாட்டின் எல்லாப் பகுதிகளும் மூவின மக்களுக்கும் சொந்தம் - இது தான் இன்றைய அரசாங்கத்தின் கொள்கை. மஹிந்த சிந்தனையும் இதனைத் தான் வலியுறுத்துகிறது. ஆகவே சிங்கள மக்கள் திடீரென யாழ்ப்பாணம் வந்து வீடுகளுக்கும் காணிகளுக்கும் உரிமை கோருவது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி விடுத்துள்ள அறிக்கை கவனத்துக்குரியது. 'யாழ். குடாநாட்டில் வாழ்ந்த சிங்கள மக்கள் தாங்கள் சொந்தக் காணிகளில் குடியிருந்தால் அங்கு மீளக்குடியமர்வது நியாயமானது. இருந்தும் வாடகைக்கு குடியிருந்தவர்களும் தமக்கு காணி வழங்கி தாம் யாழ்ப்பாணத்தில் குடியமர்த்தப்பட வேண்டும் என்று கோருவதில் எதுவித நியாயமும் இல்லை' என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள மக்களுக்கு மீள் குடியமர உரிமை இருக்குமானால் அதே அளவு உரிமை 1956, 1958, 1977, 1983 இனக்கலவரங்களின் போது தெற்கில் தாம் வாழ்ந்த இடங்களில் - தேடிய சொத்துக்கள், காணி பூமிகள் அனைத்தையும் இழந்து யாழ்ப்பாணம் ஓடி வந்த தமிழருக்கும் உண்டு என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை சதந்திரமடைந்த காலப் பகுதியில் அனுராதபுரம், கெக்கிராவ, திஸ்ஸமஹாரம போன்ற இடங்களில் ஏராளமாக தமிழர்கள் வசித்து வந்தனர். இனக்கலவரங்கள் காரணமாக இவர்கள் அனைத்தையும் இழந்து யாழ்ப்பாணம் வந்தனர். இவர்கள் தென்னிலங்கைக்கு வந்து தாம் முன்னர் வாடகை வீடுகளில் குடியிருந்ததாகச் சொல்லி உரிமை கோர முடியுமா?

ஆகவே, தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் நிலவும் நல்ல சூழ்நிலையைக் குழப்பும் தீய சக்திகளுக்கு அரசாங்கம் இடம் கொடுக்கக் கூடாது. இந்தப் பிரச்சினையை சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டும். தற்போது வடக்கில் லட்சக்கணக்கான மக்கள் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை காரணமாக தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலையில் பல ஆண்டுகளைக் கழித்து விட்டனர். இவர்களது பிரச்சினையையும் மனதில் கொண்டு செயற்படுவது மூலமே இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

# அவளும் வேலைக்குப் போகிறாள்

குறுங்கதை

லீனத் ரஷ்மா

வேலைக்கு விரைந்து கொண்டிருந்தவளை ''நஸீரா'' என்ற அழைப்புக்குரல் சற்றுத் தாமதிக்க வைத்தது. என்னை உரிமையோடு அழைப்பது யாராக இருக்கும்? யாரிது இந்த நேரத்தில் ஐயஹோ?

வேலைக்கு நேரமாகிறதே என்று தவித்துக் கொண்டிருந்தவளை பல குரல்கள் ஒன்றாக அழைத்தபோது அலட்சியம் செய்ய முடியவில்லை.

அந்தக் காலை வேளையிலும் வியர்வை அவளை முற்றாக நனைத்து விட்டது. யாரைப் பார்க்கக் கூடாதென்று கொஞ்சக்காலமாக நினைத்துக் கொண்டிருந்தாளோ அவர்களிடமே வசமாக மாட்டிக் கொண்டாள் நஸீரா.

''என்ன நஸீரா உன்னைப் பார்க்கவே முடியல்ல? ஏன் நஸீரா எங்களையெல்லாம் ஒரேயடியாக மறந்துவிட்டாய்? ஏன் நீ இப்படி படிப்பை அநியாயமாக்கிவிட்டு வேலைக்குப் போற? நீ வேலைக்குப் போகுமளவுக்கு உங்க குடும்பத்துக்கு அப்படியென்ன கஷ்டம் வந்திருச்சு? ஆனானப்பட்ட நீயே வேலைக்குப் போகிறதாயிருந்தால், நாங்கள் எப்பவோ போயிருக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் இந்த ஊரில பத்துப் பேர் பதினைந்து பேருக்குதான் பாடசாலைக்குச் செல்ல முடியுமாயிருக்கும்''.

பல சொல்லம்புகள் ஒரே நேரத்தில் தாக்க அவளால் தாங்க முடியவில்லை, துடிதுடித்துப் போனாள். இன்னுங் கொஞ்சம் தாமதித்தாலும் அவர்களுக்கு என்ன நடக்குமோ? அவர்களின் கேள்விகளுக்கு விடை சொல்லக் கூடிய நிலையிலோ அவள் இருக்கிறாள்?

நஸீரா தன்னை மிகவும் கட்டுப் படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது. தோழிகளை அலட்சியம் செய்துவிட்டு ஓடித்தப்பவும் முடியவில்லை. இந்த இக்கட்டான நேரத்தைச் சமாளித்துத்தான் ஆகவேண்டும். அவர்களைத் திசை திருப்பிவிட்டால் என்ன? என எண்ணியவளாய்

''ஏன் இன்று எல்லோரும் பாடசாலைக்கு சுணங்கிப் போகிறீங்க?'' தன் கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே கேட்கிறாள்.

''ஓஹோ! நீ பாடசாலைக்கு வராமலிருந்து ஒரு மாதம் கூட ஆவில்லை; அதற்குள் எல்லாவற்றையும் மறந்துவிட்டாயாக்கும். முதலாம் தவணைக்கான சோதனை இன்று ஆரம்பமாகிறதே. இன்னும் ஒரு மாதம் போனால் எல்லோரையும் மறந்துவிடுவாய் போலும்.''

'ஆமாம், நான் பாடசாலையையே மறக்கத்தான் வேண்டும். அப்போதுதான் எனக்கு நிம்மதி', இப்படி நஸீரா தனக்குள் முணுமுணுத்துக் கொள்கிறாள்.

''பரீட்சையென்றால் இப்படிப் பாதையில் கதைத்துக் கொண்டிருப்பதா? நேரம் பிந்திப்போகுது'' என்கிறாள் நஸீரா.

''ஹூ...ம் கிளாஸ் மொனிட்டர், பிரிபெக்ட் என்றால் பேசப்பட்டவளா? நஸீரா சொல்வதைக் கேட்க வேண்டாமா? வாங்க போவோம்'' என்றவர்களாய் எல்லோரும் பாடசாலைக்கு விரைகின்றனர்.

நஸீராவுக்கு பெரியதொரு மழை பெய்துவிட்டு ஓய்ந்தது போலிருந்தது. ஆனால், அவர்கள் நஸீராவின் மனதிற்குள் இடியையும் மின்னலையும் ஏற்படுத்திவிட்டல்லவா சென்றுள்ளனர். இப்போது அவளால் விரைவாக நடக்க முடியவில்லை. தள்ளாடிச் செல்லும் அவளின் பாதங்கள் மட்டுமே நடைபயின்றன. நெஞ்சத்தில் எண்ண அலைகளோ நிலைகொள்ளாமல் தவித்தன.



''இங்க பாருடா! இவ பாதையில் போகிற லட்சணத்த! இப்படி ஆடி அசைந்து வேலைக்குப் போனால் கிட்டத்தில் முதலாளி சீட்டுக் கிழித்திடுவாரு.''

''இவ எப்பவும் இப்படித்தானே, கடைசிநிமிடத்தில்தான் வருவா. படிப்பில் கெட்டிக்காரியென்றால் இப்படியிருப்பதா?''

''இல்லடா இவ வீட்டில உம்மாவுக்கு சமைத்துவிட்டு வாராளாக்கும்.''

''ஏன்டா உங்களுக்கு ஊர்வம்பு? பரீட்சைக்கு நேரமாகுது வாங்கடா போவோம்.''

போதாததற்கு பின்னால் வந்த மாணவப்பட்டாளம் அவளைச் சாடிக் கொண்டு சென்றது.

ஹூ...ம் அவர்கள் சொன்னதில் தவறில்லைதான். எப்போதுமே பாடசாலைக்குக் கடைசியாகப் போவது நானல்லவா! ஆனால், நான் பாடசாலைக்குச் சமைத்துவிட்டுத்தான் வருகிறேன் என்ற விடயம் இவர்களுக்கு எப்படித் தெரியும்? ஒரு வேளை தம்பியின் வாயால் எடுத்தனரோ?

தம்பியை நினைக்கத்தான் அவளுக்கு வேதனையாக இருந்தது. தம்பியின் எதிர்காலம் எப்படியாகுமோ என்று அஞ்சியே தம்பியின் படிப்பிற்காகத் தன் பாடசாலை வாழ்க்கையை முடித்துக் கொண்டாள். நாம் எவ்வளவு துரதிர்ஷ்டம் பிடித்தவர்கள். தங்க ஆப்பிளை வைத்துக் கொண்டு பசிதீர்க்க முடியாதவர்களாகிவிட்டோம்.

பிச்சை புகினும் கற்கை நன்றே என்று சொல்வார்கள். ஆனால், பிச்சை கேட்கக்கூட நாங்கள் அருகதையற்றுவர்களாயுள்ளோம். மாதாந்த வருமானம் பல ஆயிரமாயிருந்தும், கேவலம், ஒரு கொப்பி வாங்க வழியில்லை.

நாம் தந்தையில்லாப் பிள்ளைகளானாலும் சொத்து சுகமுடையவளாய் தாய் இருக்கிறாள். அந்தவகையில் நாம் அதிஷ்டசாலிகளே. ஆனால் அந்தப் பணம் அம்மாவின் வாழ்க்கைக்கே செலவழிக்கப்படுகின்றன. பெரியவீடு அதற்கேற்றாற் போல் நாகரிக தட்டுமுட்டுச் சாமான்கள், உடுக்க நாகரிக ஆடைகள். எதை வாங்கா விட்டாலும் தாய் அடிக்கடி உடைகள் வாங்க மறப்பதேயில்லை. அதற்கு ஏற்றாற் போல அவளுக்குப் பயணத்துக்கும் குறைவில்லை. இருக்கும் உடைகளை உடுக்க பயணமும் வேண்டுமல்லவா.

அவள் அடிக்கடி வெளியே போவதால் வீட்டையோ பிள்ளைகளையோ நிர்வகிக்க நேரம் எங்கே இருக்க போகிறது? எல்லா வேலையும் நஸீராவின் தலையில்தான். வீட்டைச் சுத்தம் செய்வதிலிருந்து சமைப்பதெல்லாம் இவளேதான். அதன் பின்னர்தான் அவள் பாடசாலை செல்ல வேண்டியிருந்தது.

இவ்வளவு சிரமப்பட்டும் அவளுக்குப் பாடசாலைக்குத் தொடர்ந்து போக முடியாத நிலை. பாடசாலைக்குத் தேவையான பொருட்களைக் கேட்டாளே தாய் கையை விரித்துவிடுவாள். ஆடம்பரப் பிரியையான அவள், பிள்ளைகளின் படிப்பையோ எதிர்காலத்தைப் பற்றியோ அக்கறை காட்டுவதில்லை.

எனவே தான் நஸீரா வேலைக்குப் போகிறாள். தன் படிப்பு எப்படிப் போனாலும் தன் தம்பியின் படிப்பாவது தொடரட்டுமே என்று! ✱

# அகில உலகையும் அசரவைத்த அற்புத பொறியியல் சாதனை

இயற்கைக்கு எதிராக மனிதன் மேற்கொண்ட மயிர்க் கூச்செறியும் மகத்தான மீட்புப் பணி.

உலகம் உருவான காலம் தொட்டு இன்று வரை ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள் எண்ணிலடங் காதவை. கண்ணிமைக்கும் நேரத்தில் பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் காவு கொள்ளும் எரிமலைகள், பூகம்பங்கள், வெள்ள அனர்த்தங்கள், ஆழிப் பேரலைகள், புயல், மண்சரிவு என எவ்வித இரக்கமுமின்றி இயற்கை அவ்வப்போது குமுறுவது தவிர்க்க முடியாதது. இத்தகைய இயற்கை அனர்த்தங்களில் மாண்டவர்களையும் மீண்டவர்களை யும் மீட்பதற்கான பணிகளில் தம்முயிரை பணயம் வைத்து செயற்படும் பணியாளர்களின் சேவை காலத்தால் அழியாதது. மனித நேயம் இன்னும் சாகவில்லையென்பதை அவ்வப்போது உணர்த்துவ தற்காக இயற்கை அன்னை அவ்வப்போது இவ்வாறு தனது குமுறலை வெளிப்படுத்துகின்றாளா என்ற சந்தேகம் கூட எழுவது சாத்தியம்.



இதுவரை உலக வரலாற்றில் நடைபெற்றுள்ள இயற்கை அனர்த்தங்களுடன் ஒப்பிடும் போது, சிலி நாட்டிலுள்ள கோப்பியாப்போ பிரதேசத்தில் உள்ள சான் ஜோஸ் தங்கம் மற்றும் பித்தளைச் சுரங்கத்தில் ஏற்பட்ட அனர்த்தம் மிகவும் சாதாரணமானது.

> **இறுதி உயிர் காப்பாற்றப்பட்டு தரைமட்டத் துக்கு வந்தபோது 7 லட்சம் தொன் பாறைகளும் மண்ணும் சரிந்து 33 தொழிலாளர்களை உயிரோடு புதைத்துக் கொண்ட கொடூர சம்பவம் முடிவுக்கு வந்தது. தெய்வமே நீ எங்கே சென்றாய்? ஏனிந்த அவலம் எங்களுக்கு? என தொழிலாளர்களின் குடும்பத்தினர் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே குமுறியது. அவர்களின் ஆத்மார்த்தப் பிரார்த்தனை கள் வீண் போகவில்லை.**
>
> **- ஜனாதிபதி செபஸ்ரியன் பினேரா**

எனினும், தரைமட்டத்திலிருந்து சுமார் 624 மீற்றர் ஆழத்தில் உயிருடன் மாட்டிக்கொண்ட 33 சுரங்கத் தொழிலாளர்கள் எவ்வித சேதமுமின்றி 68 நாட்களின் பின் மீட்கப்பட்டது இயற்கைககு எதிராக மனிதன் விடுத்த சவாலெனவே கணிக்கப்படுகின்றது.

வழக்கமாக மனிதன் புதைக்கப்படுவது ஆறடி ஆழத்தில் தான். எனினும் 624 மீற்றர் (சுமார் அரை மைல்) ஆழத்தில் மாட்டிக்கொண்ட அப்பாவித் தொழிலாளிகளின் அந்திம காலம் வந்து விட்டதாக கைகளைக் கழுவிக்கொள்ளாமல் 68 நாட்களாக அவர்களை உயிருடன் வைத்திருந்து எவ்வித சேதமுமின்றி மீட்டது இதுவரை உலகிலே நடத்திராத மகத்தான சாதனை.

இன,மொழி, மத, அரசியல் பேதமின்றி உலகின் சகல நாடுகளும் வழங்கிய ஒத்துழைப்பு பாராட்டத் தக்கது.


கடந்த புதன்கிழமை (13.10.2010) நள்ளிரவு 12.11க்கு மீட்கப்பட்ட முதலாவது தொழிலாளியான 31 வயதான புளோரன்ஸியோ அவாலோஸ் தரை மட்டத்தை அடைந்தபோது, அவ்விடத்தில் மணிக் கணக்காகக் காத்திருந்த ஜனாதிபதி செபஸ்ரியன் பினேரா அவரை ஆரத் தழுவி வரவேற்ற போது இருவர் கண்களிலும் வழிந்த ஆனந்தக் கண்ணீர் சுற்றியிருந்தவர்களை மட்டுமன்றி, இந்நிகழ்ச்சியைத் தொலைக்காட்சிகளில் பார்த்துக்கொண்டிருந்த கோடிக்கணக்கான மக்களையும் நெகிழச் செய்தது.

இவர்களை மீட்பதற்காக வடிவமைக்கப்பட்ட பீனிக்ஸ் கூண்டு (Phoenix capsule)



விஞ்ஞானம் இதுவரை எட்டியுள்ள மகத்தானதொரு கண்டுபிடிப்பு. சிலி நாட்டின் கடற்படையினரால் துல்லியமாகத் திட்டமிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட இக்கூண்டு 54 சென்ரி மீற்றர் விட்டமும், 4 மீற்றர் உயரமும், 460 கிலோ நிறையும் கொண்டது. 662 மீற்றர் ஆழத்துக்கு இறக்கப்பட்டிருந்த அச்சின் வழியாக இந்தக் கூண்டு இறக்கப்பட்டது. கூண்டுக் குள் ஒட்சிகன் சிலிண்டர், ஒலி மற்றும் வீடியோ அமைப்புடனான தலைக்கவசம் வைக்கப்பட்டிருந்ன. கூண்டுக்குள் நுழைந்து தொழிலாளி தலைக் கவசத்தை மாட்டிக்கொண்டதும் அவரது இதயத் துடிப்பு, சுவாசம் மற்றும் உடல் நிலை பற்றிய துல்லியமான தகவல்கள் தரையின் மீதுள்ள மீட்புப் பணியாளர்களுக்கு உடனுக்குடன் அறிவிக்கப்படும்.

மீட்புப் பணியாளர்களின் தலைக் கவசங்களும்




விசேடமாக வடிவமைக்கப்பட்டு பெறப்பட்ட தகவல் கள் உடனுக்குடன் விசேட வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழுவுக்கு அறிவிக்கப்படும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தது.

இந்த மீட்புப் பணியில் பிரதம இணைப்பாளராகப் பணிபுரிந்த அன்ரே செகைாரேட் கருத்துத் தெரித்தபோது 'இறுதி வரை எங்களால் எதையுமே நிச்சயமாகக் கூற முடியாமல் இருந்தது. இவ்வளவு துல்லியமாக நாங்கள் திட்டம் தீட்டி கூண்டை இறக்கிய போதும் அது செயற்பட்டுக் கொண்டு இருக்கும் போது, எதேச்சையாக பாறையொன்றோ அல்லது மண்ணோ சரிந்திருந்தால் கூண்டின் கதி அதோ கதிதான். 68 நாட்களாக நாங்கள் இரவு பகலாகப் பட்ட கஷ்டங்கள் வீணாகிப் போயிருக் கும். 33 அப்பாவித் தொழிலாளர்களும் மண்ணுக்கு இரையாகியிருப்பார்கள். தோண்டப்பட்ட குழியில் முன்னெச் சரிக்கையாக முதல் 96 மீற்றர் ஆழத்தைச் சுற்றிலும் கவசமிட்டு மண், கல்லின் சரிவைத் தடுத்திருந்தோம். எனினும், எஞ்சிய 526 மீற்றர் வெறுமனே நின்றிருந்தது. அதில் எந்த நேரத்திலும் விபரீதம் ஏற்பட வாய்ப்பிருந்தது. எமது முயற்சிகளுக்கும் மேல் தெய்வ அனுக்கிரகம் இருந்துள்ளதாக நான் பரிபூரணமாக நம்புகின்றேன்' என அவர் உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார்.

சுகாதார அமைச்சர் ஜெய்ம் மானாலிக் கூறுகையில், 68 நாட்கள் உயிருடன் சுரங்கத்தில் மாட்டிக்கொண்ட இவர்கள் மீட்கப்பட்டவுடன் ஹெலிக்கொப்டர் மூலமாக நகரிலுள்ள பிரபல வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு, 48 மணித்தியால தீவிர சிகிச்சைக்கு உட்படுத் தப்பட்டனர். இவர்களுள் நீரிழிவு நோயால் பாதிக்கப் பட்டவர்கள் உட்பட ஒருவருக்காவது எவ்வித பாதிப்பும் ஏற்பட்டிருக்கவில்லை என்பது உலக அதிசயம். ஒன்பதாவதாக மீட்கப்பட்ட 63 வயதான மரியோ கோமஸ் என்பவரே இவர்களுள் வயதானவர். அவருக்கு ஏற்கனவே தீவிரமான சிலிகோசிஸ் நோயும், சுரங்கத் தொழிலாளர்களை வழக்கமாகப் பீடிக்கும் நுரையீரல் நோயும் பீடித்திருந்ததுடன் தொடர்ந்து மருந்துகளை உட்கொண்டவராக இருந்தார். அத்தகைய மருந்துகள் இல்லாமலே 68 நாட்கள் அவர் பெரிதும் பாதிக்கப்ப டாமல் இருந்தது மற்றுமொரு அதிசயம் என சுகாதார அமைச்சர் மேலும் கூறினார்.

மரியோ கோமஸ் தரையை அடைந்ததும் மண்டி யிட்டு தலை குனிந்து இறைவனுக்கு மட்டுமன்றி, தங்களைக் காப்பாற்ற உயிரைப் பணயம் வைத்து உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இரண்டாவதாக மீட்கப்பட்ட மரியோ செப்புல்வேடா உணர்ச்சிமிக்க குரலில், ''நான் அசாதாரணமான அதிர்ஷ்டம் பெற்றவன் என நம்புகின் றேன். 68 நாட்கள் இறைவனுக்கும் சாத்தானுக்குமிடையில் சிக்கியிருந்த நான் இன்று இறைவனை அடைந்துள்ளேன்'' என்றார்.

சிலி நாட்டின் பிரமாண்டமான தேசியக் கொடியால் தோண்டப்பட்ட குழி மற்றவர்களின் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டிருந்தது. பீனிக்ஸ் கூண்டு முதன் முத லாக இறக்கப்பட்ட போது அக்கொடி அகற்றப்பட்டது. கூண்டு ஒவ்வொரு அங்குலமாக இறக்கப்பட்டபோது சுற்றியிருந்தவர்களின் பிரார்த்தனைகள் வானை முட்டின. இத்தனை முயற்சிகளுக்கும், எதிர் பார்ப்புகளுக்கும் பின் சுரங்கத்தில் மாட்டிக் கொண்ட 33 தொழிலாளர்க ளும் உயிருடன் மீட்கப்படுவார்களா என்ற ஆதங்கம் ஒவ்வொருவர் மனதிலும் இருந்தது. ஜனாதிபதி செபஸ்ரியன் பினேராவும் இதற்கு விதிவிலக்கல்ல.

எனினும் ஒரு சிறு கீறல் கூட இல்லாமல் 33 தொழி லாளர்களும் மீட்கப்பட்டது விஞ்ஞானத்தின் விந்தை யாலா அல்லது அதற்கும் அப்பாலுள்ள கண்ணுக்குத் தெரியாத பிரபஞ்ச சக்தியாலா என்ற கேள்விக்கு இதுவரை பதிலில்லை.

சுரங்கத்தில் அகப்பட்டுக்கொண்ட ஒரு தொழிலாளி யின் மனைவி நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்தார். தரைக்குக் கீழ் தந்தை 624 மீற்றர் தூரத்தில் சிக்கி இருந்த போது பிறந்த பெண் குழந்தைக்கு அதன் தாய் எலிஸபெத் என்று பெயரிட்டார். இக்குழந்தை யின் பிரசவத்தையும் வைக்கப்பட்ட பெயரையும் தந்தைக்குத் தெரியப்படுத்திய போது அங்கிருந்த அவர் தனது வாழ்த்தையும் மகிழ்ச்சியையும் தெரிவித் ததுடன் பிள்ளையின் பெயரை எஸ்பெ‌ன்சா என மாற்றுமாறு கேட்டுக்கொண்டார். எஸ்பென்சா என்ற பெயருக்கு சிலி மொழியில் நம்பிக்கை என்று அர்த்த மாம். நம்பிக்கை வீண் போகவில்லை.

இந்த மீட்புப் பணியில் முன்னின்று உழைத்த அமெரிக்கப் பொறியியலாளர் இந்த அற்புத சம்பவத் தின் கதாநாயகராக விளங்குகின்றார். அவரைக் கட்டிப்பிடித்து நன்றி தெரிவித்த தொழிலாளிகளின் குடும்பத்தினர் சொரிந்த கண்ணீர் அவரது மனித நேயத்துக்கும் ஊண் உறக்கமின்றி 24 மணித்தியாலமும், 68 நாட்களாக உழைத்ததற்க்கும் கிடைத்த ஆத்மார்த்தமான அற்புதமான ஆயுட் காலத்துக்கான பரிசு என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. *

# இலங்கைக்கு தங்கம்



19 ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவின் குத்துச் சண்டைப் போட்டியில் இலங்கை வீரர் மஞ்சு வன்னியாரச்சி தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

புதுடில்லி நகரில் நிறைவடைந்த இறுதிப்போட்டியில் வீரர் பொட்ஸ்வானா வீரர் டிராபெவலோ சியோகோவை 30 வயதான மஞ்சு வன்னியாராச்சி தோற்கடித்தார்.



பொதுநலவாய குத்துச்சண்டைப் போட்டியில் 1950 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை பதக்கம் பெறுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

19 ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கைக்கு கிடைத்த முதலாவது தங்கப்பதக்கம் இதுவாகும்.

இவ்விளையாட்டு விழாவில் இலங்கை சார்பில் பளுதூக்குதல் போட்டியில் சிந்தன விதானகே வெள்ளிப் பதக்கமொன்றையும் சுரேஷ் பீரிஸ் வெண்கலப் பதக்கமொன்றையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# உலகக்கிண்ணப் போட்டியின் பின் சர்வதேசப் போட்டியில் இருந்து ஓய்வு



உலகக் கிண்ணப் போட்டித் தொடருடன் சர்வதேச கிரிக்கட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக முரளீதரன் அறிவிப்பு

எதிர்வரும் வருடம் இந்திய துணை கண்டத்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கட் போட்டித் தொடருடன் சர்வதேச கிரிக்கட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக நட்சத்திர சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரன் அறிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியாவிற்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கட் போட்டித் தொடரின் போது முத்தையா முரளீதரன் டெஸ்ட் கிரிக்கட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார்.

டெஸ்ட் கிரிக்கட் போட்டிகளில் 800 விக்கட்டுகளை கைப்பற்றியமையைப் பாராட்டும் வகையில் முரளீதரனுக்கு சென்னையில் பாராட்டு விழாவொன்று நடைபெற்றது.

உலகக் கிண்ண போட்டித் தொடரில் பங்கு பற்றியதன் பின்னர் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதற்குத் தாம் உத்தேசித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய போட்டித் தொடரிலும், உலகக் கிண்ண போட்டித் தொடரிலும் தாம் பங்குபற்றத் தீர்மானித்துள்ளதாக முரளீதரன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் சார்பில் தொடர்ச்சியாகப் போட்டிகளில் பங்கேற்பதற்குத் தாம் உத்தேசித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியது இந்தியா

ஆஸ்திரேலியா மற்றும் இந்திய அணிகளுகிடையில் நடைபெற்ற இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பெங்களூரில் நடைபெற்றது. டெஸ்ட் போட்டியில் இந்தியா அணி 7 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்று 2-0 என்ற நிலையில் முன்னிலை பெற்றுள்ளது.



இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 478 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 495 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 223 ஓட்டங்களை எடுத்துள்ளது. 207 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா அணி துடுப்பாடியது. இதில் இந்திய அணி சார்பில் புஜரா 72 ஓட்டங்களையும், நட்சத்திர துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கார் 53 ஓட்டங்களையும் பெற்றனர்.

4 ஆவது நாள் ஆட்டத்தில் டெண்டுல்கர் மிகவும் சிறப்பாக விளையாடி இரட்டை சதம் அடித்தார். 337 பந்துகளில் அவர் 200 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 21 பவுண்டரிகளும், 2 சிக்சர்களும் அடங்கும். 171ஆவது டெஸ்டில் விளையாடும் டெண்டுல்கருக்கு இது 6 ஆவது இரட்டை சதம். இதன் மூலம் அதிக இரட்டை சதம் அடித்த இந்திய வீரரான ஷேவாக்கின் சாதனையை சமன் செய்தார். ஷேவாக் 6 இரட்டை சதம் அடித்திருந்தார்.

டெண்டுல்கரின் அதிரடியான ஆட்டத்தால் இந்தியாவின் ஓட்டம் உயர்ந்தது. இந்தியாவின் ஸ்கோர் 486 ஓட்டங்களாக இருக்கும்போது டெண்டுல்கர் 214 ஓட்டத்தில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து இந்தியா விக்கெட்டுக்கள் சரிந்தன. அடுத்து 9 ஓட்டங்களுக்குள் இந்தியா அனைத்து விக்கட்டுக்களையும் இழந்தது. இறுதியில் ஆஸ்திரேலியாவ்வ விட இந்தியா 17 ஓட்டங்கள் அதிகம் எடுத்துள்ளது.

# உங்கள் நெருங்கிய நண்பன் மோசமான எதிரி ஆகலாம்

உங்கள் மிக நெருக்கமான நண்பன் ஒரே நொடியில் உங்களுடைய மிக மோசமான எதிரியாக முடியுமா?

'மொபைல் காஷியராக உங்கள் பேர்ஸில் இடம் பிடித்திருக்கும் கிரெடிட் கார்ட் அல்லது ஏ.ரி.ம். கார்ட் தொலைந்தால், அதுதான் உங்கள் வில்லன் நம்பர் வன்!

தொலைந்த கார்ட்டுகள் வில்லங்க நபர்களின் கைகளில் சிக்கினால், உங்கள் கணக்கில் இருக்கும் மொத்தப் பணத்தையும் இழக்கும் அபாயம் அதிகம்! அதிலும் இப்போது எல்லாம் உங்கள் கார்ட் தொலைய வேண்டும் என்ற அவ்சியம் கூட இல்லை. பெற்றோல் செட், சூப்பர் மார்க்கெட் போன்ற இடங்களில் நீங்கள் கார்ட் மூலம் கட்டணம் செலுத்த உங்கள் கிரெடிட் கார்ட்டைக் கொடுக்கும் ஒரு சில நொடிகளே போதுமானது!

சென்னை மாநகர பொலிஸ் சைபர் கிரைம் கூடுதல் துணை கமிஷனர் டாக்டர் சுதாகர் இதுபற்றிய விளக்கம் அளிக்கிறார்.

''உணவகம், சூப்பர் மார்க்கெட் போன்ற வணிக நிறுவனங்களில் கிரடிட் கார்ட் மூலம் பணம் செலுத்த நீங்கள் கொடுக்கும் கார்ட்டை இயந்திரத்தில் ஸ்வைப் செய்வார்கள். அப்போது கார்ட்டில் உள்ள தகவல்கள் அந்த இயந்திரம் மூலமாக வங்கிக்குச் சென்று பரிவர்த்தனையைத் தொடரலாமா என்பதை முடிவு செய்யும். அந்த இயந்திரம் போலவே கார்ட்டில் உள்ள தகவல்களைப் பிரதியெடுக்கும் இன்னொரு இயந்திரம் இருக்கிறது. அதை ஸ்கிம்மர் என்று சொல்வார்கள். கார்டை ஸ்வைப் செய்யக் கொடுத்துவிட்டு நீங்கள் அதைக் கவனிக்காமல் இருக்கும் சந்தர்ப்பத்தில், மறைவிடத்தில் இருக்கும் ஸ்கிம்மர் இயந்திரத்தில் ஒரு முறை உங்கள் கார்ட்டைத் தேய்த்துவிட்டால், தேவையான தகவல்களை அந்த இயந்திரம் பிரதி எடுத்துவைத்துக்கொள்ளும். ஒரே ஒரு ஸ்கிம்மர் இயந்திரத்தில் 100 கார்ட்டுகளின் தகவல்களைப் பதிந்துகொள்ள முடியும். பிறகு, அந்தத் தகவல்களை வைத்து டம்மி கார்ட் தயாரிப்பார்கள். சம்பந்தப்பட்ட வங்கியில் தங்களின் கைக்கூலியாக வேலை செய்யும் நபர் மூலம், கார்ட் உரிமையாளர்பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். அந்த டூப்ளிகேட் கார்ட் மூலம் ஏ.டி.எம். இல் பணம் எடுக்கமுடியாது. ஆனால், ஆன்லைன் வர்த்தகம் மூலம் விமான - ரயில் டிக்கெட் பதிவது, ஷாப்பிங், விண்டோ மூலம் பொருட்கள் வாங்குவது போன்ற காரியங்களை மேற்கொள்ளலாம். வங்கியில் உள்ள இவர்களின் பார்ட்னர் மூலம் 'வன்டைம் பாஸ்வேர்ட்' பெற்று பரிவர்த்தனைகளை முடித்துவிடுவார்கள். மாதாந்திர வங்கி ஸ்டேட்மெண்ட் மூலமாகவோ அல்லது கணக்கில் பணம் குறைவதை உணரும் போதோதான் இந்த மோசடியை கார்டின் நிஜ உரிமையாளர் உணர்ந்து கொள்ள முடியும். ஆக, நீங்கள் உங்கள் கி ரெடிட்/டெபிட் கார்ட்டை மற்றொரு நபரிடம் கொடுக்கும்போது மிகவும் உஷாராக இருங்கள்!'' என்கிறார் சுதாகர்.



இந்திய வங்கி மோசடிகளைக் கண்காணிக்கும் பிரிவில் பணியாற்றிவிட்டு, தற்போது போலிஸ் அகாடமியில் சூபரின்டென்னாகப் பணியாற்றிவரும் எம்.பன்னீர்செல்வம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பட்டியல் இடுகிறார்.

**வாடிக்கையாளர்களுக்கு**

''தொலைந்த அல்லது தகவல் திருடப்பட்ட கார்டுகள் மூலம் எ.ரி.எம்களில் பணம் எடுக்க முடியாது. ஆனால், பொருட்கள் வாங்கும்போது, பின் நம்பர் தேவைப்படாது என்பதால், கிரடிட் கார்ட்டை எடுத்தவர்கள் எவ்வளவு செலவு செய்ய முடியுமோ அவ்வளவும் செய்துவிட்டு, கார்ட்டைத் தூக்கிப்போட்டுவிடுவார்கள். அதனால், கார்ட் தொலைந்துவிட்டது என்று நீங்கள் உணர்ந்த உடனேயே, வாடிக்கையாளர் சேவை மையத்துடன் தொடர்புகொண்டு, உங்கள் கார்ட்டை நிறுத்திவிடுங்கள். பொதுவாக, உங்கள் கார்ட்டின் எண், பாதுகாப்பு எண் மற்றும் காலாவதி ஆகும் வருடம், மாதம் போன்ற தகவல்களை யாருடனும் பகிர்ந்துகொள்ளாதீர்கள். அதன் மூலம் ஒன்லைன் மோசடிகள் எளிதில் சாத்தியமாகும். கார்ட்டை ஸ்வைப் செய்யக் கொடுக்கும் போது மிகவும் கவனமாக இருங்கள். ''பாரம்பரியம் மிக்க நிறுவனத்தில்தான் பொருள் வாங்குகிறோம்!'' என்ற எண்ணத்தில் அசட்டையாக இருக்காதீர்கள். அங்கு வேலை செய்யும் யாரோ ஒரு பணியாளர் தில்லாலங்கடிபேர்வழியாக இருந்தால் சிக்கல்தான். வங்கியின் வாடிக்கையாளர் சேவையில் இருந்து அழைக்கிறோம் என்று கேட்டால்கூட, உங்கள் பாஸ்வேர்ட், பின் நம்பர் போன்ற ரகசியத் தகவல்களைக் கொடுக்காதீர்கள்!'' என்கிறார் பன்னீர்செல்வம்.

# நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்

சுபாஷ் சந்திரபோஸ்... இந்தியர்களின் ஆயுதக் கையாளுமையை உலகறியச் செய்தவர். இந்தியாவுக்கு என முதல் இராணுவத்தைக் கட்டமைத்தவர். காந்தியை எதிர்த்த காங்கிரஸ் கலகக்காரர். தன் மரணத்தையே மர்மமாக்கியவர். அவரது வாழ்க்கையின் திறந்த பக்கங்களில் இருந்து...

★ ஜனவரி 23, 1897ஆம் ஆண்டு ஜானகிநாத் போஸ் - பரபாவதி தேவி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். குடும்பத்தின் 14 குழந்தைகளில் 9 ஆவது குழந்தை போஸ்!

★ கல்கத்தா மாநிலக் கல்லூரியில் படிக்கும்போது, இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களைச் சொன்னதால், பேராசிரியர் ஒடென் என்பவரைத் தாக்கினார் போஸ். அதற்காக, கல்லூரியில் இருந்து நீக்கப்பட்டார். சுதந்திரப் போராட்டத்துக்கான நேதாஜியின் முதல் அடி அது!

★ ''லண்டனில் எனக்குக் கிடைத்த ஒரே சந்தோஷம் என்ன தெரியுமா? வெள்ளைக்கார சேவகர்கள் எனது ஷூக்களுக்கு பொலீஷ் போட்டுக் கொடுத்ததுதான். அது ஓர் அற்ப மகிழ்ச்சியை அளித்தது. மற்றப்படி வெள்ளையர்களின் ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவை எனக்குப் பாடமாக அமைந்தன!'' - ஐ.சி.எஸ். தேர்வு எழுத லண்டன் சென்று திரும்பியதும் இப்படிச் சொன்னார் நேதாஜி!

★ ஐ.சி.எஸ். தேர்வில் தேறிய போஸ், லண்டனில் பொறுப்பை ஏற்றிருந்தார். அப்போதுதான் இந்தியாவில் ஜாலியன் வாலாபாக் படுகொலைக் கொடூரம் அரங்கேறியது. அது அவருக்குள் விடுதலை வேட்கையைத் தூண்டிவிட, 1921 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, இந்தியா திரும்பினார்!

★ சித்தரஞ்சன் தாஸ்தான் நேதாஜியின் குரு. அவரின் வழிகாட்டுதலில்தான் காங்கிரஸில் இணைந்தார். 'ஸ்வராஜ்' என்ற பத்திரிகையிலும் பணியாற்றினார்!

★ 'குருதியைக் கொடுங்கள். உங்களுக்கு விடுதலையைத் தருகிறேன்!' என்று இவர் உரக்கக் கூவிய பிறகுதான் இளைஞர்கள் பலர் சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுக்க ஆர்வமுடன் முன் வந்தார்கள்!

★ ''நான் தீவிரவாதிதான். எல்லாம் கிடைக்க வேண்டும். அல்லது ஒன்றுமே தேவை இல்லை என்பதுதான் எனது கொள்கை!'' - 1938 ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது இப்படி முழங்கினார்!

★ போஸ், காங்கிரஸ் தலைவரானதும், மகாகவி ரவீந்திரநாத் தாகூர் அவரை சாந்திநிகேதனுக்கு அழைத்துப் பாராட்டு விழா நடத்தினார். அப்போதுதான் போஸுக்கு 'நேதாஜி' என்ற பட்டத்தை அளித்தார் தாகூர். 'மரியாதைக்குரிய தலைவர்' என்பது அர்த்தம்!

★ ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குத் தலைமை ஏற்று நடத்திய ஜெனரல் டயரைச் சுட்டுக் கொன்றார் உத்தம் சிங். அதனைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டார் காந்தி. ஆனால், உத்தம் சிங்கைப் பாராட்டி கடிதம் அனுப்பினார் நேதாஜி. காந்திக்கும் நேதாஜிக்கும் இடையிலான உரசலை அதிகமாக்கிய சம்பவம் இது!

★ 1939 இல் இரண்டாவது முறையாக காங்கிரஸ் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டார். நேதாஜியின் செல்வாக்கு உயர்ந்து வருவதை அறிந்த காந்தி, அவருக்கு எதிராக ராஜேந்திர பிரசாத்தையும், நேருவையும் போட்டியிடுமாறு வற்புறுத்தினார். அவர்கள் மறுக்கவே, பட்டாப சீதா ராமையாவை நிறுத்தினார். போஸ் 1,580 வாக்குகளுடனும், சீதா ராமையா 1,371 வாக்குகளுடனும் இருந்தனர். சீதா ராமையாவின் தோல்வி தனக்குப் பெரிய இழப்பு என்று பகிரங்கமாகவே காந்தி தெரிவித்து உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினார். அதனால், அவரைச் சமாதானப் படுத்த, நேதாஜி காங்கிரஸ் கட்சியில் இருந்து விலக்கப் பட்டார். அப்போது அவர் ஆரம்பித்ததுதான் 'போர்வர்ட் பிளாக்' கட்சி!



★ பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு இருந்த சுபாஷ், 1941 ஜனவரி 17 அன்று தப்பினார். பெஷாவர் வழியே காபூல் தொட்டு, கைபர் கணவாய் வழியாக நடந்தே ஆப்கானிஸ்தானை அடைந்தார். பிறகு இத்தாலிக்குச் சென்று, இந்துகுஷ் கணவாய் வழியாக ரஷ்யாவில் நுழைந்து, மாஸ்கோ சென்றார். இப்படி 71 நாட்கள் பயணித்து இறுதியில் அவர் பெர்லின் அடைந்ததை *'Great Escape'* என்று சிலாகிக்கிறது வரலாறு.

★ ஆயுதப் போராட்டம் மூலம் இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் சர்வாதிகாரி ஹிட்லரைச் சந்தித்தார் நேதாஜி. 'இந்தியாவின் வருங்கால சர்வாதிகாரியை வரவேற்பதில் பெருமைகொள்கிறேன்!' என்று ஹிட்லர் கை குலுக்க, 'வருங்கால சுதந்திர இந்தியாவை உருவாக்க மட்டுமே உங்கள் உதவி நாடி வந்திருக்கிறேன்!' என்று உடனே பதில் அளித்தார் நேதாஜி!

★ திருமணம் செய்துகொள்வதில்லை என்ற முடிவில் இருந்தார். ஆனால், 1934 இல் ஆஸ்திரியப் பெண்மணி எமிலி ஷெங்கலைச் சந்தித்ததும், அவர் மனதில் காதல் துளிர் விட்டது. இரண்டு ஆண்டுக் காதலின் சாட்சியாகப் பிறந்தவர்தான் அனிதா. ஜெர்மனியில் இருந்து நீர் மூழ்கிக் கப்பல் மூலம் ஜப்பான் செல்லும் சூழலில் விடை பெற்றதுதான் எமிலியுடனான இறுதிச் சந்திப்பு!



★ ஜெர்மனியில் இருந்த போது இவர் ஆரம்பித்த 'இந்திய சுதந்திர அரசு' என்ற அமைப்புக்கு, ஜெர்மன் அரசு நிதி உதவி அளித்தது. 1944 ஆம் ஆண்டின் இறுதியில் அந்தக் கடனைக் கழிக்கும் விதமாக, இந்திய நாட்டு மக்களிடம் திரட்டப்பட்ட நிதியில் இருந்து 50 லட்சம் யென் பணத்தை டோக்கியோவில் இருந்த ஜெர்மன் தூதரிடம் அளித்தார் நேதாஜி!

★ 'இன்னும் உயிரோடு இருக்கும் சுபாஷ் சந்திரபோஸ் பேசுகிறேன்!' - இப்படித்தான் நேதாஜியின் முதல் வானொலி உரை தொடங்கியது. 1944 இல் 'ஆசாத் ஹிந்த்' வானொலியில் உரை நிகழ்த்தியபோதுதான் மகாத்மா காந்தியை, 'தேசப் பிதா' என்று முதன்முதலில் அழைத்தார். 'ஆசாத் ஹிந்த்' என்றால் 'சுதந்திர இந்தியா' என்று பொருள்!

★ காந்திக்கும் போஸுக்கும் கொள்கைரீதியாக வேறுபாடு இருந்தாலும், மனதளவில் அன்பைப் பொழிபவர்களாகவும் இருந்தனர். எப்படி சுபாஷ், காந்தியை 'தேசபிதா' என்று அழைத்தாரோ, அப்படியே, காந்தி, போஸை 'தேச பக்தர்களின் பக்தர்' என்று அழைத்தார்!

★ சிங்கப்பூரில் 1942 ஆம் ஆண்டு மோகன் சிங் என்பவரால்தான் முதன்முதலில் இந்திய தேசிய இராணுவம் அமைக்கப்பட்டது. அது ஜப்பானியப் படைகளால் சிதைக்கப்பட்டது. மீண்டும் 1943 இல் நேதாஜியின் தலைமையின் கீழ் கட்டமைக்கப்பட்டது!

★ தனது இந்திய தேசிய இராணுவத்துக்குத் தாரக மந்திரமாக 'ஜெய் ஹிந்த்...' அதாவது, 'வெல்க பாரதம்' என்ற சொல்லைப் பரவலாக்கியவர் நேதாஜி. அந்தச் சொல்லை நேதாஜிக்கு அறிமுகப்படுத்தியவர் செண்பகராமன்பிள்ளை என்ற தமிழர்!

★ பர்மாவில் மேஜர் ஜெனரல் ஆங் சான் என்னும் புரட்சித் தளபதி தலைமையில் பர்மியப் புரட்சி இராணுவம் ஜப்பானியரை எதிர்த்துப் போராடியது. அந்தப் புரட்சிப் படையை ஒடுக்க நேதாஜியின் உதவியை ஜப்பானியர் கேட்டனர். ஆனால், நேதாஜி மறுத்தார். அதற்கு அவர் சொன்ன காரணம், 'இந்திய தேசிய இராணுவம் என்பது ஒரு கூலிப் படை அல்ல!'

★ இந்திய தேசிய இராணுவத்தில் நேதாஜியின் பட்டாலியனின் கீழ் 600க்கும் அதிகமான தமிழர்கள் இருந்தார்கள். 'அடுத்த பிறவியில் தமிழனாகப் பிறக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்!' என்று அன்று நெகிழ்ந்தார் நேதாஜி!

★ பெண்களை இராணுவத்தில் பங்கேற்கச் செய்தது முக்கியமான வரலாற்று நிகழ்வு. காந்தி எப்படி பெண்களை அகிம்சையின் வடிவமாகப் பார்த்தாரோ, அதற்கு நேர்மாறாகப் பெண்களைப் பாவித்தார் நேதாஜி!

★ 1943 இல் நேதாஜியின் படை வெள்ளையர்களிடம் இருந்து அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளைக் கைப்பற்றியது. அவற்றைக் கைப்பற்றியவுடன், நேதாஜி செய்த முதல் வேலை அந்தத் தீவுகளுக்கு 'ஷாஹீத்' (தியாகம்) மற்றும் 'ஸ்வராஜ்' (சுயராஜ்யம்) என்று பெயர் மாற்றியதுதான். அந்தத் தீவுகளுக்கு ஆளுநராக தமிழர் ஒருவரைத்தான் நியமித்தார். அவர் கேணல் லோகநாதன்!

★ டோக்கியோவில் நடைபெற்ற கிழக்கு ஆசிய மாநாட்டில் நேதாஜி உரையாற்றி முடித்ததும், எழுந்த ஜப்பானியப் பிரதமர் டோஜோ, ''இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, நேதாஜி அந்நாட்டில் எல்லாமுமாக இருப்பார்!'' என்றார். உடனே நேதாஜி, ''சுதந்திர இந்தியாவில் யார் எல்லாமுமாக இருப்பார் என்பதை இந்திய மக்கள்தான் முடிவு செய்வார்கள்'' என்றார். ஜனநாயகத்தின் மீதும், மக்களாட்சியின் மீதும் அவருக்கு இருந்த அளவற்ற நம்பிக்கைக்கு இது ஒரு சான்று!

★ 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 ஆம் திகதி போர்மோசா தற்போது தைவான் வழியாக மஞ்சூரியா செல்ல, நேதாஜி தன் தோழர் ஹபீப்புடன் விமானத்தில் ஏறினார். ஆகஸ்ட் 18 ஆம் திகதி தைபேயில் விமானத்தில் ஏற்பட்ட கோளாறினால் நேதாஜி இறந்தார் என்று சொல்லப்படுகிறது. ஆனால், தைவான் அரசாங்கமோ அப்படி ஒரு விபத்தே நடக்கவில்லை என்கிறது. இதுவரை 12 கமிஷன்கள் வைத்து விசாரித்தும் ஒரு பயனும் இல்லை. நேதாஜியின் மரணம் இன்றும் மர்மம்!

★ 'ஓர் இந்தியனின் புனித யாத்திரை' இவர் எழுதி முற்றுப் பெறாத சுயசரிதை. 1937 இல் எழுத ஆரம்பித்தார். 1921 வரை தன் வாழ்வில் நடந்த சம்பவங்களை எழுதினார். 'என்னுடைய நம்பிக்கைத் தத்துவம்' என்று தலைப்பிட்டு தனியே ஒரு கட்டுரையுடன் சேர்த்து இவர் எழுதியது 10 அத்தியாயங்கள் மட்டுமே! ★

## மாதிரிக் கவிதைகள்

பூக்கள் தூவி....
அஞ்சலியும் செய்யப்படுகிறது
அர்ச்சனையும் செய்யப்படுகிறது

★ ★ ★

இறக்கைகளை
வெட்டிவிட்டு - இன்னும்
முளைக்கவில்லை என்றால்
நியாயமா....?

★ ★ ★

வயல் நிலங்களில்
எலும்புகளைப் புதைத்து விட்டு
குருதியைத் தெளித்தால்
மனிதர்கள் முளைப்பார்களா?

★ ★ ★

கடைசி அழுகை என்று நினைத்து
ஒவ்வொரு முறை அழுதாலும்
கண்ணீர் முடிவதில்லையே!

★ ★ ★

பால்மாவின் விலையைக்
கருத்தில் கொண்டே
குழந்தைகளின் எண்ணிக்கையும்
தீர்மானிக்கப்படுகிறது....

★ ★ ★

எனது கிராமம்
அழகிய கிராமம்
அடிக்கடி - நீ
வந்து போவதால்...

★ ★ ★

உன்னைப் பலமுறை
தொட்டிருக்கிறேன்....
தோட்டத்தில்
பூக்களை ஆயும் போது....

★ ★ ★

இடம்பெயர்ந்த பறவைகளின்
ஈரக் கனவுகள்
வறுமையின் வெப்பத்திற்கு
ஆவியாகிவிட்டன!

★ ★ ★

இருட்டுக்கு பழகிய கறையான்
வெளிச்சத்தை
இரை என அரித்துக்
கொண்டிருக்கிறது

★ ★ ★

நிறம் ஒன்று
என்பதற்காக - குருதியை
குங்குமமெனத்
தொட்டுக் கொள்வதா...?

★ ★ ★

விடுதலை விருட்சங்களின்
நிழலிலே வாழ்ந்து
சிரிக்கிறது
வன்முறைச் செடிகள்

★ ★ ★

பனித்துளி புல்லோடு
உறவு கொள்கையில்
அதைப் பார்க்கும் சூரிய ஒளி
எரிச்சலில் உறிஞ்சுவதில்லையா...?
மனித வாழ்க்கையும் இப்படித்தான்!

★ ★ ★

மனிதாபிமானம் மறந்து போன
அதிகார சூறாவளியை - எதிர்த்து
தாக்குப் பிடிக்குமா...
மெல்லிய அகதிச் செடிகள்?

[மாதிரிகள் தொடரும்]

நெடுந்தீவு முகிலன்

# கே.பி. மாறியது ஏன்?

நாடு கடந்த தமிழீழ அரசின் முதல் பிரதமராக அறிவித்துள்ள உருத்திர குமாரனை விகடன் செய்தியாளர்கள் பேட்டி கண்டபோது...

**"நாடு கடந்த தமிழ் ஈழ அரசை சட்ட விரோத அரசாக இலங்கை அறிவித்து இருக்கிறதே?"**

"இலங்கை அரசின் பயத்தையே இது வெளிப்படுத்துகிறது. இலங்கை அரசின் சட்டங்கள், தமிழர்களின் சம்மதமும் பங்களிப்பும் இன்றி நிறைவேற்றப்பட்டவை. தமிழர்கள் அவற்றை சட்டங்களாக என்றுமே ஏற்கவில்லை. நாடு கடந்த தமிழ் ஈழ அரசாங்கம் அவர்களின் சட்டங்களுக்கு முரணாக இருப்பதாகச் சொல்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. எமது அரசாங்கம் அனைத்து நாடுகளின் சட்டங்களுக்கும், குறிப்பாக அனைத்துலக மனித உரிமை சட்டங்களுக்கும் பொருந்துவதாகவே அமைக்கப்பட்டு உள்ளது. இந்த சட்டங்களை ஓர் ஆயுதமாக ஏந்திய வண்ணம், தமிழ் ஈழ மக்களுக்கான சுதந்திரத் தமிழ் ஈழ அரசை அமைப்பதற்காக எமது அரசாங்கம் அயராது உழைக்கும்!"

**"நாடு கடந்த தமிழ் ஈழ அரசு, இன்று இலங்கை அரசுக்கு ஆதரவாகிவிட்ட கே.பி-யின் சிந்தனையில்தான் முதலில் உருவெடுத்ததாகப் பரபரப்பு கிளம்பி வருகிறதே?"**

"மே மாதம் 19ஆம் திகதிக்குப் பின்னர் தோற்றம் பெற்ற புதிய சூழலில், தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் அடுத்த கட்டம் குறித்த நகர்வுகளை முன்னெடுப்பதற்கு தாயகத்திலும் புலத்திலும் உள்ள அரசியலாளர்கள், அறிஞர்கள் ஒன்றுகூடி விவாதித்தே இந்த 'அரசாங்கம்' என்ற அரசமைப்பை உருவாக்குவது என்ற முடிவுக்கு வந்தோம். இதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பின் அனைத்துலக உறவுகள் பொறுப்பாளர் என்ற பொறுப்பு நிலையில் இருந்து, கே.பி. களம் அமைத்துத் தந்தார். அதே வேளை, இந்த அமைப்பு உருவாக்கப்படும் முறையிலும், செயற்படும் முறையிலும் சுயாதீனமாகவே இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டையும் அவர் ஏற்றுக்கொண்டார். அந்த அடிப்படையில், இதை உருவாக்கும் முயற்சிக்குத் தலைமை தாங்க, நான் உடன்பட்டேன். மலேசியாவில் கே.பி. கைது செய்யப்பட்டு இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்ட பின்னர், நாடு கடந்த தமிழ் ஈழ அரசாங்கம் தொடர்பாக அவருக்கு எந்த சம்பந்தமும் இல்லை. எமது அரசாங்கம் வெளிப்படையாக... தனது அமர்வுகளில் மக்களும் அவதானிப்பாளர்களாகப் பங்கு பெறக்கூடிய வகையில் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. மக்களால் நேரடியாக வாக்களித்துத் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முடிவுக்கு ஏற்பவே இது தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது!"

**"கே.பி-க்கு மிக நெருக்கமானவராக உங்களைச் சொல்கிறார்கள். இலங்கை அரசின் கைப்பாவையாக மாறி அவர் பரப்பும் கருத்துகளை எப்படிப் பார்க்கிறீர்கள்?"**

"நான் போராட்டத்துக்குத்தான் நெருக்கமானவன். உண்மையில் கே.பி. அனைத்துலக உறவுகள் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர், மிகக் குறுகிய காலமே அவருடன் எனக்குத் தொடர்பு இருந்தது. அவருடன் மட்டுமல்ல... அரசியல் துறைப் பொறுப்பாளர் நடேசன், அனைத்துலகத் தொடர்பகப் பொறுப்பாளர் காஸ்ட்ரோ ஆகியோருடன் இதே காலப் பகுதியில் தொடர்புகள் இருந்தன. மக்கள் மீது இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்டு வந்த இனப் படுகொலையை, எவ்வாறு தடுத்து நிறுத்தலாம் என்பதே இந்தத் தொடர்புகளுக்குக்காரணமாக இருந்தன. சிங்களத்தின் பிடியில் உள்ள கே.பி-யால் சுதந்திரமாக இயங்க முடியாது. இலங்கையின் சிறைகளுக்குள் இருக்கும் எவராலும் தமிழ்த் தேசியத்துக்குப் பங்காற்ற முடியாது!"



உருத்திரகுமாரன்

**"நாடு கடந்த தமிழ் ஈழ அரசின் பிரதமராக எப்போது தமிழகத்துக்கு வரப்போகிறீர்கள்?"**

"அதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான சக்தி தமிழக மக்களுக்கு உண்டு என்றே நான் கருதுகிறேன்!"

**"விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் - இந்நாள் தலைவர்கள், நாடு கடந்த தமிழ் ஈழ அரசை ஆதரித்து உங்களிடம் பேசினார்களா?"**

"தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தை... நாடு கடந்த தமிழ் ஈழ அரசாங்கத்தின் ஊடாக அடுத்த கட்டம் நோக்கி முன்னெடுக்க விரும்பும் அனைவரும் எங்களின் முயற்சியை ஆதரிக்கிறார்கள். உங்கள் கேள்வியின் நோக்கத்தை இந்த வார்த்தைகள் பூர்த்தி செய்யும் என நினைக்கிறேன்!"

# 'இதில்' இல்லை இன்னும் விழிப்புணர்வு

அந்த மாலை நேரத்தில் வழக்கத்தை விட கூடுதலான பரபரப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது சென்னை நகரில் உள்ள அந்த பிரதான பஸ் நிலையம். பாடசாலைக்கு விடுமுறைவிட்டதால் அவனது ஒரே மகனை, மனைவி சொந்த ஊருக்கு அழைத்துச் சென்றிருந்தாள். இதனால் சில நாட்களாக பிரமச்சாரியாக வலம் வந்து கொண்டிருந்தான் அசோக். அவனும் அந்த மாலை வேளையில் பரபரப்பான பஸ் நிலையத்தில் ஆஜராகி இருந்தான். கூடவே, நண்பர்கள் இருவரும்!

'மச்சான்... வழக்கமா உன் முகத்துல காணாத சந்தோஷம் இன்று தெரியுதே...' என்று நண்பன் உசுப்பேற்றி விட, 'குடும்ப வாழ்க்கையை மறந்து ஒருசில நாட்கள் பிரமச்சாரியாக இருக்குறதே தனி சுகம்டா' என்று மனதுக்குள் கிடந்த வெளியிட முடியாத பாத்தை சொல்லித்தொலைத்தான்.

அசோக் செம குஷியில் இருப்பதை புரிந்து கொண்ட அவனது நண்பர்கள் இருவரும், குறிப்பிட்ட ஸ்டார் ஹோட்டலில் உள்ள பாருக்கு அன்று இரவு சென்று குடித்து கும்மாளமிடுவது என்று பேசிக்கொண்டனர். பாரில் எல்லா செலவையும் ஏற்பதாக அசோக்கே சொல்லிவிட்டதால் அவனது நண்பர்கள் ஏகத்துக்கும் குஷியானார்கள்.

அப்போதுதான் அந்த அழகான இளம்பெண் அசோக்கின் பார்வையில் 'கிளிக்' ஆனாள். அவளது பொன்னிற மேனியில் இருந்து புறப்பட்ட ஒருவித 'ப்ளாஷ்'தான் அவனது கவனத்தை திசை திருப்பியது. அவளது கழுத்தை கூர்ந்து பார்த்தான். தாலியோ, மஞ்சள் கயிறோ இல்லை. பான்சி நகை ஒன்றை மட்டும் அணிந்திருந்தாள். காதிலும் அப்படியே. அவள் அணிந்திருந்த சேலையும் பன்சி ரகம்தான். அவளது ப்ளாட் ஹீல்ஸும் கொஞ்சம் பளபளக்கத்தான் செய்தது.

அந்த இளம்பெண்ணின் உச்சி முதல் உள்ளங்கால் வரை தனது பார்வையை ஓடவிட்ட அசோக்கிற்கு ஒரு 'பெக்' அடித்தது போல் 'கிக்' ஏறியது. 'இந்த பார்வைக்கே இப்படி என்றால் ...' என்று எண்ணியவன், அவளை மீண்டும் ஒருமுறை பார்வையால் பருகி திருப்திப்பட்டுக் கொண்டான். இவன் தன்னைத்தான் 'சைட்' அடித்துக் கொண்டிருக்கிறான் என்பதை அந்த அழகியும் கண்டுபிடித்துவிட்டாள். அவனை இன்னும் போதையேற்ற வேண்டும் என்று நினைத்த அவள், அவனுக்கு கவர்ச்சி விருந்து படைப்பதற்கு இதமாக திரும்பி நின்று கொண்டாள்.

'லோ ஹிப்' ஆக இறங்கிப்போய் இருந்த அவளது ஆடை அசோக்கை இன்னும் கிறக்கம் கொள்ளச் செய்தது. அருகில் நின்ற நண்பர்களை மறந்துவிட்டு அவளை தனது கமெராகண்களால் பதிவு செய்து, அதை பிரிண்ட் எடுக்காமலேயே ரசித்துக் கொண்டிருந்த அசோக்கை சட்டென்று திரும்பிப் பார்த்தாள் அவள்.

தான் அவளை ரசிப்பதை மறைக்க முயன்ற அசோக், அவள் திடீரென்று வீசிய புன்னகையால் தலை நிமிர்ந்து கொண்டான். நீ மட்டும் வருவாயா? என்று கேட்பதுபோல் பார்த்தாள். நண்பர்களை உடன் வைத்து கொண்டு இவளை கரெக்ட் செய்ய முடியாது என்று அவசரத்தில் கணக்கு போட்ட அசோக், 'மச்சி... ஒரு நிமிஷம்... இதோ வந்து விடுகிறேன்...' என்று 'ஜூட்' விட்டவன், தனியாக நகர்ந்து சென்ற அந்த இளம்பெண்ணை பின்தொடர்ந்தான்.

ஆள் இல்லாத ஆட்டோவில் ஏறி அமர்ந்தவள், சற்றே குனிந்து திரும்பி அசோக்கை வருமாறு சைகை காண்பித்தாள். அவனும் ஆட்டோவை நெருங்க, அவள் சற்று தள்ளியமர்ந்து அவனை தன்னருகில் அமருமாறு கூறினாள்.



அவனை அறியாமலேயே ஆட்டோவில் அமர்ந்தான் அசோக்.

"நான் சொல்ற இடத்துக்கு வாறீங்களா? அல்லது நீங்க சொல்ற இடத்துக்கு நான் வரணுமா?' -அவள் கேட்க... அசோக்கால் சட்டென்று முடிவெடுக்க முடியாமல் இன்ப தவிப்பில் திணறினான். உடனே அவள், 'உங்க இடத்துக்கே நான் வாறேன்...' என்று சொல்லி முடிக்கவும், ஆட்டோ டிரைவர் தனது வீட்டில் வந்து அமரவும் சரியாக இருந்தது.

சுமார் 2 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்த ஆட்டோ, நகருக்கு ஒதுக்குப்புறமாக இருந்த அந்த லொட்ஜ் முன்பு போய் நின்றது. அங்கே அந்தப்பெண்ணால் அவனுக்கு சந்தோஷம் திகட்டத் திகட்ட வழங்கப்பட்டது. சில ஆயிரங்களை கொடுத்துவிட்டு திரும்பினான்.

வீட்டிற்கு வந்த பிறகுதான், அந்த இளம்பெண்ணால் தான் ஏமாற்றப்பட்டது எப்படி? தனக்கும் அவளுக்கும் நிகழ்ந்த செக்ஸ் உறவின்போது தான் ஆணுறை அணிந்து கொள்ள மறந்தது எப்படி? என்று யோசித்தான். நடந்த சம்பவத்தில் சில விஷயங்கள் அவனுக்கு மர்மமாகவே இருந்தன. ஒரு மாதத்திற்கு பிறகு, தனக்கு எய்ட்ஸ் இருக்கிறதா என்று பரிசோதித்து, முடிவு நெகட்டிவ் ஆக வந்த பிறகுதான் நிம்மதி பெருமூச்சு விட்டான் அவன்.

இப்படித்தான் இன்றைய இளைஞர்கள், பெண்களுடன் 'அந்த' விஷயத்தில் தடுமாறுகிறார்கள் என்று சொல்கிறது, சமீபத்தில் இந்தியாவில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று.

செக்ஸ் மற்றும் அதனால் ஏற்படுகிற பெண் கருத்தரித்தல் குறித்து ஆண்கள், பெண்கள் இடையே இந்த கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. திருமணம் ஆன மற்றும் திருமணம் ஆகாத இளைஞர்கள், இளைஞிகள் இதில் பங்கேற்றனர்.

உடலுறவின்போது என்னென்ன பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றுகிறீர்கள்? கருத்தடை சாதனம் பயன்படுத்தினீர்களா? எச்.ஐ.வி. எப்படி தொற்றுகிறது என்று தெரியுமா? என்கிற விழிப்புணர்வு கேள்விகளுடன், அவர்களது திருமணத்திற்கு முந்தைய செக்ஸ் அனுபவங்கள் பற்றியும் கேள்விகள் கேட்டனர்.

ஆய்வில் பங்கேற்றவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர்கள் எய்ட்ஸ் பற்றியும், அது தொற்றும் விதம் பற்றியும் தெரிந்து வைத்திருந்தனர். ஆனால், எச்.ஐ.வி. தவிர்த்து பிற பால்வினை நோய்கள் பற்றிய விழிப்புணர்வு அவர்களிடம் குறைவாகவே இருந்தது. 31 சதவீத ஆண்களும், 12 சதவீத பெண்களுமே அதுபற்றி தங்களுக்கு தெரியும் என்று கூறியிருந்தனர். மற்றவர்கள் தெரியாது என்று கைவிரித்து விட்டனர்.

கருத்தடை சாதனங்கள் பற்றிய கேள்விகளுக்கு ஆர்வமாகவே பதில் அளித்தனர். ஆணுறை மூலம் பாதுகாப்பான உடலுறவு வைத்துக்கொள்ளலாம், எய்ட்ஸ் வராமல் தடுக்கலாம் என்ற விழிப்புணர்வை 77 சதவீத ஆண்களும், 39 சதவீத பெண்களும் பெற்றிருந்தனர். வாய் வழியாக உட்கொள்ளும் கருத்தடை மாத்திரை பற்றிய விஷயத்தில் ஆண்கள் கொஞ்சம் தடுமாறித்தான் போய்விட்டனர். 20 சதவீத ஆண்கள் மட்டுமே அது பற்றி தங்களுக்கு தெரியும் என்றனர். பெண்களில் 24 சதவீதம் பேர் கருத்தடை மாத்திரை பற்றி நன்கு தெரிந்து வைத்துள்ளதாக கூறினர்.

திருமணம் ஆனவர்களிடம், 'திருமணத்திற்கு முன்னர் இந்த விழிப்புணர்வு பற்றி தெரியுமா?' என்று கேட்கப்பட்ட போது 'தெரியாது' என்று கைவிரித்து விட்டனர். அவர்களில் 22 சதவீத ஆண்களும், 6 சதவீத பெண்களும் செக்ஸ் மற்றும் கருத்தடை தொடர்பான விஷயங்களை கேள்விப்படவே இல்லை என்று அப்பாவியாகச் சொன்னபோது, இந்த காலத்திலும் இப்படி இருக்குதா? என்று மூக்கின் மேல் விரலை வைத்தனர், ஆய்வாளர்கள்.

ஆக, கூட்டிக் கழித்து கணக்குப் போட்ட அவர்கள், இந்திய ஆண்களும், பெண்களும் கருத்தடை சாதனங்கள் மற்றும் செக்ஸ் விழிப்புணர்வு பற்றி தெரியாமலேயே திருமண வாழ்க்கைக்குள் நுழைகின்றனர் என்ற முடிவுக்கு வந்தனர்.

திருமணத்திற்கு முன்னரான செக்ஸ் உறவு பற்றிய கேள்விக்கு பதில் அளித்தவர்களில் ஆண்கள்தான் பெரும்பான்மையினர் 74 சதவீத ஆண்கள் தங்களது காதலியோடு பழகியதாகத் தெரிவித்தனர். அவர்களில் நான்கில் ஒரு பகுதியினரே காதலியுடன் செக்ஸ் உறவில் ஈடுபட்டதாக வாய் திறந்தனர். பெண்களைப் பொறுத்தவரை, ஐந்தில் 3 பேர் காதலர்களுடன் காதல் வளர்த்ததாக கூறினர். ஆனால், அவர்களில் 10 சதவீதம் பேரே காதலனுடன் உடலுறவில் ஈடுபட்டதாக தெரிவித்தனர்.


மேலும், திருமணத்திற்கு முன்பு காதலியுடனோ அல்லது விலை மாதுடனோ அல்லது ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சந்தித்த முன்பின் தெரியாத பெண்ணுடனோ உறவு கொண்ட ஆண்களில் பெரும்பாலானவர்கள், தாங்கள் பாதுகாப்பற்ற உறவில் ஈடுபட்டதை ஒப்புக்கொண்டனர். அதேபோல், பெண்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தாங்கள் விரும்பாமலேயே அந்த உறவில் ஈடுபட்டதாக தெரிவித்தனர். ஆக, எங்கேயோ போய் கொண்டு இருக்கிறது இந்த உறவு. இந்த விஷயத்தில் இன்றைய இளைஞர்களிடம் போதிய விழிப்புணர்வு இன்னமும் ஏற்படவில்லை என்பதையே மேற்படி ஆய்வு உணர்த்துகிறது. *

## சொற்சிலம்பம் போட்டி இல. 439

சொற்சிலம்பம் 439 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித்திணம் 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் நவம்பர் 07 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 436 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி' 85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

### சொற்சிலம்பம் போட்டி இல. 439



**இடமிருந்து வலம்**

1. பிரிப்பு 4. அவஸ்தை 6. தப்பு 7. கவிதை பாடுபவன் 9. பாடுபவரின் குரலுக்கு அல்லது இசைக் கருவியின் ஒலிக்கு ஆதாரமாக எழுப்பப்படும் ஒலி 10. கழுவு 11. நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புக் கொண்ட உயர்மட்ட அமைப்பு அல்லது குழு 12. உயிர்/சூடான நீரிலிருந்து மேலெழும் வாயு 14. ஓர் உரிச்சொல் 15. மதிப்பு/கௌரவம் 16. காலின் அடிப்பகுதி படும் வகையில் காலைப் பதித்தல் 17. ஆலமரம் 18. கட்டுவதற்கு உபயோகிக்கப்படுவது. 19. குழவி கொண்டு மசாலா முதலிய பொருட்களை அரைக்கப் பயன்படும் நீள் சதுரக்கல்.

**மேலிருந்து கீழ்**

1. ஓர் இடத்தில் எழுந்தருளியுள்ள தெய்வத்தின் மேல் பாடப்படும் பத்துப் பாடல்கள் 2. சிறுபறவை 3. ஒரு சிறு கிரகம் 4. ஆறு சுவைகள் 5. நாளைக் குறிக்க கலண்டர் காட்டும் எண் 8. நாய் 10. மூக்கிலிருந்து வெடிப்பொலியோடு வெளிப்படும் மூச்சுக் காற்று 11. மிகையான 12. களைப்பு 13. காய், பழங்களுக்குள் இருப்பது 14. கடவுள் - ஒருவரை மரியாதையாகக் குறிக்கப் பயன்படுத்தும் சொல் 17. நதி

### சொற்சிலம்பம் போட்டி இல.437

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 த | 2 பா | 3 ல | 4 தி | ப | ர் | ■ | 5 ந |
| 6 கா | ரி | ய | ம் | ■ | ■ | 7 ப | கை |
| 8 த | ட | ம் | பு | 9 ர | ள் | ■ | ■ |
| ■ | ம் | ■ | ■ | க | ■ | 10 உ | 11 தி |
| 12 தா | ■ | 13 மா | 14 த | ம் | ■ | 15 ப | ற |
| 16 ம | 17 க | மா | யி | ■ | மு | 18 ரி | வு |
| 19 தி | ற | ■ | ர் | ■ | ன் | ■ | கோ |
| ■ | 20 வு | நா | ■ | ■ | 21 பு | ய | ல் |

### பரிசு பெறுவோர்

1. ரஞ்சினி ஜெயரட்ணம்,
21,3/2 A, 1 ஆவது சப்பல் லேன்,
வெள்ளவத்தை.

2. எஸ். சின்னத்துரை,
பிரதான வீதி,
பெரிய போரதீவு.

3. எம். அமல்ராஜன்,
447/5, புளூமெண்டல் வீதி,
கொழும்பு - 13.

### பாராட்டுப் பெறுவோர்

- ம. தில்லைநாதன்,
நீர்வேலி.
- க. நௌசாத்,
ஏறாவூர் - 03.
- ஞானச்செந்தமிழ்ச் செல்வன்,
ஏழாலை.
- ஏ.எம். அப்துல் காதர்,
தெமட்டகொட.
- கே. நிரஞ்சன்,
கல்முனை - 01.
- எ.எம். முஸ்தபா,
ஏறாவூர் - 01.
- பொ. நவசிவாயம்,
யாழ்ப்பாணம்.
- எம்.ஜே. பெர்ணான்டோ,
கொழும்பு - 13.
- ஏ.பி.எம். இர்ஷாட்,
பாலமுனை - 04.
- எஸ்.பி. விஸ்வநாதன்,
மடுல்சீமை.
- திருமதி தி. செல்லத்துரை,
வெள்ளவத்தை.




எஸ். புஸ்பலதா,
ஹட்டன்.


**கேள்வி:** மனதை என்றும் இளமையாக வைத்திருப்பது எப்படி?

**பதில்:** இளமை என்பது காதலோடும் பெண்களோடும் உடல் ஆசையோடும் மட்டும் தொடர்புடைய விடயம் என்று நினைத்து ஏமாறாமல் இருப்பது முதல்படி.

சதீசன்,
கொழும்பு.

**கேள்வி:-** ஏழையின் கோபம், பணக்காரனின் கோபம் என்ன வேறுபாடு?

**பதில்:-** ஏழையின் கோபம் படபடவென்று வெடித்து அத்துடன் அணைந்துவிடும். பணக்காரனின் கோபம் டைம் பொம். வெடிப்பதற்கான அறிகுறியே இல்லாமல், திடீரென குறித்த நேரத்தில் வெடித்து பெரிய நாசத்தை ஏற்படுத்தும்.




பிரதீபன்,
கண்டி.

**கேள்வி:-** அரசியலில் வாய்மை, உண்மை என்பதெல்லாம் உண்டா?

**பதில்:-** அகராதியில் உண்டு.

காண்டீபன்,
யாழ்ப்பாணம்.

**கேள்வி:-** பத்திரிகைச் சுதந்திரம் தற்போது எப்படி உள்ளது?

**பதில்:-** உண்மையை உள்ளபடி எழுதினால் தெரியும்.

சின்னத்துரை,
பண்டாரவளை.

**கேள்வி:-** உலகம் எதனால் நிலைத்து நிற்கிறது பித்தரே?

**பதில்:-** பொறுமையினால் தான். அது மட்டுமல்ல, 'பெண்களாகட்டும், ஆண்களாகட்டும் பொறுமை தான் மிகச் சிறந்த ஆபரணம். பொறுமையைப் போன்ற ஒரு தானம் கிடையாது. பொறுமையைப் போன்ற ஒரு சத்தியம் இல்லை. பொறுமையைப் போன்ற தர்மம் இல்லை' என்று வால்மீகி ராமாயணம் கூறுகின்றது.

ஆர். வசந்தி,
கல்லடி.

**கேள்வி:-** தர்மத்தினால் யார் காப்பாற்றப்படுகிறார்கள்?

**பதில்:-** தர்மத்தைக் காப்பாற்றுகிறவர்கள்.

எஸ். லக்ஷனா,
வவுனியா.

**கேள்வி:-** ஒரு பெண்ணுக்குக் கணவனா, புத்திரர்களா முக்கியம்?

**பதில்:-** நூறு மகன்கள் இருந்தாலும் கூட கணவன் இல்லாத மனைவி எந்தச் சுகத்தையும் காண மாட்டாள். அளவோடுதான் உதவி செய்கிறார் தந்தை. அளவோடுதான் உதவி செய்கிறான் சகோதரன். அளவோடு தான் உதவுகிறான் மகன். ஆனால், கணவனோ எல்லையற்ற உதவிகளைச் செய்கிறான்.

பிரகாஷ் காந்,
அவிசாவளை.

**கேள்வி:-** இன்று மும்முரமாக வியாபாரமாகிக் கொண்டிருக்கும் சேவைத்துறைகளில் முக்கியமானவை எவை?

**பதில்:-** மருத்துவமும், கல்வியும்.

ராமஜெயம்,
சீதுவை.

**கேள்வி:-** செய்யுளின் இலக்கணத்தை ஏன் யாப்பு இலக்கணம் என்கின்றனர்?

**பதில்:-** தோல், குருதி, மச்சை, எலும்பு, சுவேதநீர் ஆகியவற்றாலானது உடம்பு. அதுபோல் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பவற்றால் ஆவது செய்யுள். எனவேதான் செய்யுளின் இலக்கணத்தை யாப்பிலக்கணம் என்கின்றனர்.

எம். பாலகிருஷ்ணன்,
வெள்ளவத்தை.

**கேள்வி:-** அண்மைக் காலமாக இளம் வயதுப் பெண் பிள்ளைகளைக் கற்பழிக்கும் சம்பவங்கள் நிறைய நடக்கின்றன. இதனை முற்றாகத் தடுப்பதற்கு வழி என்ன?

**பதில்:-** இது ஒரு பெண்ணின் மானத்தோடும், உயிரோடும் விளையாடும் பயங்கர விளையாட்டு. மானம் உயிருக்கு சமமானது. மானத்தைப் பறித்தவன் உயிரைப் பறித்தவனாகின்றான்.

முதலில் இந்தக் கற்பழிப்பு எந்த நோக்கத்தோடு நடைபெற்றது என்று ஆராயவேண்டும். சூழ்நிலையின் சாதகமா? மனைவி வெளிநாட்டுக்குச் சென்றிருக்கிறாளா? அதீத காம உணர்வா? பழிவாங்கும் உணர்வா? பெண் பிள்ளைகளின் நடையுடை பாவனைகளில் மிகையான கவர்ச்சியா?

எல்லாவற்றுக்கும் முதலில் குற்றம் நடைபெறுவதற்குச் சாதகமான காரணிகள் களையப்படுதல் வேண்டும். அது எவ்வளவு தூரம் சாத்தியமாக இருக்கும் என்பதை உறுதியாகக் கூற முடியாது.

மறுபக்கத்தில் சூழ்நிலை எவ்வாறானதாக இருந்தாலும், குற்றம் பாரதூரமானதாக இருப்பதால் சவூதி அரேபியாவில் வழங்கப்படும் இஸ்லாமியத் தண்டனைகளில் ஒன்றே இந்தக் குற்றத்தை முற்றாக ஒழிப்பதற்கு உதவும் என்பது எனது நம்பிக்கை. சிறைவாசமோ, அபராதம் விதிப்பதோ ஒரு போதும் தீர்வாக அமைய மாட்டாது.

சின்னச்சாமி,
பதுளை.

**கேள்வி:-** அரசை விமர்சனம் செய்யவும் தாக்கவும் கூடிய துணிவை ஊடகவியலாளர்களுக்கு எமது அரசாங்கம் கொடுக்குமா?

**பதில்:-** எம் நாட்டைப் பொறுத்தவரை அது வெறும் கனவு தான். இந்த விடயத்தில் அதீத துணிவுடைய ஊடகவியலாளர்கள் பலர் மண்ணில் புதையுண்டு போய்விட்டார்கள். ஆனால், இந்தியாவிலோ ஊடக சுதந்திரம் கொடி கட்டிப் பறக்கிறது. ஆசிய ஜோதி ஜவஹர்லால் நேரு ஒரு முறை அவரது உயிர் நண்பரான சங்கர் என்ற கேலிச் சித்திரக்காரிடம் "சங்கர், என்னையும் என் அரசையும் விமர்சனம் செய்யுங்கள். தாக்காமல் விட்டுவிடாதீர்கள்." என்று கூறினாராம். மாபெரும் ஜனநாயக நாடான இந்தியா இந்த வகையில் இலங்கைக்கு முன்மாதிரியாக விளங்குகின்றது.

எச்.எம்.எம். அமீர்,
அட்டாளைச்சேனை.

**கேள்வி:-** மறைந்த எழுத்தாளர் ஜெக சிற்பியைப் பற்றி உங்களுக்குத் தெரிந்தால் இரண்டொரு வரிகள் சொல்லுங்கள் பித்தா?



**பதில்:-** சமூக நாவல்களில் மட்டுமன்றி, வரலாற்று நாவல்கள் எழுதுவதிலும் தனி முத்திரை பதித்தவர் இவர். அவர் எழுதிய திருச்சிற்றம்பலம் என்ற நாவல் ஆனந்த விகடன் நடத்திய நாவல் போட்டியில் முதற் பரிசைத் தட்டிக் கொண்டது. அவர் ஏராளமான சிறுகதைகளையும் எழுதியிருக்கின்றார். அவர் எழுதிய ஓர் இராணுவ அதிகாரியின் தேசப்பற்றை எடுத்துக் காட்டும் 'தெரிஸா வோங்' என்ற சிறுகதை 1960 ஆம் ஆண்டு அமுதசுரபி தீபாவளி மலரில் வெளிவந்தது. அதை அழியாத சிறுகதை என்ற மகுடத்தில் அமுதசுரபி நவம்பர் 2000 ஆம் ஆண்டு இதழில் மீண்டும் வெளியிட்டது.

# புதுக்கவிதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முன்னெடுத்த மரபுப் போராட்டம் தீவிரமடைந்ததன் காரணமாக, கவிதை இலக்கியத்துறையில் புதிய போக்கு உதயமாகியது. இதற்கு பாரதியார் முன்னெடுத்த பாதை வழிகாட்டியதாக அமைந்தது.

''சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது
சொற்புதிது சோதி மிக்க
நவ கவிதை எந்நாளும் அழியாத
மகா கவிதை''

தமிழில் நவீனத்துவம் சார்ந்த ஒரு படைப்புச் சூழல், அதன் தீவிரத் தன்மையுடன் இயங்கிய ஒரு காலகட்டத்தில் பல்வேறு பொறிகளைப் பாரதிக்குப் பின் கண்டுள்ளோம். புதிய பொருள் சார்ந்தும், புதிய சுவை சார்ந்தும் நின்று, புதிய வளம், புதிய சொல்லடுக்குகளுடன் வெளிவரும் ஒரு புதிய கவிதைத்துறையை தமிழ் இலக்கியம் உள்வாங்கிக் கொண்டது. புதுக்கவிதை தோன்றுவதற்குப் பாரதியாரே இலக்கணம் வகுத்தவராகின்றார்.

பாரதியாருக்குப் பின்பு முதல் பரிசோதனையில் ந. பிச்சமூர்த்தி கால்பதித்தார். அவருடன் அக்காலப்பகுதியில் கு.ப. ராஜகோபாலனும் சேர்ந்து புதுக்கவிதைகளைப் படைக்கலாயினர். புதுக்கவிதைகள் என்று இன்று பிரபல்யம் பெற்றுநிற்கின்ற கவிதை பாரதிகாலத்தில் வசன கவிதைகள் என்றே அழைக்கப்பட்டன. ஆரம்ப காலத்தில் பண்டிதவர்க்கத்தினரின் கண்டனங்களுக்கும், காரசாரமான விவாதங்களுக்கும் உட்பட்ட இக்கலைவடிவம், இன்று எல்லோர் மத்தியிலும் மிகுந்த வரவேற்பைப் பெற்று, கவிதைத் துறையில் ஆட்சி செலுத்துகின்றது.

''பாடுகின்றோர் எல்லோரும் கவிஞர் அல்லர்
பாட்டென்றால் பண்டிதற்கே உரிமையல்ல''

என்று வித்துவான் வேந்தனார் தமிழின் மறுமலர்ச்சிப் புது வாழ்விற்குக் குரல்கொடுத்தார். இவர் மரபுவிட்டு விடுதலையாகி நின்று, தமிழ்க் கவிதையுலகில் புதுமைப் புரட்சி நிகழ்த்த தயங்கியதேயில்லை.

தமிழகத்தில் வெளிவந்த சூறாவளி, கலாமோகினி, கிராம ஊழியன், மணிக்கொடி ஆகிய இதழ்களில் புதுக்கவிதைகள் வெளிவந்தன. இலங்கையில் ஈழகேசரி, மறுமலர்ச்சி சஞ்சிகைகளில் வரதர் புதுக் கவிதைகளை எழுதினார். கே.கணேஸ், இராமநாதன் இருவரும் கூட்டாக வெளியிட்ட 'பாரதி' இதழில் மொழிபெயர்ப்புக் கவிதைகளுடன் புதுக் கவிதைகளும் வெளிவந்தன.

முக்கியமாக, தமிழில் புதுக்கவிதை சார்ந்து உருவான ஒரு புத்திலக்கிய எழுச்சி, கவிதை குறித்தும், விமர்சன அணுகுமுறை குறித்தும், புனைவு இலக்கியம் குறித்தும், மரபு கடந்த புத்துணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்ததையும், சி.சு.செல்லப்பா தம்முடைய 'எழுத்து' பத்திரிகையின் மூலம் அவ்வுணர்வுகளுக்கு ஒரு வடிகாலாக அமைந்துள்ளதையும் காணலாம். 'எழுத்து' புதுக்கவிதை வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகித்துள்ளது. சி.சு.செல்லப்பா, க.நா.சுப்பிரமணியம், தர்மு சிவராமு, சி.மணி ஆகியோர் புதுக்கவிதைகளைப் படைக்கலாயினர்.

இலங்கையின் கவிதை வரலாற்றில் சில்லையூர் செல்வராசன், இ.முருகையன், மஹாகவி, எம்.எ.நுஃமான், சண்முகம் சிவலிங்கம், சி.சிவசேகரம் ஆகியோர் புதுக் கவிதை வரலாற்றில் கால்பதித்தவர்கள். ஏ.இக்பால், ஷெல்லிதாசன், மு.பொன்னம்பலம், மேமன் கவி ஆகியோருடன் இளம் பெண் கவிஞர்களான அனார், மாதுமை, மலரா போன்றவர்களும் புதுக்கவிதைகளையே எழுதிவருகின்றனர்.

கவிதை சிறிதாக இருக்கலாம். ஆனால், அவற்றைச் சொல்லும் முறையும் ஆழமும் தனிமையானது என்று கூறும் மு.பொன்னம்பலம், 'பேசாது' என்ற கவிதையை உதாரணத்துக்குத் தந்துள்ளார்.

''பேசாது
எந்தத் தூய கோயிலுள்ளும்
தூசு நுழையும்
ஆயினும் உள்ளெரியும் தீபம்
பேசாது
அதன்
ஒளிர் வில்
உள் நுழையும் தூசே
தானொளிர்ந்து பேசும்.''




மரபுக் கவிதைகள் எழுதுகின்றவர்களும், அவற்றை வாசிப்பவர்களும் குறைந்து நிற்கின்ற இக்காலப்பகுதியில், ஏராளமான புதுக் கவிதைக் கவிஞர்களும் வாசகர்களும் பெருகியுள்ளமை அதன் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக அமைந்தமை கண்கூடு. தமிழகத்தில் தோற்றம் பெற்ற 'வானம்பாடிகள்' புதுக்கவிதைத் துறைக்குத் தமது பங்களிப்பை கணிசமான அளவு வழங்கியுள்ளனர். அந்தவகையில் நவபாரதி, காமராசன், அக்னிபுத்திரன், விடிவெள்ளி, புவியரசு, சிற்பி போன்றோர் முக்கியமானவர்கள்.

இன்று இந்தியாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் வெளிவருகின்ற சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளின் வார ஏடுகளிலும் புதுக்கவிதைகளே கோலோச்சுகின்றன. நிலைபெற்ற இலக்கிய வடிவமாக புதுக்கவிதைத்துறை வளர்ந்துவருகின்றது. இந்தியாவிலிருந்து வெளிவரும் தரமான இலக்கியச் சஞ்சிகைகளான காலச்சுவடு, உயிர்மை, தாமரை, தீராநதி, யுகமாயினி ஆகிய சஞ்சிகைகள் புதுக்கவிதைகளுக்குப் புத்துயிர் அளித்து வருகின்றன. மூத்த எழுத்தாளர்களான மேத்தா, புதுமை ம.இ.லெ.தங்கப்பா, விக்ரமாதித்யன் நம்பி, விழுப்புரம் த.பலமலய் ஆகியோருடன் பா.வெங்கடேசன், தமிழச்சி தங்கபாண்டியன், லீனா மணிமேகலை, மனுஷ்ய புத்திரன், சாரு நிவேதிதா, குட்டி ரேவதி போன்றோர்களும் இன்று தீவிரமாகக் கவிதை படைக்கிறார்கள். சொற்சுவை, பொருட் சுவை, புதிய வளம் ஆகியவற்றை உள்வாங்கி எழுதப்பட்டுவரும் புதுக்கவிதைகள் தமிழ் இலக்கியத்தில் புது அத்தியாயங்களைத் தோற்றுவித்துள்ளன.

இலங்கையிலிருந்து எஸ்.ஆர்.தனபாலசிங்கத்தை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'நீங்களும் எழுதலாம்' என்னும் கவிதை இதழ் புதுக்கவிதைகளையே தாங்கி வெளிவருகின்றது. செங்கதிர், மல்லிகை, படிகள், ஜீவநதி, பூங்காவனம் ஆகிய சஞ்சிகைகளும் புதுக்கவிதைகளையே பிரசுரித்து வருகின்றன. இன்றைய புதுக்கவிதைகள் அந்தந்தகாலகட்ட உணர்வுகளின் ஆழ்ந்த மனநிலை வெளிப்பாடுகளாகவும் அமைந்துள்ளன.

ஆகவே, புதுக்கவிதைகளின் வரவால் பாமரமக்கள் பெரிதும் பயனடைந்துள்ளமையால், ரசனை கொண்ட வாசகர் வட்டத்தின் பெருக்கம் அதிகரித்துள்ளது. அந்த வகையில் புதுக்கவிதை நிலைபெற்ற ஓர் இலக்கிய வடிவமாகப் பலம்பெற்று நிற்கின்றது. *

# சங்கீதம் படிக்கப்போன கழுதையின் கதை

## பாரதியார் கதை
(சென்றவாரத் தொடர்ச்சி)

கள்வர் - ''அடா, நாம் அவசியம் ஓடிப்போக வேண்டும். நாம் இங்கே திகைப்புடன் விழித்துக்கொண்டு நிற்கிறோமென்பதை அந்த மனிதன் சமிக்கினையாகச் சொல்லுகிறான்'' என்று பேசிக்கொண்டு சிலர் ஓடத் தொடங்கினர். இதற்குள் திருடருடைய சத்தம் இவன் காதிலும் படவே, ''கொல்லைப் புறத்தில் ஏதோ பலர் காலடிச் சத்தமும், முணுமுணுக்கிற சத்தமும் கேட்கிறது. என்னவோ தெரியவில்லை ஒருவேளை திருடராக இருந்தாலும் இருக்கலாம். எதற்கும் போய்ப்பார்ப்போம்'' என்று யோசனை பண்ணிக்கொண்டு வந்தான். வரும்போதே தனது சாஸ்த்ர பாடத்தை மறக்காமல் 'ஆளைக் கண்டால் நரி வாலைக் குழைத்துக் கொண்டோடுமாம் 'போலே போலே' என்று கூவிக்கொண்டு வந்தான். திருடர் தாங்கள் வேறோரிடத்திலிருந்து திருடிக் கொண்டுவந்த நகைப் பெட்டிகளையும், பணப்பெட்டிகளையும் கீழே போட்டு விட்டு ஓடிப்போயினர். இவன் பிறகு வீட்டிலுள்ளாரை எழுப்பி அந்தப் பெட்டிகளைக் காட்டினான். வீட்டிலுள்ளார் 'நடந்த விடயமென்ன?' என்று விசாரித்தார்கள். இவன் நடந்த விடயத்தைச் சொன்னான். அப்போது வீட்டார் இவனாலேயன்றோ திருடர் கன்னம் வைத்துத் தமது வீட்டுப்பொருளைக் கொள்ளையிடாமலும், தமதுடம்பிற்குத் தீங்கு செய்யாமலும் ஓடினார்கள் என்ற நன்றியுணர்ச்சியால் அந்த நகைப் பெட்டிகளையும், பணப்பெட்டிகளையும் இவனுக்கே கொடுத்து விட்டார்கள்.

பிராமணப்பிள்ளை அந்தத் திரவியத்தையெல்லாம் தாயாரிடம் கொண்டு கொடுத்து ''எனக்குக் கல்யாணம் பண்ணிவை அம்மா'' என்றான். அவள் இவனை நோக்கி ''மகனே, உனக்கு இந்த நிதியெல்லாம் எங்கே கிடைத்தது?'' என்று கேட்டாள். இவன் நடந்த விவரங்களையெல்லாம் கூறினான். தாய் மிகவும் மகிழ்ச்சிகொண்டு, அவனுக்கு ஒரு பெரிய பிரபுவின் மகளைக் கல்யாணம் செய்வித்தாள். பிறகு எல்லாரும் சௌக்கியமாக நெடுங்காலம் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

என்று சிங்கச்சி காமாக்ஷி கதை சொன்னாள். அப்போது உத்தண்டி ''இந்தக் கதை என்ன நோக்கத்துடன் சொன்னாய்?'' என்று கேட்டான்.

''உன் மனதிலிருந்த ஆயாசத்தை மாற்றி உனக்கு ஆறுதல் உண்டாக்கும் பொருட்டாகக் கதை சொன்னேன், வேறு நோக்கம் ஒன்றுமில்லை'' என்றாள்.

''பார்த்தாயா! நாம் சண்டை தோற்றுமானத்தையும்

# பிராமணப்பிள்ளை நாலு சாஸ்திரம் படித்தகதை

தேசத்தையும் ப்ராணனையும் சத்ருவிடமிருந்து காப்பாற்ற வேண்டுமே. அதற்கென்ன வழி செய்யலாம் என்று கலங்கிக்கொண்டிருக்கிறோம். அந்தச் சமயத்தில் இவள் நம்மிடம் குழந்தைக் கதை பேசுகிறாள்! பார்த்தாயா! பெருச்சாளியாம், கோரையாம், பனை மரமாம், நரியாம்! என்ன பச்சைக் குழந்தை வார்த்தை!'' என்று சொல்லி மிகவும் கோபத்துடன் உத்தண்டி அப்போது ஒரே பாய்ச்சலாக மனைவியின் மீது பாய்ந்து தன் நகங்களை அவளுடைய கழுத்தில் அழுத்தினான். சிங்கக் காமக்ஷி லாகவத்தால் கழுத்தை திமிறிக்கொண்டு தன் கழுத்திலிருந்து இரத்தம் பொழிவதைக் கண்டு கோபத்துடன் தன் முன் வலக்காலால் உத்தண்டியின் முகத்தில் ஓங்கி அடித்தது. உத்தண்டி பெருஞ்சினத்துடன் கண்ணில் தீப்பொறிபறக்க, மீசை துடிக்க, ஹா! என்று கர்ஜனை புரிந்து ''அடிபேயே, உன்னை இந்தக் கணத்திலே கொன்று போடுகிறேன் பார்!'' என்று சொல்லித் தன மனைவியின் கழுத்தைக் கடித்து இரத்தம் குடிக்கலாயிற்று. காமாக்ஷி உத்தண்டியின் காலைப் பல்லினால் கவ்வி இரத்தத்தை உறிஞ்சத் தொடங்கிற்று. அப்போது சண்டையில் உண்டான சப்தத்தைக் கேட்டுக் காமாக்ஷியின் பாங்கிச் சிங்கங்கள் சில அங்கோடி வந்தன. அவற்றைக் கண்டு உத்தண்டியும் காமாக்ஷியும் வெட்டுப் பற்களை மீட்டுக்கொண்டன. உத்தண்டி அந்தப் புரத்தைவிட்டு வெளியே சென்றான். பேய்க்காட்டு விஷயம் இப்படி இருக்க, உத்தண்டியிடமிருந்து அவனுடைய மாமனாராகிய குண்டோதர ராஜன் அரசு செலுத்தும் கடம்ப வனத்துக்கு தூது சென்ற நரிச்சி நல்லதங்கை எப்படியானாள் என்பதைக் கவனிப்போம்.

நரிச்சி கடம்பவனத்துக்குப் போனபோது தன் பல்லக்கு பரிவாரங்களுடன் நேரே குண்டோதர ராய சிங்க மஹாசிங்கருடைய மாளிகையில் போய் இறங்காமல் ஏதோ மனதுக்குள் ஒரு தந்திரத்தை எண்ணித் தனக்கு முந்தியே நட்புடையவளாகிய விருத்திமதி என்ற எருமைச்சியின் வீட்டிலே போய் இறங்கினாள். விருத்திமதி பொன்னங்காட்டரமனைக்கு முன்னொருமுறை சென்றிருந்தபோது அவளுக்கு வீரவர்மராஜன் பலவிதமான பரிசுகள் கொடுத்துத் தனது ராஜபதவியைக் கருதாமல் மிகவும் அன்பான வார்த்தைகள் கூறிவிடுத்ததை அந்த எருமைச்சி தன் வாழ்நாளில் மிகப்பெரிய விசேஷமென்றெண்ணி வீரவர்மனிடம் பேரன்பு பூண்டவளாய் எப்போதும் அவனையே ஸ்மரித்துக் கொண்டிருந்தாள். எனவே, நரிச்சி நல்லதங்கை வந்தவுடன் எருமைச்சி விருத்திமதி அவளிடம் '' வீரவர்மனும் அவனுடைய ராணி மாகாளியும் குழந்தைகளும் சேமந்தானா?'' என்று விசாரித்தாள்.

அப்போது நரிச்சி நல்லதங்கை தான் வீரவர்மனிடமிருந்து பிரிந்து அவனுக்குத் துரோகியாய் உத்தண்டி ராஜனிடம் வேலை பார்ப்பதாகத் தெரிந்தால் எருமைச்சி தன்னைத் துரத்திவிடுவாள் என்று யோசித்து ''ஆம், எல்லாரும் சேமந்தான்'' என்றாள். ''நீ இப்போது நேரே பொன்னங்காட்டிலிருந்துதான் வருகிறாயா?'' என்று விருத்திமதி கேட்டாள்.

நல்லதங்கை ''அன்று; நான் பேய்க் காட்டிலிருந்து வருகிறேன்'' என்றாள்.

விருத்திமதி ''அங்கே எதற்காகப் போயிருந்தாய்?'' என்றாள்.

நல்லதங்கை ''பேய்க்காட்டுக்கும் பொன்னங்காட்டுக்கும் சண்டையென்று நீ கேள்வியுற்றிருக்கக்கூடும். அந்த யுத்தம் நடப்பதை எப்படியேனும் தடுக்க வேண்டுமென்று கருதி, என்னை மாகாளிராணி (வீரவர்மன் பத்னி) சில செய்தி சொல்லிப் பேய்க்காட்டு ராணியாகிய காமாக்ஷியிடம் அனுப்பினாள். வந்த இடத்தில் காமாக்ஷி உங்கள் நாட்டரசனாகிய தன் பிதாவிடம் ஒரு ரகஸ்யமான செய்தி சொல்லி வரும்பொருட்டாக என்னை இங்கே அனுப்பினாள்'' என்றதும்,

''என்ன ரகஸ்யம்?'' என்று விருத்திமதி கேட்டாள்.

நரிச்சி நல்ல தங்கை ''காரியம் நிறைவேறுமுன்னே அதை மிகவும் பிராண சிநேகிதராக இருப்போரிடத்திலேகூட அனாவசியமாகச் சொல்லக்கூடாது. சொன்னால் காரியம் கெட்டுப்போகும். ஆதலால் பொறு, நிறைவேறியபின் சொல்லுகிறேன்'' என்று வாக்களித்தாள். நல்லதென்று சொல்லி விருத்திமதி தன் வீட்டுக்கு விருந்தாக வந்த நரிச்சிக்கு ராஜோபசாரங்கள் செய்தாள். பரிவாரங்களுக்கும் யதேஷ்டமாக ஆகாரம் கொடுத்தாள். (தொடரும்)

# ராசி-பலன்

**17.10.2010 - 23.10.2010**





**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

செயல்களை கலைநுணுக்கத்துடன் செய்யும் மேஷ ராசி அன்பர்களே!

பணிகளில் சிறப்புற மேற்கொள்கின்ற முயற்சி அணி அணியாய் வெற்றிகளை அள்ளிக் கொண்டு வந்து சேர்க்கும். இனிமை மிகும் சொற்களையே என்றும் பேசி உங்கள் இடர்களை களைந்து விடுவீர்கள். மனக்குழப்பமும் தடுமாற்றமும் காண்பீர்கள். முக்கிய விஷயங்களை தள்ளி வைப்பது நல்லது. உத்தியோகஸ்தர்களுக்கு உயர்ந்த பலன் உண்டு. நண்பர்களின் ஆதரவு அதிகரிக்கும். சுயவேலை செய்வோர் கையில் பணம் புரளும். வேலைவாய்ப்புகள் தேடி வரும். கூட்டுத்தொழில் செய்வோர் கூறும் அன்பு மொழியால் ஈட்டும் பொருள் அதிகமாய் வந்து சேரும். குடும்பத்தில் இன்பம் கொழிக்கின்ற காலமாக இந்த வாரம் அமையும். கடன்கள் தீரும். மங்கல நிகழ்ச்சிகள் கைகூடும். பெண்கள் சேமிப்பைச் செலவழிக்கக்கூடிய சூழ்நிலைகள் உண்டாகும்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,5,6. அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்டக்கிழமை: வெள்ளி.




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

அச்சமற்ற உள்ளமும், அறிவுக் கூர்மையும் கொண்ட ரிஷப ராசி அன்பர்களே!

சிந்தனை மிகச்செய்து முயற்சியில் ஈடுபட்டாலும், சில காரியங்களில் மட்டுமே சிறப்புகளைப் பெறுவீர்கள். தாய் வழி உறவுகள் அனுகூலமாக இருக்கும். சிறு பயணத்தால் லாபம் அடைவீர்கள். பழைய கடன்கள் மறைமுகத் தொல்லைகளைத் தரலாம். சுயவேலை செய்பவர்கள் சுலபமாய் முடியும் வேலையையும் சோம்பல் காரணமாக காலக்கணக்கின்றிச் செய்து முடிப்பார்கள். கூட்டு முயற்சியில் குறைவான லாபம் கிடைத்தாலும் வியாபாரம் நடப்பதில் விறுவிறுப்பு உண்டாகும். குடும்பத்தில் கொஞ்சம் குறை நேர்ந்த போதிலும், கோபத்தைக் காட்டாமல் பொறுமையுடன் செல்வீர்கள். செலவுகளைக் குறைத்து சிக்கனத் தைக் கடைப்பிடிப்பீர்கள். சேமிப்பால் பிரச்சினைகளைத் தீர்ப்பார்கள்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,5,9. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: ஞாயிறு.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

கண்ணியமாய் நண்பர்களைக் கவர்ந்திழுக்கும் மிதுன ராசி அன்பர்களே!

நீங்கள் வெற்றிகளை முன்நிறுத்தி விரைந்து செயல்பட்டாலும் சுற்றியுள்ள சூழ்நிலையால் நன்மை ஏற்படாது. மனம் அலைபாயும். மற்றவர் மேல் கோபம் ஏற்படும். செய்யும் செயல்களில் சிந்தை தடுமாறும். நிதானமாகச் செயல்படுவது நல்லது. உத்தியோகம் செய்பவர்கள் உள்ளத்தில் கவலை உண்டாவதால் உற்சாகம் குறையும். ஆதாயம் வந்தாலும், அதிருப்தியில் மனம் உழலும். கூட்டு முயற்சியிலே கோபத்தைக் காட்டாமல் திட்டமிட்டுப் பணிபுரிந்தால் திகட்டாத இன்பம் வரும். குடும்பத்தில் செலவினங்கள் உயர்ந்து, மனம் பேதலிக்கும். சிக்கனப் போராட்டம், செய்கைகளில் தடுமாற்றம் போன்றவற்றால் இல்லத்தில் இருப்பவர் மேல் எதற்கும் கோபம் வரும். கோபத்தைக் குறையுங்கள். குழப்பங்கள் தீர்ந்து விடும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: பச்சை. அதிர்ஷ்டக்கிழமை: புதன்.





**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

பாகுபாடின்றி எல்லோரிடமும் அன்பு பாராட்டும் கடக ராசி அன்பர்களே!

இந்த வாரம் நீங்கள் செய்கின்ற செயல்களில் சிறப்புகள் வந்து சேர்ந்திடும். தென்திசைச் செய்தி ஒன்று தென்றலாகத் தேடிவரும். என்றாலும் சில காரியங்களில் தளர்வுகள் நேரலாம். தக்க பெரியோர் துணை, தடை அகற்றி வெற்றியைத் தரும். சேரும் பணவரவால் செலவுகளைத் தீர்த்திடலாம். சொல்வாக்கால் செல்வாக்கை அடைவீர்கள். திட்டமிட்டபடி பண வரவு ஏற்பட்டாலும் செலவுகளில் கவனம் தேவை. குழந்தைகளால் குடும்பத்தில் குதூகலம் தலைதூக்கும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும் நிலையுண்டு. கூட்டுத்தொழில் நல்ல லாபத்தைக் கொண்டு வரும். குடும்பத்தார் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வடைவீர். பணி செய்யும் பெண்களுக்கு பணவரவு அதிகரிக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 6,8,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: வெள்ளி.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

முன்னேறத் துடிக்கும் மனம் பெற்ற சிம்ம ராசி அன்பர்களே!

உங்கள் முன்னேற்ற முயற்சிகளில் முழுப் பலனும் காணாமல் சிலவற்றில் மட்டுமே சிறப்பான பலன் பெறுவீர்கள். உறவினரும், நண்பர்களும் உடன் இருந்து கை கொடுப்பர். பண வரவு தாமதத்தால் பணிகளில் தேக்கம் வரும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிட்டும். பணிகளில் சிறிய மாறுதல் உண்டு. சுயவேலை புரிபவர்கள், சோதனையால் தெளிவார்கள். வரவிருந்த வேலைகளும், வாயில் வரை வந்து செல்லும். கூட்டுத்தொழிலில் சிறு குழப்பங்கள் தலை தூக்கும். குடும்பத்தில் சிறுகடன்கள், தொல்லை தந்து இடர் விளைவிக்கும். புதுக் கடன்கள் பெற்று கடன் தொல்லையைப் போக்க முயற்சி செய்வீர்கள். பெண்களுக்கு உறவினர் வருகையால் மனமகிழ்ச்சி பெருகும். பிரிந்த சொந்தங்கள் தேடிவர வாய்ப்புண்டு.

அதிர்ஷ்ட எண்கள்: 1,6,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

சிந்தனை உயர்வும், செயல்களிலே தனித்திறனும் கொண்ட கன்னி ராசி அன்பர்களே!

வடதிசை செய்தி ஒன்று உங்கள் வாழ்க்கையில் வசந்தத்தைத் தரும். வெற்றியைத் தேடி முயற்சிக்கின்ற செயல்களில் சுற்றி வந்து பார்த்தாலும் ஒன்றிரண்டே வெற்றி பெறும். சுயதொழில் வேலைகளில் அவசரம் காட்டுவீர்கள். செய்த வேலைக்கு உரிய ஆதாயம் கிடைத்தாலும் தாமதமாக வந்தடையும். கூட்டுத்தொழில் முயற்சி குறைவான லாபத்தைக் கொண்டு வந்து சேர்க்கும். குடும்பத்தில் தம்பதிகள் ஒற்றுமை கூடி வரும். பணவரவு குறைந்தாலும், பாசங்கள் குறையாது. குடும்பத்தில் கடன் இருந்தாலும், கொடுப்பதற்கும் ஆள் இருக்கும். பெண்கள், பொறுமையால் பெருமை கொள்வர்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,8. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள். அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

பிறரிடம் இனிமையாகப் பழகும் துலாம் ராசி அன்பர்களே!

எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் பெருகும். நாநயத்தால் நாணயத்தைக் காப்பாற்றுவீர். மேலும், செயல்கள் சிலவற்றில் வெற்றிகள் அடைவீர்கள். சிந்தனையை விரிவாக்கி, செய்தவற்றை சிந்தித்தால், தவறுகள் செய்த இடம் தானே விளங்கி விடும். கவனம் சிதறினால் காரியத்தில் தடைகள் வரும். உத்தியோகம் செய்பவர்கள் உயர் அதிகாரிகளை விமர்சனம் செய்யாமல் அடக்கமாக நடந்து கொண்டால் அதிக நலன் பெறலாம். சுயதொழிலில் வேலைகளும், சுலபமாய் பண வரவும் இருக்கும். கூட்டுத்தொழில் சிறப்பாக நடைபெறும். குடும்பத்தில் செலவினங்கள் கூடுதலாக இருந்தாலும், சிக்கனமாய் இருக்க நடவடிக்கை எடுப்பீர்கள். மணமகளைத் தேர்ந்தெடுக்க மகனுக்குப் புத்தி சொல்வீர்கள். பெண்கள் எடுக்கும் முயற்சியால் தடைபெற்ற சுபகாரியங்கள் கைகூடி வரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,8. அதிர்ஷ்ட நிறம்: கருநீலம். அதிர்ஷ்டக்கிழமை: சனி.




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

கலை நுணுக்கத்தோடு காரியங்களைச் செய்யும் விருச்சிக ராசி அன்பர்களே!

உறவினர் வருகையால் மனக்கசப்புகள் விலகும். காரிய சாதனை கைகூடி வரும். நல்ல விஷயங்களில் தடைகள் இருந்தாலும் வெற்றிகளைத் தேடி விரைவாகச் செயல்படுவீர்கள். ஒன்றிரண்டு செயல்கள் மட்டும் வெற்றி தரும். பணவரவால் மனம் மகிழும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் பொறுப்புகளில் மிகுந்த கவனமாக இருந்தாலும், தவறுகள் ஏற்படலாம். சுயவேலை செய்பவர்கள் சுறுசுறுப்பாகப் பணி செய்து, பணம் பார்க்கும் நிலை உண்டு. குடும்பத்தில் சிறுசிறு கடன் தொல்லைகள் இருந்தாலும், அதனால் பிரச்சினை எதுவும் ஏற்படாது. பெண்கள் வார்த்தையில் கவனமாக இல்லாவிட்டால், தேவையற்ற பகையைத் தேடிக்கொள்ள வேண்டி வரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,8. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம். அதிர்ஷ்டக்கிழமை: சனி.




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

கனிவான பேச்சால் அடுத்தவர்களைக் கவரும் தனுசு ராசி அன்பர்களே!

முயற்சியினால் உங்கள் வேலைகளில் வெற்றிகள் பல தேடி வரும். கவலைகள் பறக்கும். தளர்வடைந்த போதிலும், தயங்காமல் பணிபுரிவீர்கள். பண வரவு சரளமாகும். குணமுடைய பேச்சாலே கூடி நிற்போர் மனம் மகிழ்வர். உத்தியோகத்தில் உயர்பதவி தேடி வந்தாலும், அது விரும்பாத இடமாக இருக்கும். சுயதொழிலில் வேலை செய்பவர்களுக்கு மனமகிழ்ச்சி அதிகரிக்கும். கூட்டுத்தொழிலில் லாபம் குவிந்து, உங்கள் மனதில் மகிழ்ச்சி ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். குலதெய்வ வழிபாடு குறித்து ஒரு பயணத்தை ஏற்பாடு செய்வதற்கு இல்லத்தார் விரும்புவர். பெண்களின் கரங்களில் பணம் புரளும். பங்குச்சந்தையில் வியாபாரம் அதிகரித்து லாபங்கள் கூடி வரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,9. அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள். அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்.





**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

நண்பர்களைப் பாசத்தோடு பிணைத்திடும் மகர ராசி அன்பர்களே!

பிரிந்த சொந்தங்கள் தேடிவரக்கூடிய சாத்தியம் உண்டு. காரியங்கள் அனைத்திலும் எதிர்பார்க்கும் வெற்றியை அடைந்திட தீவிரமாக முயற்சிகள் செய்து பலன் காண்பீர்கள். வரவுகள் தடையின்றிக் கையில் வந்து சேரும். வெற்றி தரும் செய்திகள் வீடு தேடி வரும். உத்தியோகஸ்தர்கள் உயர்ந்த பதவியும், உற்சாக சம்பள உயர்வும் பெறுவீர்கள். சுயதொழில் செய்வோர் சுறுசுறுப்பாகப் பணிபுரிவர். கூட்டுத்தொழில் வியாபாரம் ஈட்டுகின்ற லாபத்தால் மகிழ்ச்சி பெருகும். குடும்பத்தில் நாளும் குதூகலத்தை உண்டு பண்ணப் பாடுபடும் பெண்களிடம் பாசத்தைக் காட்டுவீர்கள். செலவுகளைச் சீராக்க சிக்கனத்தை நாடுவீர்கள். பெண்கள் ஒரு நல்ல காரியத்தை முன்னின்று செய்ய வாய்ப்பு உண்டாகும்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,5,6. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: ஞாயிறு.




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

அடுத்தவர் எண்ணங்களை அறிந்து இதமாக நடந்து கொள்ளும் கும்ப ராசி அன்பர்களே!

நீங்கள் செய்யும் முயற்சிகளில் சிலவற்றில் மட்டுமே பொருளாதார லாபம் கிட்டும். மற்றவை வெற்றி பெற மறுமுயற்சி செய்வீர்கள். கைகளில் பணம் சேரக் கால தாமதமாகும். ஆனாலும் செலவுகளோ அடிவாசலில் காத்திருக்கும். என்றாலும் வரவுகளால் செலவுகளைச் சரிசெய்வீர். உத்தியோகஸ்தர்கள் சிறு தவறு செய்தாலும், உயரதிகாரிகளின் உள்ளத்தில் பெரியதாகத் தெரியும். சுயதொழிலில் வேலைகள் மிக அதிகமாக இருந்தாலும், சோர்வு தரும்படியாக ஆதாயம் குறைவாகும். குடும்பத்தில் செலவுகள் குவிந்தாலும், பக்குவமாய் பெண்கள் அவைகளைத் தீர்த்திடுவர். சொந்தங்களின் வீட்டுக்குச் சென்றிருந்த பெண்கள் தகாத சொல் கேட்டு மனத்தாங்கலுடன் திரும்பலாம். ஆகையால் பேச்சுகளை குறைப்பது நல்லது.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,8. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: வெள்ளி.




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

சிறந்த பேச்சால் மலரும் நட்பைப் போற்றும் மீன ராசி அன்பர்களே!

இந்த வாரம் நீங்கள் முயற்சியோடு பாடுபட்டு முன்னேற்றம் பெற்றிட, கால நேரம் பார்த்திடாமல் உழைப்பீர்கள். ஒன்றிரண்டு பணிகளில் மட்டும் நீங்கள் உயர்ந்த வெற்றி காணலாம். காரியங்களில் தாமதமும் வேலையில் குழப்பமும் சேரும். தேவையற்ற பயணங்களைத் தவிர்க்கவும். சுயதொழிலில் வேலைவாய்ப்பு பெருகும். கூட்டுத்தொழில் வியாபாரம் சீராகவே நடக்கும். குறையாத லாபம் வரும். குடும்பத்தில் தொல்லை சில குறுக்கிடவே செய்யும். கொடுக்க வேண்டி உள்ள பணம் கிடைக்கச் சிறிது காலதாமதம் ஆகும். பெண்களால் பிரிந்த சொந்தங்கள் சேர வாய்ப்புண்டாகும்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,5,6. அதிர்ஷ்ட நிறம்: பச்சை. அதிர்ஷ்டக்கிழமை: புதன்.

# இரண்டு மொட்டுக்கள் விரிகின்றன

யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம்பெற்ற சம்பவங்களைப் பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்தத் தொடரில் யோ.புரட்சி எழுதிய 'இரண்டு மொட்டுக்கள் விரிகின்றன' என்ற உண்மைக்கதையின் இரண்டாம் பாகம் வெளிவருகிறது.

**02**

யோ.புரட்சி

யோகேஸ்வரி குடும்பத்தினர் உள்ள நிலைமையில் பதுங்குகுழி வெட்டுவது எப்படி முடியும். ஏதோ கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்பதாய் காளியம்மா கோயிலின் எதிர் கிரவல் வீதியிலே மணல் குவியலோடு சேர்ந்த நாவல் மரத்தருகோடு குடியிருக்கிறார்கள். சற்று உயரமான இயற்கையான மணல் குவியல். சீறி வரும் துப்பாக்கி ரவைகளுக்கு மணல் குவியலில் மறைந்து இருந்து பாதுகாப்பு தேடலாம். முன்பக்கமாக தூர விழும் எறிகணைகளின் சிதறுதுண்டுகளுக்கும் ஓரளவு பாதுகாப்பு இருக்கும். ஆனால், மணல் குவியலின் பக்கவாட்டாக அல்லது பின்புறமாக எறிகணைகள் வீழ்ந்தால் பாய்ந்துவரும் சிதறுதுண்டுகளுக்கும் அந்த மணல் குவியல் பாதுகாப்பு கொடுக்காது. படுக்கும் இடத்தை சாப்பாட்டுக் கோப்பையால் சற்று ஆழமாக்கி விட்டிருக்கிறான் கண்ணா. நாவல் மரத்தின் கீழேயே மூன்று சிறிய கூழாங்கற்களைக் கொண்ட அடுப்பு. மழை வரும்போது அருகிலுள்ள காளி கோயிலுக்கு ஓடிவிடுவது வழமை.

நிவாரணம் பெறுவது, வரிசைக்கு சென்று கஞ்சி பெறுவது உள்ளிட்ட சகல வேலைகளும் கண்ணாதான். சிறு வயதிலேயே குடும்ப பொறுப்பு அவனுக்கு. இந்த நிலையில்தான் வடை சுட்டு விற்கும் எண்ணம் யோகேஸ்வரிக்கு உதித்தது. பருப்பு, மிளகுதூள், உப்பு, சிறிதளவு மஞ்சள் என கூட்டுக்கலவையான வடை.

பலரைப் போலவே கடற்கரைக்குத்தான் காலைக்கடனுக்கு அவர்கள் போவதுண்டு. அந்த மணல் பாங்கான தரையினால் நடந்துபோவது கால் இயலாத யோகேஸ்வரிக்கு மிக சிரமம்தான். அதனால் காலை நான்கு மணிக்கே கண்ணாவும் எழுந்து, மலம் கழிப்பதற்கு அம்மாவை கடற்கரைக்குக் கூட்டிச் செல்வான்.

2009, ஏப்ரல் 30 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் ஐபிசி சந்தியருகோடும் அதற்கு முன்பாக முள்ளிவாய்க்கால் கிழக்கு பக்கமாகவும் இருந்த மக்கள் குவியல் குவியலாக முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதிநோக்கி ஓடுகிறார்கள். மிக மோசமாகவே அந்தப்பகுதிகளிலே யுத்தம் பரவிவிட்டது. காயங்களும், இறப்புக்களும் தாராளமாகவே இடம்பெற்ற அந்த சூழலிலே ஐபிசி சந்தியை அண்டி இருந்தவர்கள் அங்கிருந்து கிழக்கு பக்கமாக காளியம்மா கோயிலடியையும் தாண்டி முள்ளிவாய்க்காலின் முனைப்பகுதியும் வட்டுவாகலும் சேரும் இடம்நோக்கி நகர்ந்தனர்.

எறிகணைகளிலும், துப்பாக்கிச் சூடுகளிலும் சிக்குண்டு கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் ஆங்காங்கே கிடக்கின்றன. உயிருக்காக போராடும் காயப்பட்டவர்களும் எந்த மீட்புமின்றி அந்தந்த இடங்களிலே துடிதுடித்துக் கொண்டிருக்கிறார்கள். காளியம்மா கோயிலடியையும் தாண்டி மக்கள் செல்வதால் யோகேஸ்வரி குடும்பமும் போய்த்தான் ஆகவேண்டும் எனகின்ற நிலை. இந்தப் பொழுதில்தான் ஐபிசி சந்தியில் இருந்து ஒரு கிலோமீற்றர் முன்பாக உள்ள புனர்வாழ்வுக் கழகம் இருந்த இடமருகே சிறு களஞ்சியம் உடைபட்டு கிடப்பதாகவும் அரிசி, மாவு எடுக்கக் கூடியதாக இருப்பதாகவும் கண்ணாவுக்கு தகவல் கிடைக்கிறது.

''அம்மா... அம்மா.. நான் குறுக்குப் பாதையால போய் மாவு ஏதும் இருந்தால் எடுத்திட்டுவாறன். வந்தபிறகு நந்திக்கடல் பக்கம் போவம்''

''வேணாம்டா செல்லம், அங்காலை நிறைய ஷெல்லடி, திருப்பி பிரச்சினை... கஞ்சி சரி வேண்டி குடிக்கலாம். அங்க வேணாம்டா...''

''அம்மா அந்தா விசுவராசா அண்ணாக்களும் போயினம். நானும் போய்வாறன். ஒன்டும் இல்லாமல் போய் என்ன செய்யிறது''

மறுப்பதா? அனுப்புவதா? தாயுள்ளம் தவித்தது. விசுவராசா, சோதிராசா ஆகிய பெரியவர்களோடு சேர்ந்து காளிகோயில் அருகான நாற்சந்தியில் இருந்து ஐபிசி சந்தி நோக்கி செல்லும் பாதைவழியே மாவு எடுக்கும் நோக்கோடு கண்ணாவும் விரைகிறான். நாவல் மரத்தடிக்கு கீழே தாயும், நிரோசாவும் இருக்கிறார்கள்.

'வேகமா மா எடுத்தால் கொஞ்சநாள் நந்திக்கடல் பக்கம் போய் சமாளிக்கலாம்...' பலவித சிந்தனைகள் கண்ணாவுக்குள். பலரோடு சேர்ந்து அந்த சின்னவனும் தன்வீட்டு பசிபோக்க மாவு எடுப்பதற்காய் விரைந்து கொண்டிருக்கிறான். ஒரு கிழிந்த உரப்பை அதற்குள் மெழுகு சீற் எனப்படும் ஒருவகை இறப்பர் சீற். இருபது நிமிடங்கள்வரை நகர்ந்து இருப்பார்கள். மேலும் நகர முடியாத நிலை, அதிகமாகவே ஐம்பது கலிபர் ரக ரவைகளும், கனோன் எனப்படும் பெரியரக ரவைகளும், நிறையவே எறிகணைகளும் அங்கே சூழ்ந்து கொண்டிருந்தன. விழுந்து விழுந்து படுத்துத்தான் அவர்கள் மாவு எடுக்க வேண்டிய இடம்நோக்கி போய்க்கொண்டிருக்கிறார்கள்.

''டேய் தம்பி...இனி அங்காலை போக ஏலாதடா. இந்த ரவுன்சுகளுக்குள்ளாலை போய் சாமான் எடுத்திட்டு மீண்டுவர ஏலுமோ தெரியாது. இந்த லொறிக்கு அடியில வா ...'' இப்படி சொன்னார் மா எடுப்பதற்கு வந்த நடுத்தர வயதுக்காரர். மக்கள் எவரினதும் நடமாட்டங்கள் அங்கு இல்லை. மக்களோடு வாழ்ந்த நாய்கள்கூட நாக்கை தொங்கவிட்டபடியே அதிவேகமாக முள்ளிவாய்க்கால் கிழக்கு பக்கமாக ஓடிக்கொண்டு இருக்கின்றன. சாமான் எடுக்கப்போன கண்ணா உள்ளிட்டவர்கள் அந்தப் பகுதியிலே கைவிடப்பட்டு இருந்த லேலண்ட் ரக லொறிக்கு கீழே இருந்தபடி நிலைமையை பார்க்கிறார்கள். எங்கோ வீழ்ந்த எறிகணையொன்றின் சிதறல் லொறியில் 'டொப்' என வந்து பட்டது. என்ன முடிவு எடுப்பது என லொறிக்கு அடியில் இருந்து அவர்கள் யோசித்துக்கொண்டிருந்த போதுதான் மாவு எடுக்கப்போக வேண்டிய பக்கமிருந்து ஒரு ஐயா தன் சைக்கிளை ஓட்டி வருகிறார். லொறிக்கு அடியில் இருந்தவாறே நடுத்தர வயதுக்காரர் கேட்டார் ''ஐயா, என்னமாதிரி மாவு அங்காலை எடுக்கலாமோ?'' என்று. ''என்ன விசரா உங்களுக்கு. நானே போகேலாமல் திரும்பி வந்துட்டன். கொஞ்ச சோப்புகள் உதில கிடந்தது. அதைத்தான் கட்டீட்டுவாறன்... அதைவிட அங்காலை பக்கம் மாவும் இல்லை தம்பி...'' சொல்லியவாறே ஐயா சைக்கிளை வேகமாக மிதிக்கிறார்.



கண்ணாவும் மற்றவர்களும் மீளத்திரும்புகிறார்கள். காளியம்மா கோயில் எதிர்வீதி நாவல்மரத்தடி இருப்பிடம் நோக்கி கண்ணா போகிறான். வேகமாக அம்மாவையும், தங்கையையும் கூட்டிக்கொண்டு நந்திக்கடல் பக்கமாக போவதே அவனின் யோசனை. இதோ இடத்தை அண்மித்து விட்டான். மக்களின் செறிவு பெரிதாக காணப்படவில்லை. அதிர்ந்தான் கண்ணா. நாவல் மரத்திற்கு கீழே ஓர் உடல் பழைய பாயால் மூடப்பட்டு கிடக்கிறது. பாய் மேலேயும், அதன் அருகிலேயும் குருதியை இலையான்கள் மொய்த்தபடி இருக்கன்றன. அது கண்ணாவின் தாய் யோகேஸ்வரி என்பதை கண்ணாவுக்கு எப்படித்தான் அயலவர்கள் சொல்வார்கள். அந்தச் சடலம் மட்டுமல்ல எட்டுவரையான சடலங்கள் அங்கே கிடக்கின்றன. மா எடுப்பதற்கு கண்ணா சென்ற இந்த இடைப்பகுதியில் இங்கே வீழ்ந்த மூன்று எறிகணைகளில் ஒன்றிலேயே யோகேஸ்வரியும் கொல்லப்பட்டு விட்டாள். தொடையிலே காயமடைந்த தங்கை நிரோசா பலரோடு இணைந்து முள்ளிவாய்க்கால் மாஞ்சோலையடி தற்காலிக வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு விட்டாள். யோகேஸ்வரியின் தலைப்பகுதி மிகவும் கோரமாக சிதைவடைந்து இருந்ததனால் அவளின் காலை மட்டுமே பாயை விலக்கி கண்ணாவுக்கு காட்டினார்கள் அயலவர்கள். அவனை போன்ற சிறுவன் அந்த கோலத்தை காணக்கூடாதுதான். இப்போது அந்த குடும்பத்திலே கண்ணாவும், நிரோசாவும் மட்டுமே.

இந்த நிலையில்தான் கண்ணாவும், நிரோசாவும் ஏதும் வழியின்றி யோகேஸ்வரியின் ஒன்றுவிட்ட தங்கை ஜீவராணியும் தஞ்சமானார்கள். ஆரம்பத்தில் அன்புமழை பொழிந்த ஜீவராணியிடம் இப்போது கண்ணாவையும் நிரோசாவையும் ஒரு சுமையாக பார்க்கத் தொடங்கிவிட்டாள். எப்போதும் அவர்களில் எரிந்து விழுகிறாள். அந்த சிறுசுகள் என்ன செய்யும்.

* * * * *

அருணாச்சலம் நலன்புரி நிலையம். வெளிநாட்டு தொண்டர்களின் கூட்டு முயற்சியில், யுத்தத்தில் தாய் தந்தையரை இழந்த பிள்ளைகளை பொறுப்பெடுத்து வளர்க்கும் சிறிய திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுவதை கண்ணாவின் சித்தப்பா அறிகிறார். மிகவும் சிறப்பான இடம்தான் அது. கண்ணாவையும், நிரோசாவையும் அந்த இல்லத்திலே சேர்த்துவிட கதைத்துவிட்டார். நாளை கண்ணாவும், நிரோசாவும் வவுனியாவிலே இயங்கும் அந்த இல்லத்திலே இணைக்கப்படுவார்கள். இரவு கண்ணாவின் சித்தப்பா கேட்டார் ''ஏன்டா கண்ணா, அங்க போய் படிச்சு பெரிய ஆளாகி எங்கள பார்ப்பியா'' என்று.

''நான் படிச்சு வேலை செய்து உங்கள, சித்திய எல்லாரையும் பார்ப்பன். வானத்தில இருக்கிற அம்மா நான் என்ன செய்யிறன் என்டு பார்த்துக்கொண்டிருப்பா தானே சித்தப்பா....'' என்றான் கண்ணா. கண்ணாவின் மடியிலே இரண்டு வயது நிரோசா உறக்கத்தில் இருக்கிறாள்.

(முற்றும்)

## குறிஞ்சிக் கோவில்கள்

## வட்டக்கொடை நகர் ஸ்ரீ கதிரேசப்பெருமான்

வட்டக்கொடை வளங்கொழிக்கும் நகரம்-சூழ
வானைத்தொடும் எட்டிமலைச் சிகரம்
பட்டுக்குடைத் தேருலாவில் கொட்டிமேளம் முழங்கவேலன்
வருகை; காட்சித் தருகை!

மேற்குமலை குன்றுகுலம் தோட்டம்- கொழிக்கும்
தேயிலைகள் நல்கிவருந் தேட்டம்
வேற்படைகொள் தங்கவேலன் கந்தவேளை வந்துநெஞ்சே
பாடு; நித்தம் நாடு!

தேயிலைகள் கோயில்மலை மூடும்-- வந்து
தேனருந்தி சிட்டுக்களித் தோடும்
கோலமிகு நீலமயில் வேலவனின் கோயில்மணி
ஒலிக்கும்; உள்ளம் சிலிர்க்கும்!

கீழைமலை உச்சிவானைத் தட்டும்-எங்கும்
கிறிவெற்பு நீர்ச்சுனைகள் கொட்டும்
பாங்குமலை மீதிங்கு ஓங்குபுகழ் கந்தவேளின்
கோட்டம்; நீக்கும் வாட்டம்!

செம்பருத்தி குஞ்சரங்கள் குலுங்கும்- கந்தன்
சீர்கோயில் கீர்த்தியெங்கும் துலங்கும்
சிம்மமீது உமையையும் இடபமீது அப்பனையும்
காண்பாய்; பக்தி பூண்பாய்!

அல்லில்வான் தாரகைகள் ஈர்க்கும்-அந்த
ஆகாய வெளியிலெழில் சேர்க்கும்
மல்லிகைவெண் தாரகைகள் நாள்புலர்ந்தால் சூழக்கோயில்
சிரிக்கும்; வானைப் பலிக்கும்!

ஏறிமேடு வளையுங்கடை வீதி - வந்து
இங்கிருந்து எழுதுவேன்நல் சேதி
ஈரெட்டுப் படிகளேறி வந்துகோயில் கந்தனடி
விழுவார்; உருகித் தொழுவார்!

கவின்மேவும் கூடமிங்கு உண்டு-அள்ளும்
கோவிலவை புரியுமருந் தொண்டு
புவிபுரக்கும் தவிப்பகற்றும் கவிநவிலும் சீர்கோட்டக்
கூடம்; வேண்டும் மாடம்!

- கவிஞர் ஸி.எஸ். காந்தி -
(தொடரும்)

டெங்கென்னும் பிணிபற்றி மானு டத்தை
டேன்சனிலே ஆழ்த்திவிடும்; நுளம்பு கட்கு
தங்குமிடம் தந்துதவும் தளங்க ளைத்தாம்
தற்சமயம் சுத்திகரித் திட்டால் நன்று!
இங்கெம்மை அழிக்குமதன் வீறு தன்னை
இயன்றளவு குறைத்திடலாம்; துணிவு கொள்வீர்!

சுகாதார ஆய்வுரைகள் சுட்டிக் காட்டும்
சுகவாழ்வைப் பேணுதற்குத் தவற லாமோ?
ஆகாதோர் அவற்றைச்செவி மடுப்ப தில்லை
அணுகிவரும் அழிவெதையும் தடுப்ப தில்லை
நோகச்செய் விஷக்கிருமித் தோழ மையை
நேராகத் தாமணைப்போர் அதிகம் நாட்டில்!

## டெங்கை ஒழிப்போம்



சுற்றமொடு சூழ்ந்துதிகழ் சூழல் தன்னில்
செறிந்திங்கு வாழ்வோரும் விழிப்ப டைந்து
தோற்றிவரும் டெங்கென்னும் அரக்க னைத்தான்
துவம்சிக்க ஒருங்கிணைந்து முயலல் வேண்டும்
ஏற்றந்தரும் சுகாதார முறையைப் பேணி
எமைவாட்டும் பிணிகளையாம் ஒழிக்க வேண்டும்!

நித்தமெங்கள் வதிவிடங்கள் சூழல் யாவும்
நீங்காத தூய்மையுடன் துலங்க வேண்டும்
எத்தகைய அனர்த்தங்கள் விளைந்த போழ்தும்
இடரினிலும் சூழலையாம் பேணிக் காப்போம்
சத்துளராய் சேகரித்து என்றும் நாங்கள்
சுகதேகி யாகத்தான் வாழ்தல் நன்று!

- கவிஞர் திருமலை ஏ.ஆர். நாகூர், கந்தளாய் -

## பதினாறு

அகத்திணை ஏழாய்ப் பிரிபடுமாம்
அவ்வாறாமே புறத்திணையும்
அகம் என்றால் அதுவீடாகும்
ஆம், புறமென்பது வெளியாகும்!

வீடும் வெளியும் வாழ்வாகும்
வினையும் ஓய்வும் வாழ்வாகும்
காடும் மலையும் வாழ்வாகும்
கடலும் வயலும் வாழ்வாகும்!

குறிஞ்சி-வெட்சி ஆ நிரையாம்
குவிமுல்லை-வஞ்சி படையாகும்
மருதம்-உழிஞை மதிலாகும்
மா நெய்தல்-தும்பை போராகும்!

பாலை-வாகை வெற்றியதாம்
பருதிணை-காஞ்சி நிலையாமை (பெருந்)
பால் கிளை -பாடான் வாழ்த்தாகும் (கைக்)
பயின்றிடுவோமே பதினாலும்!

தொகையும் பாட்டும் மேற்கணக்காம்
தொடராய் வருவது கீழ்க்கணக்காம்
தொகையும் பாட்டும் பதினெட்டாம்
தொடராய் வருவதும் பதினெட்டாம்!

முப்பத்தாறு நூல்களையும்
முறையாய்க் கற்பவர் சிவ மாவார்
அப்பால் காப்பியம் பத்தென்பார்
அவையும் கற்றால் சொல்வானேன்?

பன்னூற் புலமைப் பண்டிதரே
பட்டமும் வரலாம் வித்துவரே
இந்நூல் எல்லாம் பழந்தமிழே
எனினும் கற்றால் இளந்தமிழே!

தமிழர் தமிழ்நூல் அறிதல் நலம்
தமிழர் பழைமை புரிதல் நலம்
தமிழை அறியாத் தமிழர்களாய்த்
தரணியில் வாழ்தல் சரியாமோ?

- தாமரைத் தீவான் -



## நல்லவொரு வாழ்வு வேண்டும்

நல்லவர்க ளாகவேநாம் வாழ்தல் வேண்டும்
நல்லவையே செயல்களில்நாம் கொள்தல் வேண்டும்
வல்லவர்க ளாய்வாழ்வைத் தொடர்தல் வேண்டும்
வம்பு,பகை, பழியுணர்வை விடுதல் வேண்டும்!

குருதிமழை பொழிதலினி யொழிதல் வேண்டும்
குதூகலமாய் மாந்தரினி வாழ்தல் வேண்டும்
இனப்பிளவும், மதப்பிளவும் மறைதல் வேண்டும்
இவிப்பினவே இல்லையென நிறைதல் வேண்டும்!

சாந்தி,சமா தானப்புறா பறத்தல் வேண்டும்
சகலருக்கும் சௌபாக்கியம் பிறத்தல் வேண்டும்
காந்திமகான் கண்டதொரு பரதம் போன்று
காணும்நிலை இலங்கையிலும் மலர்தல் வேண்டும்!

மண்வளமும் கடல்வளமும் சிறப் பாயும்
நதிவளமும் உள்ளவர்கள் நாங்கள்; மேலும்
மனவளமும் உள்ளவராய் மாறி நாளை
மாநிலத்தில் பேர்,புகழும் பெறுதல் வேண்டும்!

மூவினமும் ஓரினமாய் கரங்கள் கோர்த்து
மூண்டபகை அண்டாமல் சேர்தல் வேண்டும்
புத்தருடன், சித்தர்களும், கர்த்தர், காந்தி
நித்திலத்தில் நபிபெருமான் புகன்ற வாறு
சித்தமுடன் அத்தனையும் தொடர்தல் வேண்டும்
இந்தரையில் இலங்கையினி மிளிர்தல் வேண்டும்!

ஆகமங்கள் அத்தனையும் மொழிந்த வாறு
ஆயகலை மேலோங்கச் செய்தல் வேண்டும்
சிங்களமும் செந்தமிழும் செழித்தல் வேண்டும்
மங்களமாய் மூவினமும் இருத்தல் வேண்டும்!

- ஏறாவூர் தாஹிர் -






## பசி

வறுமைக் கோட்டில்
வாழ்க்கைச் சுழன்றதால்
சிறைபட்டுப் போனது-அவள்
திருமணம் சீதனத்திற்குள்!

கறை பட்டவள் போல்
இச்சமுதாயம் அவளை
குறை கூறித் திரிகிறது
கொச்சை மொழியில்....!

முதலில் அப்பா பின் அம்மா
விதியின் அழைப்பிற்கு....
மிதி வெடியில் காலிழந்த சோதரர்
மதியிழந்த நிலையில் அறையிலே...

சிறிய சேமிப்புகளும்
கால ஓட்டத்தில் கரைந்திட
உறவுகளும் நாட்டமின்றி ஒதுங்கிட
வாழவழியின்றி வாடுகின்றாள்...!

பசிவடிவில் வறுமை
வயிற்றைச் சுரண்டிட
புசிக்க வழி தேடி
கசிந்த விழிகளுடன் அவள்...!

பணக்காரர் ஒருவரின் வீட்டிற்கு
வேலைக்காரி ஆனாள்...!

பணக்காரரோ அவர்
உடல்பசி போக்க
பணத்தைக் காட்டி அவள்
இடுப்பைச் சுரண்டுகிறார்!

- வேரகேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி -
அக்கரைப்பற்று.



# ஈழத்தமிழ் ஆதரவாளர்கள் அசினை விடுவதாக இல்லை

## தொடர்கிறது போராட்டம்

''இலங்கைக்குச் சென்றது குறித்து நான் பல தடவைகள் விளக்கமளித்த பின்னரும் எனக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவதா'' - இப்படிக் கேட்டுக் கொந்தளித்துள்ளார் நடிகை அசின்.

திரைப்படக் குழுவின் தடையையும் மீறி இலங்கை வந்து 'ரெடி' என்ற ஹிந்திப் படப்பிடிப்பில் பங்கேற்ற அசினுக்கு ஏற்கனவே கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. நடிகர் சங்கப் பொதுக்குழுவில் ராதாரவி, சத்யராஜ் போன்ற மூத்த நடிகர்கள் அசினைக் கடுமையாக விமர்சித்தனர். அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

ஆனால் நடிகர் சங்கக் கூட்டம் கூடியபோது, அசினைப் பற்றிப் பேசப்படவில்லை. அதை சங்கத் தலைவர் சரத்குமார் தடுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், இப் பிரச்சினை பற்றி கூட்டுக்குழு விரைவில் கூடி முடிவெடுக்கும் என்று தயாரிப்பாளர் சங்கத் தலைவர் ராமநாராயணன் கூறியுள்ளார். இந்த நிலையில் மேட்டுப்பாளையத்தில் விஜய்யுடன் அசின் நடித்து வரும் 'காவலன்' படப்பிடிப்பில் சில தினங்களுக்கு முன் திடீர் பிரச்சினை ஏற்பட்டது. இலங்கைக்குச் சென்றதற்கு கண்டனம் தெரிவித்து அசினுக்கு சிலர் கறுப்புக்கொடி காட்டினார்கள். இதுபற்றி அசின் தெரிவித்தவை வருமாறு:-

நான் இலங்கை சென்றது பற்றி பல தடவைகள் விளக்கம் அளித்துவிட்டேன். அதற்குப் பிறகும் எனக்கு எதிராகப் போராட்டம் நடத்தினால் என்ன அர்த்தம். சரி, இந்தப் பிரச்சினையை மீண்டும் எழுப்ப நான் விரும்பவில்லை. கருத்துக் கூறுவதையும் தவிர்க்கிறேன்.- இப்படி அவர் தெரிவித்தார்.



# ஸ்ருதி ஹாஸன் தற்ஸமயம் ஒரு பெண்குட்டி

படத்தின் தலைப்பு ஒரு மாதிரி இருக்கிறதே என யோசிக்க வேண்டாம். கமலஹாஸனின் நெருங்கிய நண்பர் ராஜீவ் குமார் இயக்கும் மலையாளப் படம் தான் இது.

ராஜீவ் குமார் எண்பதுகளில் கமலை வைத்து 'சாணக்யன்' படத்தை எடுத்தவர். இப்போது கமலின் மகள் ஸ்ருதி ஹாஸனை வைத்துப் படம் இயக்குகிறார். அந்தப் படத்துக்குத் தான் 'தற்ஸமயம் ஒரு பெண்குட்டி' எனத் தலைப்பு வைத்திருக்கிறார்.

ஹிந்தியில் நடிப்பை ஆரம்பித்த ஸ்ருதி, அடுத்து தமிழில் '7ஆம் அறிவு', தெலுங்கில் 'ஒன்று' என அனைத்து மொழிகளிலும் வலம் வந்து கொண்டிருக்கிறார்.

இந்த வரிசையில் மலையாளப் படத்தில்தான் நடிக்கவிருக்கிறார். அதைத் தொடர்ந்து கன்னடம், மராத்தி என எந்த மொழியாக இருந்தாலும் பரவாயில்லையாம்... நல்ல பெயரை வாங்கித் தரக்கூடிய வேடங்களென்றால் ஒப்புக் கொள்வதாக ஸ்ருதி கூறியுள்ளார்.

# பார்த்ததும் முத்தமிடத் தூண்டும் நடிகை பிரியங்கா

நடிகைகளில், பார்த்ததும் முத்தமிடத் தூண்டும் அழகி யார்? இப்படி ஒரு போட்டி சமீபத்தில் மும்பையில் நடந்தது. இதில் அமோக வாக்குகளுடன் வெற்றிபெற்ற நடிகை ப்ரியங்கா சோப்ரா. பொதுவாக பெண்களின் அழகுக்காக பெண்கள் பத்திரிகைகள் அல்லது பெண்கள் அமைப்புகள்தான் இப்படியான போட்டிகளை நடத்துவது வழக்கம். ஆனால் 'பான்ட்டஸி' என்ற ஆண்களுக்கான இதழ் ஒன்று நடிகைகளின் அழகுத்தோற்றம் தொடர்பாக வித்தியாசமான கணக்கெடுப்பு ஒன்றை நடத்தி முடிவுகளை வெளியிட்டுள்ளது. இந்திய நடிகைகளில் முத்தமிடுவதற்கு ஆர்வத்தைத் தூண்டும் அளவுக்குக் கவர்ச்சியான, அசத்தலான தோற்றம் கொண்டவர் யார் என்பதே அந்தக் கணக்கெடுப்பு.

இவர்களில் பிரபல ஹிந்தி நடிகையான 28 வயதுடைய ப்ரியங்கா சோப்ரா அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றுள்ளார்.

''அவருடைய உதடுகள் மிகவும் அழகாக உள்ளன, அவற்றைப் பார்த்த உடனேயே முத்தம் கொடுக்க வேண்டும் என்று ஆர்வத்தை தூண்டுகின்றது'' - என்று பெரும்பாலான ஆண்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

ஐஸ்வர்யா ராய் 2ஆவது இடத்தையும், கரீனா கபூர் 3ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். நடிகை பிபாஷா பாசு 4ஆவது இடத்திலும், கத்ரினா கைப் 5ஆவது இடத்திலும், சோனம் கபூர் 6ஆவது இடத்திலும், மல்லிகா ஷெராவத் 7ஆவது இடத்திலும் உள்ளனர். தீபிகா படுகோன், ஜெனிலியா முறையே 8ஆவது மற்றும் 9ஆவது இடத்தைப் பெற்றுள்ளனர்.

அசினுக்கு கடைசி இடம் கிடைத்துள்ளது.





உத்தமபுத்திரன்
தனுஷ் - ஜெனிலியா



# சாதனைகளை முறியடிக்கிறது எந்திரன்

எந்திரன் திரைப்படம் ஒரு வாரத்தில் இந்தியா முழுவதும் ரூ.117 கோடி வசூல் செய்துள்ளது. தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய 3 மொழிகளில் உலகம் முழுவதும் எந்திரன் திரைப்படம் கடந்த 1ஆம் திகதி வெளியானது. சுமார் 2 ஆயிரம் திரையரங்குகளில் படம் திரையிடப்பட்டது. எந்திரன் படம் தமிழகத்தில் மட்டும் ரூ.60 கோடி வசூல் சாதனை செய்துள்ளது. ஆந்திராவில் ரூ.30 கோடியும், கர்நாடகாவில் 8 கோடியும், கேரளாவில் 4 கோடியும், வட இந்தியா முழுவதும் ரூ.15 கோடியும் வசூல் செய்துள்ளது. இதற்கு முன்னதாக சல்மான் கான் நடித்த 'தபாங்' திரைப்படம் ஒரு வாரத்தில் ரூ.87 கோடி வசூல் செய்தது தான் சாதனையாக இருந்தது. இந்தச் சாதனையை எந்திரன் முறியடித்துள்ளது. மேலும் 'தபாங்' திரைப்படம் 2 வாரத்தில் ரூ.117 கோடி வசூல் செய்த சாதனையை எந்திரன் படம் ஒரு வாரத்திலேயே முறியடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எந்திரன் படத்தை திரும்பத் திரும்பப் பார்க்கும் ரசிகர்கள் இருப்பதால் பல படங்களின் வசூல் சாதனையை எந்திரன் முறியடிக்கும் என்பதில் சந்தேகமில்லை.



# இயக்குநர் சங்கருக்கு பாராட்டு

''இந்தியாவின் அவதார் எந்திரன் என்றால் மிகையல்ல'' - இப்படி இயக்குநர் கே.பாலச்சந்தர் கூறியுள்ளார். ரஜினி நடித்து வெளியாகியுள்ள எந்திரன் படம் பார்த்த பின்னர் அப்படத்தின் இயக்குநர் ஷங்கரைப் பாராட்டி இயக்குநர் கே.பாலச்சந்தர் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

ஒருவேளை இந்தியாவின் முன்னணி நடிகர் ரஜினி, முதல்நிலை நாயகி ஐஸ்வர்யா ராய், ஏராளமான வாய்ப்பு வசதிகள் என அனைத்தையும் என்னிடம் கொடுத்து படமெடுக்கச் சொல்லியிருந்தால்கூட எந்திரனைப் போன்ற ஒரு படைப்பை என்னால் தந்திருக்க முடியாது. ரசிகர்கள் கைத்தட்டும் விதமாக ஒரு படம் வேண்டுமானால் கொடுத்திருப்பேன். ஆனால் இப்படி ஓர் உலக சினிமாவை தந்திருக்க முடியாது. கத்தியின் மேல் நடப்பதைப் போல, மிகத் திறமையாக சமன் செய்து இந்தப் படத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். ரஜினியை நான்தான் அறிமுகப்படுத்தினேன், நடிகராக்கினேன். இன்னும் சில இயக்குநர்கள் அவரை நாயகனாக்கினார்கள். மணிரத்னமும் சுரேஷ் கிருஷ்ணாவும் அவரை பெரிய பொது நாயகனாக்கினார்கள். ஆனால், சினிமாவின் பன்முகப் பரிமாணங்களிலும் ஜொலிப்பவராக நீங்கள் ரஜினியை மாற்றியுள்ளீர்கள். உங்கள் எந்திரனுக்கு தலை வணங்குகிறேன்.

எந்திரனை இந்தியாவின் அவதார் என்றும், உங்களை இந்தியாவின் ஜேம்ஸ் கேமரூன் என்றும், சன் பிக்சர்ஸை இந்தியாவின் எம்.ஜி.எம். என்றும் கூறுவதில் மிகையொன்றுமில்லை என்றே நினைக்கிறேன். - இப்படி அந்தக் கடிதத்தை எழுதியுள்ளார். இந்தக் கடிதம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள இயக்குநர் ஷங்கர், 'என் வாழ்க்கையில் நான் பெற்ற முக்கிய பாராட்டு இது' - என்றார்.

# சிறுத்தையில் நடிக்கிறார் கார்த்தி

ஸ்டூடியோ க்ரீன் நிறுவனத்துக்கு கார்த்தி மேல் அளவில்லாத நம்பிக்கையிருக்கிறது. ஏற்கனவே அவரை வைத்துப் 'பருத்தி வீரன்', 'நான் மகான் அல்ல' ஆகிய படங்களைத் தயாரித்த நிறுவனம் மீண்டும் அவரை வைத்து சிறுத்தை என்னும் படத்தைத் தயாரிக்க இருக்கிறது. இரட்டை வேடத்தில் கார்த்தியை முதன் முதலில் நடிக்க வைத்த பெருமையை 'சிறுத்தை' பட இயக்குநர் சிவா தட்டிச்செல்கிறார். களவுசெய்யும் வேடம், படித்த இளைஞர் வேடம் என இரண்டிலும் கார்த்தி சிறப்பாக நடிப்பார் என இயக்குநர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# காம்னா நடிக்கும் 'காசேதான் கடவுளடா'

[illegible]




# ஒல்லியாக மாறிய சமீரா ரெட்டி

'வாரணம் ஆயிரம்' படத்தில் குண்டாக இருந்த சமீரா ரெட்டி, 'அசல்' படத்தில் மெலிந்து காணப்பட்டாலும், தற்போது ஆச்சரியப்படும் அளவுக்கு மெலிந்துவிட்டார்.

இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு:-

கௌதம் இயக்கத்தில் நடித்த 'நடுநிசி நாய்கள்' படப்பிடிப்பு முடிந்துவிட்டது. அடுத்து ப்ரியதர்ஷனின் இயக்கத்தில் நடிக்கிறேன். அந்த வேடத்துக்கு இப்போதைய என[illegible]லிய தோற்றம் பொருத்தமாக அமைந்துவிட்டது. ஹிந்தி படப்பிடிப்புக்காக லண்டன் செல்லவிருக்கிறேன். இப் படத்தில் 'பைக்' ஓடும் காட்சி வருவதால் 'பைக்' ஓடப்பழகி இருக்கிறேன். நான் அசைவப்பிரியை. மட்டன், சிக்கன் என வெளுத்துக்கட்டுவேன். இப்போது சுத்த சைவப்பிரியை ஆகிவிட்டேன். இந்த மாற்றத்துக்குக் காரணம் என்ன என்று சொல்ல முடியவில்லை. அத்துடன் யோகா செய்வதையும் தினசரி பயிற்சி ஆக்கிக் கொண்டிருக்கிறேன். இதனால் எனது உடல் ஆரோக்கியத்தில் புதிய மாற்றத்தையும் எனக்குள் புதுவேகம் ஏற்பட்டிருப்பதையும் என்னால் உணர முடிகிறது.

-இப்படி அவர் தெரிவித்தார்.


ரஸியா ஸுல்தானா
01
புத்தாக்கம் : கே.கான்
ரஸியா ஸுல்தானா
இது வரை ஒரு பெண் டில்லி சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறாள். அவள் தான் ரஸியா சுல்தானா. அவள் அடிமை வம்ச அரசர் சம்சுத்தீன் இல்துமிஷ் என்ற பாதுஷாவின் மகள்.
02
ஸுல்தான் இல்துமிஷ் 1236 இல் சிந்து பகுதியில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்கிவிட்டு தனது வெற்றிப் படையுடன் டில்லி திரும்பினார்.
அல்லாஹ்வுக்கு சர்வ புகழும் என் தலைவா!
வெற்றியென்றால் கிடைத்தது. ஆனால், இந்தப் படையெடுப்பு எம்மை மிகவும் களைப்படையச் செய்துவிட்டது.
இறைவன் அருள் புரியட்டும், நாதா! உங்களுக்குச் சுகவீனம் போல் தெரிகிறது. வைத்தியரை அழைக்கட்டுமா?
அது பிறகு ஷாஹ் துர்க்கான். முதலில் சில முக்கிய வேலைகளைச் செய்யவேண்டியுள்ளது. தாஜுத்தீனை வரச் சொல்.
தாஜுத்தீன் அவருக்கு விசுவாசமான மந்திரி
03
தாஜுத்தீன், நாம் ரஸியாவை எமது வாரிசாக நியமிக்கத் தீர்மானித்திருக்கிறோம்.
மரண சாசனம் எழுத ஏற்பாடு செய்யுங்கள். ஆனால், எவரிடமும் சொல்லாதீர்கள். நாம் இறந்த பிறகு அதனை தர்பாரில் படித்துக் காட்டுங்கள்.
கட்டளை!
மன்னித்துக் கொள்ளுங்கள் என் நாதா. ருக்னுத்தீன், சம்சுத்தீன் ஆகியோர்....?
அவர்கள் வாலிப மயக்கத்தில் மூழ்கிப்போயிருக்கிறார்கள். ராஜ்யத்தை அவர்களிடம் ஒப்படைக்க முடியாது.
29 ஏப்ரல் 1236 இல் அடிமை வம்சத்தைச் சேர்ந்த மகத்தான ஆட்சியாளர் இல்துமிஷ் மரணமடைந்தார்.
ஸுல்தான் அல்லாஹ்வுக்குப் பிரியமானவராக ஆகிவிட்டார்.
04
இறுதிச் சடங்குகளுக்குப் பிறகு தாஜுத்தீன் நாற்பது தலைவர்களுக்கு முன்னால் மரணசாசனத்தை வாசித்துக் காட்டினார்.
தலைவர்கள் கோபமடைந்தார்கள். அவர்கள் சார்பாக நிஸாமுல் முல்க் (பிரதமர்) குரல் எழுப்பினார்.
பாதுஷாஹ் எப்படி இந்த முடிவை எடுத்தார்?
ஒரு பெண் ஆட்சிசெய்வதில் எமக்கு விருப்பமில்லை
அயாஸ், இளவரசி மிகச் சிறந்த அரசியாக இருக்கலாம். ஸுல்தான் குவாலியர் சென்றிருந்தபோது அவர் எவ்வளவு நன்றாக ஆட்சி செய்தார்!
(தொடரும்)




# ரசீதின் மனம் மாறியது

கமாலுக்கு அவனுடைய மாமா டில்லியில் இருந்து அழகான இரு சோடிச் சப்பாத்து வாங்கி வந்தார். வகுப்பேற்றப் பரீட்சையில் அவன் முதலாவதாக வந்தற்காகவே இந்தப் பரிசு.

ஒருநாள் கமால் தன்னுடைய புதிய சப்பாத்துகளை அணிந்துகெண்டு புதிய வகுப்புக்கு வந்தான், இது அவனது வகுப்பு மாணவனான ரசீதின் பொறாமையைக் கிளறியது.

ஒரு நாள் வகுப்பாசிரியர் மாணவர்களைக் கார் திருத்தும் கராஜுக்குக் கூட்டிச் சென்றார், மோட்டர் வாகனங்களின் முக்கிய பாகங்களை மாணவர்களுக்குக் காட்டிக் கொண்டிருந்தார். கார்களுக்கு ஊற்றும் எண்ணெயும் அங்கே இருந்தது. ரசீத் திடீரென தனது காலால் எண்ணெய் வாளியைத் தட்டிவிட்டான். அந்த எண்ணெய் கமாலின் ஒரு சப்பாத்தில் விழுந்து அதைக் கறுப்பு நிறமாக்கிவிட்டது. தற்செயலாக எண்ணெய் சப்பாத்தில் கொட்டிவிட்டதாகவே எல்லோரும் நினைத்தனர். ஆனால், கமாலுக்கு அது யார் செய்த வேலை என்று தெரியும்.

மறுநாள் கமால் சப்பாத்துக்களை நன்கு கழுவி மினுமினுப்பாக்கிக் கொண்டு வகுப்புக்கு வந்திருந்தான். ரசீத் சப்பாத்துக்களைப் பார்ப்பதைக் கமால் கண்டான். ஆனால், அவனோடு சண்டைக்குப் போகவில்லை.

இன்னுமொரு நாள் ரசீத் வயிற்றுவலி என்று கூறி நேரத்தோடு வீட்டுக்குப் போய்விட்டான்.

ஆனால், அவன் பாடசாலைக்குப் பக்கத்திலிருந்த பெரிய மரமொன்றுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்தான். அவனுடைய கையில் கற்கள் இருந்தன. கமால் பாடசாலையைவிட்டு வெளியே வரும்போது கல் ஒன்று அவனுடைய தலையில் பட்டது. இதனால் அவனுடைய தலையில் காயம் ஏற்பட்டது. கமால் திரும்பிப் பார்த்தபோது தூரத்தில் ரசீத் ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டான்.

இம்முறையும் கமால் பொறுமையாக இருந்தான்.

ஒருநாள் பாரூக் என்ற மாணவன் தன்னுடைய அக்காவின் திருமண வைபவத்தை முன்னிட்டு வகுப்பு மாணவர்களை அழைத்து விருந்து வைத்தான். விருந்து முடிந்ததும் எல்லோரும் பாட்டுப் பாடினார்கள். பின்னர் மகிழ்ச்சியோடு அரட்டையடித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது கமால் தன்னுடைய காற்சட்டைப் பை பாரமாக இருப்பதை உணர்ந்தான்.

அவன் கால் சட்டைப் பையில் கையை விடும் சமயம் பார்த்து, ரசீத் ஓடோடிச் சென்றான்.

இதற்குள் கமால் சட்டைப் பையில் இருந்து ஒரு வாழைப் பழத்தை வெளியே எடுத்தான்.

''எல்லோரும் பாருங்க. கமால் நல்லாத் தின்றுவிட்டு வீட்டுக்கு எடுத்துச் செல்ல ஒரு பழத்தையும் பைக்குள் போட்டுக்கொண்டிருக்கிறான்!'' என்று கூறி அவனைக் கேலி செய்தான் ரசீத்.

எல்லா மாணவர்களும் விழுந்து விழுந்து சிரித்தனர். ''இதை நான் எடுக்கவில்லை; யாரோ போட்டிருக்கிறார் கள்'' என்று கூறி அழுதுவிட்டான் கமால்.

பின்பொரு நாள் கமால் தன்னுடைய வீட்டில் எல்லா மாணவர்களுக்கும் ஒரு சிற்றுண்டி வைபவத்தை ஏற்பாடு செய்தான். ரசீதும் அதற்கு வந்திருந்தான்.

மாணவர்கள் விடை பெற்றுச் சொல்லும் போது கமால் ரசீதைத் தனியாக அழைத்து. தன்னிடமிருந்த மற்றைய சோடிச் சப்பாத்தை அவனுக்கு அன்பளிப்புச் செய்தான்.

அதைப் பெற்றுக் கொண்ட ரசீத் அழுதவாறு ''என்னை மன்னிச்சிக் கோ!'' என்று கூறி ஏங்கியேங்கி அழுதான்.

கண்ணீர் அவன் மனதிலிருந்த அழுக்கைத் துடைத்துவிட்டதைக் கண்டு மனம் மகிழ்ந்தான் கமால். ✱

## தப்பிய கோழிக்குஞ்சு

முழிச்சு முழிச்சுப் பார்க்குதம்மா
முட்டைக்குள்ளே கோழிக்குஞ்சு!
திருட்டு முழி முழிக்குதம்மா
சாம்பல் நிறப் பூனைக்குட்டி!

வெளியில் வர நடுங்குதம்மா
வெள்ளைப் பிஞ்சுக் கோழிக்குஞ்சு!
நெளிந்து நெளிந்து நகருதம்மா
நேரம் பார்க்கும் பூனைக்குட்டி!

'விய்யாவ், விய்யாவ்,
விய்யா'வென்று
வெடவெடக்கும் கோழிக்குஞ்சு!
'மிய்யாவ், மிய்யாவ்,
மிய்யா'வென்று
மிரட்டிப் பார்க்கும் பூனைக்குட்டி!

அழுகுரலைக் கேட்டவுடன்
அன்னைக்கோழி வந்ததம்மா!
விழுங்க வந்த பூனைக்குட்டி
வழியில்லாமல் சென்றதம்மா!

-ப. சுப்பையா-



## உண்மைக் கதைகள்

### பெரிய யானைகளின் அறிவு

ஆப்பிரிக்கா காடொன்றில் ஒரு யானைக் கூட்டம் வாழ்ந்து வந்தது. தீனிக்குத் தேவையான செடிகொடிகள் அங்கே நிறைய இருந்தன. ஆனாலும் அங்கே ஓடிய சிற்றோடையில் போதிய அளவு நீர் இல்லை. யானை குளிக்கவும் குடிக்கவும் நிறைய நீர் தேவை. ஓடை நீர் போதவில்லை. என்ன செய்வது? வேறு ஒரு காட்டில் குடியேறுவதா? யானைகள் எல்லாமாகச் சேர்ந்து ஓடையின் குறுக்கே ஒரு பெரிய அணை கட்டி விட்டன. ஓடி வரும் நீர் எல்லாம் அங்கேயே தங்கி விட்டது. யானைகள் அமிழ்ந்து குளிக்க வசதியான நீர்நிலை ஏற்பட்டுவிட்டது. ✱

யானையைப் பிடிக்கச் சாதாரணமாக வேடர்கள் ஒரு தந்திரம் செய்வார்கள். யானைக் கூட்டம் வரும் வழியில் தரையில் பெரும் பள்ளம் தோண்டுவார்கள். விறகு, மூங்கில் கழிகளால் மூடி அதன் மேல் மண்ணைத் தூவி அங்கு பள்ளம் இருப்பது தெரியாதபடி செய்து விடுவார்கள். அவ்வழியே வரும் யானை, பள்ளம் இருப்பது தெரியாமல் காலை வைக்கும்; பாரம் தாங்காமல் கழி முறியும்; யானை பள்ளத்தில் சிறைப்படும்.

இவ்வாறு ஒரு காட்டில் வேடர்கள் வெட்டிய பள்ளம் ஒன்று இருந்தது. அவ்வழியே யானைக் கூட்டம் வந்தது. அனுபவம் மிக்க பெரிய யானைகள் பள்ளத்தில் விழாமல் தப்பின. ஒரு குட்டி



யானை மட்டும் தெரியாத்தனமாய்ப் பள்ளத்தில் விழுந்து விட்டது.

உடனே யானைக்கூட்டம் பள்ளத்தைச் சூழ்ந்து கொண்டது. குட்டி யானையை விடுவிக்க என்ன வழி என்று யானைகள் யோசித்தன. பிறகு எல்லாமாகச் சேர்ந்து பள்ளத்துக்குள்ளே மண்ணைச் சரித்தன. பள்ளத்தில் மண் சேரச் சேரச் குட்டி யானை மேலே மேலே வந்தது. பிறகு எல்லா யானைகளும் தம் துதிக்கையால் யானைக் குட்டியை உயரத் தூக்கி விட்டன.

அன்று யானைக்குட்டி ஒரு கண்டத்திலிருந்து பிழைத்தது. ✱

## உத்தரவாதம்

கடுமையான மின்னல் தாக்கத்தில் மாடொன்று இறக்க, தென்னை மரம் ஒன்று தீப்பற்றி எரியத்துவங்கியது. பக்கத்திருந்த வீடுகளிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. ஒரு சில வீடுகளில் பொருத்தியிருந்த மின்குமிழ்கள், மின்விசிறிகள், ட்ரிப் ஸ்விட்சுகள் அத்தனையும் செயலிழந்து போயின.

வீட்டு உரிமையாளர் ஒருவர் தனது வீட்டு ட்ரிப் ஸ்விட்ச் செயலிழந்திருப்பதைக் கண்டதும், அதை எடுத்துக்கொண்டு வாங்கிய கடைக்குச் சென்றார்.

''என்ன முதலாளி, நீங்கள் தந்த ட்ரிப் ஸ்விட்ச் அஞ்சு வருசம் உத்தரவாதம் என்று சொன்னீங்க. எடுத்து ஒரு வருசமும் இல்ல. நல்லதென்று சொல்லித் தந்தீங்க. மின்னலுக்கு அடிபட்டுப் போனதே. இப்ப வீட்டில் ரெண்டும் இல்ல; ஒரே இருட்டு; எனக்கு புதிய ட்ரிப் ஸ்விட்ச் ஒன்று தாங்க, இல்லாட்டி பணத்தைத்திருப்பித் தாங்க'' என்று கோபத்தோடும் கடுகடுப்போடும் கூறியபடி ஸ்விட்ச்சை அவரது மேசையில் வைத்தார்.



கடை முதலாளி நிதானமாகவும் அமைதியாகவும் அவரை அணுகி ''இறைவனால் படைக்கப்பட்ட மனிதனுக்கே உத்தரவாதம் இல்லை என்றிருக்கும் போது மனிதனால் படைக்கப்பட்ட பொருளுக்கு மனிதனால் எப்படி உத்தரவாதம் கொடுக்க முடியும்? இது இறைவனின் செயல். இறைவனோடு போட்டி போட இந்த வையகத்தில் யாருமில்லை. போட்டி போட்டு ஜெயித்தவர்களுமில்லை'' என்று கூறி, இலவசமாக புது ட்ரிப் ஸ்விட்ச் ஒன்றைக்கொடுத்தார்.

இறைவனோடு போட்டிபோட யாராலும் முடியாதுதான். அவனுடைய வல்லமையே வல்லமை என்று சிந்தித்தபடி வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார், அவர்.

- திஹாரிய முப்லி -

# கேள்வி நேரம்

**தேரை கல்லுக்குள் இருக்குமென்று கூறுகிறார்களே.. அதற்குக் காரணம் என்ன?**

குளிர் மிகுந்த நாடுகளிலுள்ள மிருகங்களில் பல குளிர் காலத்தில் நடமாடித் திரியாமல் தூங்கிப் போகின்றன. அவை இரை உண்பதில்லை. அதற்குத்தக்கதாக அவற்றின் உறுப்புக்கள் சில மாறுதல்கள் அடைந்து விடுகின்றன.

அப்படித் தூங்கும் காலம் வருவதற்கு முன் உடம்பில் சேகரமாகும் கொழுப்பைத்தான் உடம்பு, அது தூங்கும் காலத்தில் தனக்கு வேண்டிய உணவாக உபயோகித்துக் கொள்கிறது. அதனால் அந்த மிருகம் மறுபடியும் நடமாட ஆரம்பிக்கும் பொழுது மூன்றில் ஒரு பங்கு எடையை இழந்து விடுகிறது.

அது உணவு உண்ணாததால் அதன் மூச்சும் மிகவும் மெதுவாகவே நடைபெறும். இருதயம் வேலைசெய்வதாகக் கூடக் கூற முடியாது. அதன் துடிப்பு அவ்வளவு மெதுவாக இருக்கும்.

இந்த மாதிரி உறங்கும் பிராணிகளுள் ஒன்று தேரை. அது பாறைகளுக்கு அடியில் போய்ப் பதுங்கிக் கொண்டு தூங்கும்: அவ்வளவுதான். அதைக் கொண்டு தேரை கல்லினுள் இருக்கும் என்று கூறுவது தவறு.

**கண்காட்சியில் மீன்களை வைத்திருக்கும் கண்ணாடித் தொட்டியில் செடிகளையும் வளர்க்கிறார்களே, அதற்குக் காரணம் என்ன?**

மீன்கள் தண்ணீரில்தான் வாழ முடியும். அதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் எந்தப்பிராணியும் காற்றிலுள்ள ஒட்சிசன் வாயு இல்லாமல் உயிருடன் இருக்க முடியாது. அது போல் மீன்களுக்கும் ஒட்சிசன் வாயு வேண்டுமே அது அவை எப்படிப் பொறுகின்றன? தண்ணீரிலிருந்து தான். காற்று தண்ணீரின் மீது வீசும்போது ஓரளவு தண்ணீரில் கரைந்துவிடுகிறது. அந்தக் காற்றை மீன் கிரகித்துக் கொள்கிறது.

ஆனால் கண்காட்சியில் வைத்துள்ள தொட்டியிலுள்ள தண்ணீரில் காற்று கரையமுடியாது. அதற்காகத்தான் தண்ணீரின் அடியில் வளரக்கூடிய செடிகளை நட்டு வைக்கிறார்கள். மீன் வெளியிடும் காபனீரொட்சைட் வாயு தண்ணீரில் கரையும். அப்படிக் கரைந்த காபனீரொட்சைட்டை அந்தச் செடிகள் கிரகித்து அதிலுள்ள காபனை எடுத்துக் கொண்டு வெளியேற்றும் ஒட்சிசன் வாயுவை மீன்கள் சுவாசித்து உயிர்வாழ்ந்து வருகின்றன. இவ்வாறு மீனும் செடியும் பரஸ்பரம் உதவி செய்து கொள்கின்றன. ✱



கடந்த செப்டெம்பர் 25 ஆம் திகதி தஞ்சைப் பெரிய கோயிலின் 1000 ஆம் ஆண்டு நிறைவு விழா தமிழக முதல்வர் மு. கருணாநிதியின் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் ஆயிரம் பரத நாட்டியக் கலைஞர்கள் பங்கேற்ற பரதநாட்டிய நிகழ்வு இடம்பெற்றது. அனைத்திந்திய பரதநாட்டியக் கலைஞர்கள் சங்கத்தின் தலைவர் டாக்டர் பத்மா சுப்பிரமணியத்தின் நெறியாள்கையில் நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கையில் இருந்து சென்ற நாட்டிய கலாமந்திர் நாட்டியப்பள்ளி மாணவர்கள் பங்குகொண்டு சிறப்பித்தனர். திருமதி கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனிடம் பரதம் பயின்று 100 ஆவது அரங்கேற்றத்தில் சிறப்புப் பெற்றிருந்த செல்வி பிரண்ணியா ஜெயநாயகமும் படத்தில் காணப்படுகிறார்.



# ரோபோ மீன்

கடல் அசுத்தங்களைக் கண்டுபிடிப்பதற்கான கருவியை எம்.ஐ.டி. நிறுவனம் தயாரித்துள்ளது. கடலில் நீண்ட தூரம் பயணம் செய்யும் கப்பல்களிலிருந்து குறிப்பாக எண்ணெய்க் கப்பல்களிலிருந்து எண்ணெய்க் கசிவு ஏற்பட்டு அது கடலில் அசுத்தங்களை ஏற்படுத்தி கடல்வாழ் உயிரினங்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றது.

கடலில் இதுபோன்ற அசுத்தங்களைக் கண்டு பிடிப்பதற்காக கருவியான ரோபோ மீனை எம்.ஐ.டி. நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த ரோபோ மீனில் விசேடமான சென்ஸர்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதனூடாக கடலில் எங்கே மாசு படிந்திருக்கின்றது?, எண்ணெய்க் கசிவு ஏற்பட்டிருக்கின்றது? என்பனவற்றை துல்லியமாகக் கண்டுபிடிக்கலாம் என்கின்றார்கள் விஞ்ஞானிகள்.

# புதிய குயீன் எலிசபெத்



பிரிட்டிஷ் எலிசபெத் மகாராணியால் 40 கோடி பவுண்ஸ் பெறுமதியான குயீன் எலிச்பெத் என்ற பயணிகள் கப்பல் இம்மாதம் 11 ஆம் திகதி வெள்ளோட்டத்துக்கு விடப்பட்டுள்ளது.

964 அடி நீளமான இக்கப்பல் 2068 பயணிகளையும், 996 மாலுமிகளையும் ஏற்றக்கூடியது. இக் கப்பலுக்கான பயண டிக்கட்டுக்கள் 18 மாதங்களுக்கு முன்பே இணையத்தின் மூலம் 29 நிமிடம் 29 செக்கனில் விற்றுத் தீர்க்கப்பட்டுவிட்டனவாம்.

16 தட்டுக்களைக் கொண்ட இக்கப்பலில் 832 பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய திரையரங்கு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இக் கப்பல் தனது முதலாவது பயணத்தை போர்த்துக்கல் நாட்டை நோக்கி ஆரம்பித்துள்ளது.(பா)








யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை உறுப்பினர்கள் கடந்த மாதப் பிற்பகுதியில் யாழ்ப்பாணம் விஜயம் செய்தனர். கடந்த 25 ஆம் திகதி இவர்கள் வேம்படி மகளிர் கல்லூரிக்கு விஜயம் செய்து ஆரிரியைகள், மாணவிகளைச் சந்தித்தனர். அங்கு இடம்பெற்ற நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர். 1934 ஆம் ஆண்டு தொடக்கம் வேம்படி மகளிர் கல்லூரியின் வரலாற்றை விளக்கும் வில்லுப் பாட்டு நிகழ்ச்சி ஒன்றையும் இவர்கள் அரங்கேற்றி ஆசிரியைகளையும் மாணவிகளையும் வியக்க வைத்தனர். மாணவிகளின் பரதநாட்டியம், ஆங்கில மொழிப் பாடல் ஆகியவையும் இடம்பெற்றன. கல்லூரியைச் சுற்றிப் பார்த்ததுடன் அதன் தேவைகளையும் இவர்கள் கேட்டறிந்து கொண்டனர்.






இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பொக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2010, ஒக்டோபர் 17 ஆம் திகதி வெளியிடப்பட்டது